# சிருங்கார நாதம்

காஞ்சனா ஜெயதிலகர்



# சிருங்கார நாதம்

## 1

'சக்...சக்...சக்' - என்று வெற்றிலை அதற்கான சின்ன உரலில் பதமாய் நைந்து கொண்டிருந்தது. விரலை விட்டுத் தனக்குத் தோதான பதத்தில் மசிந்திருந்ததா என்று துழாவிய கோதையம்மாள் வழித்து அள்ளி வாயில் அதக்கிக் கொண்டாள்.

முதல் சாறை அருகிருந்த மண்ணிட்ட சிரட்டையில் உமிழ்ந்து விட்டு. பின்னதை ருசித்து விழுங்கியவளின் விழிகள் மூடிய கதவைச் சிறு சலிப்புடன் பார்த்தன. அறைக்குள்ளிருந்து பட்டின் சரசரப்பும் கைவளை சிணுங்கலும் கேட்டன.

"ஏட்டி சாரு... நீ எந்த முகூர்த்தத்துக்குப் போவணும்? நீ போய் சேருறப்ப சாந்தி முகூர்த்தம்தாம் நடந்துட்டு இருக்கும்."

"போங்க பாட்டி..." உள்ளிருந்து சிணுங்கல் வர. அதே செல்லச் சுருதியில் கதவும் திறந்தது.

காரம் குறைந்து போயிருந்த வெற்றிலைச் சக்கையைக் குதப்பிய முதியவள் கண்களை இடுக்கி அலங்கரித்து வந்த தன் பேத்தியை ஆராய்ந்தாள்.

பார்த்த மும்முரத்தில் வாயிலூறிய சிவந்த சாறு கடைவாயில் ஒழுகியது.

உறிஞ்சி இடது கையால் துடைத்துக் கொண்டாள்.

"இந்த 1975ம் வருஷக் குட்டிகளுக்கு எது தெரியுதோ, இல்லையோ அலங்காரம் பண்ண விவரமிருக்கு."

வாய்க்குள் நகைத்தாள் சார்வரி.

"எப்படி... பிடிச்சிருக்கா பாட்டி?"



சொர்ணச் சிலையான 18 வயது சார்வரி எடுப்பாகவே உடுத்தியிருந்தாள். எலுமிச்சை நிறத்தில் கரும்பச்சை ஜரிகைக் கரையிட்ட பட்டுப்பாவாடை தங்கப்புட்டா இட்ட பட்டு ரவிக்கை, நைலக்ஸ் தாவணி. இடுப்பைத்தாண்டித் தழைந்த கூந்தலைப்பாதி வரை பின்னி, பெரிய பட்டாம்பூச்சிபோல இரட்டை முடிச்சிட்டிருந்த மஞ்சள் ரிப்பன். காதில் குடை ஜிமிக்கி, கழுத்தில் கிளிக்கூண்டு டிஸைன் மாலை. கைநிறைய ஜிகினா கண்ணாடி வளைவிகள். விழிகளில் இட்டிருக்கிறாளா இல்லையா எனப் பார்ப்பவர்கள் யோசிக்க வைக்கும் துளி மை. புருவ மத்தியில் சின்னச் சுடராய் சாந்துத் தீறல். அளவாய்ப் பூச்சரம்.

"ஏம்டீ இதெல்லாம் எங்க கத்துத் தராவ?"

"இப்பத்தான் கலர் சினிமா வந்திடுச்சே... அதுல மேட்சிங்கா உடுத்தி வரதைப் பார்த்துத்தான்... இல்லைன்னா நம்ம கீரனூர்ல அலங்காரத்துக்கு காலேஜா இருக்குது?"

"எஸ்.எல்.சி. முடிச்சதுக்கே இந்த பரப்பு பறக்கே... நீ கேட்ட பல காலேசுல சேர்த்து வுட்டிருந்தா..."

"இப்ப பி.யூ.ஸி. முடிச்சிருக்கலாம்..." ஏக்கத்துடன் பதில் வந்தது.

"போதும்டீ... இந்தப் படிப்புக்கே நம் இனத்தில, இங்க மாப்பிள்ளை காணோம்... மேலே படிச்சா உன்னைப் பட்டணத்துப் பிள்ளைக்குக் கட்டி வச்சு தொலைவாய் அனுப்பிட்டு நானிங்க நெஞ்சு பதைக்கக் கிடக்கணும்."

"படிச்சால், நான் இங்கேயே ஒரு வேலை தேடிட்டு உங்ககூடவே இருந்திடுவேன்ல?"

"ஏன்? ஏங்கறேன். நா வெத்திலையை மெல்றாப்பல ஊராரு என்னைய மென்னு துப்பவா? - பேத்திக்குக் கல்யாணம் பண்ணத் துப்பில்லாதவன்னு."

"அதெல்லாம் நாமா நினைச்சுக்கறதுதாம் பாட்டி. அப்படியே பேசினாலும் என்ன? நமக்குச் சரின்னு தோணுனபடி நாம் இருப்போம்." பேச்சோடு, பெயரடித்து வாங்கி வைத்திருந்த

எவர்சில்வர் தூக்குப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டாள் இளையவள்.

பாட்டிக்கு யாரும் தன் வீட்டிற்கு வீசின கையாய் வந்தாலும் ஆகாது -

'வாராம் பாரு. கொள்ளு குத்தின உலக்கையாட்டம்!' - முகம் சுளிப்பாள். யார் வீட்டிற்கும் வெறும் கையாய்ப் போகவும் மாட்டாள்.

"வரட்டுமா, பாட்டி?"

"கல்யாணப் பொண்ணு உன்னைய ஒத்த வயசுக்காரிதானே?"

"ஒரு வயசு மூத்தவ பாட்டி. அத்தை மகளையே கட்டிக்கறா."

"ஹூம்... சொந்தம் பந்தங்க நடுவில் இருந்தோமில்ல... உங்கப்பனுக்குப் புத்தி மட்டு - ஆத்திரக்காரனுல்ல! தன்னைய மதிக்காத மண்ணுல இருக்கக் கூடாதுன்னு கிளம்பிட்டான்... இங்க நிலபுலம் வாங்கிட்டாலும் நம்மை மதிக்கவும் ஆளில்லை, மிதிக்கவும் ஜனமில்லை..."

சார்வரிக்குக் கேட்டுப் பழகிய கதைதான்.

குடும்பத்தின் மூத்தவனான தன் பேச்சை விவசாய, விற்பனை விஷயங்களில் குடும்பம் கேட்காத கோபத்தில் அப்பா தன் பங்கைப் பிரித்தெடுத்துக் கொண்டு அறியாத ஊருக்கு வந்த கதை.

இரண்டாம் பேறுகாலத்தில் மனைவியும் குழந்தையும் இறக்க, யாருமற்ற அனாதை உணர்வில் அப்பா குன்றிவிட்டார். கூடவே பிறந்தது என்றவர் மார்தட்டிய விரைப்பு, வீம்பு எல்லாம் போய் விவேகம் வந்தது. மகளைப் பறிகொடுத்த தன் மாமியாரைத் தன் பெண்ணை, அதாவது அப்போது மூன்று வயதாயிருந்த சார்வரியை வளர்த்தெடுக்க கெஞ்சி வரவழைத்தார்.

தன் மருமகனுடன் அத்தனை இணக்கமற்ற கோதை-யம்மாளும் அதிகம் மிஞ்சாமல் வந்தாள் - கணவர் இறந்தாயிற்று. குருத்தாட்டம் நின்ற பேத்தி மீதுள்ள பாசம் வேறு இழுத்தது.

Uploaded by Naghu



பேத்தியும் பாட்டியுமாய், அம்சமாய் வீட்டை நிறைத்தவர்-களைப் பார்த்த சார்வரியின் தகப்பனுக்கு 'இது போதுமே' என்று தோன்றி விட்டது. மனம் போனபோக்கில் சுற்ற ஆரம்பித்தார்.

அண்டை அசலூர் இல்லை.

வேற்று மாவட்டங்களுக்குக் காலை எட்டிப் போட்டார்.

கேரளாவின் அழகில் கிறங்கி மாமி, மகளை அழைத்துப் போய் அப்பகுமையைக் காட்டினார்.

"யப்பா! இப்படியும் ஒரு செழிப்பா... திரும்பிய புறமெல்லாம் ஆறு, பலாவும் தேக்குமாய்...!"

அங்கு மெல்லிய வேலைப்பாடுடைய குடை ஜிமிக்கி, கைக்கடங்களை வாங்கித் திரும்பினர். ஹைதராபாத்தின் முத்துக்கள் மதுரையில் மும்மடங்கு விலைக்குப் போக, அப்பா போகும் இடங்களில் பிரசித்தமான பொருட்களை வாங்கி, விற்றுப் பிரயாணச் செலவை ஈடுகட்டிக் கொண்டார். இப்போது அனைத்திலும் அவருக்குச் சிரத்தை குறைந்துவிட்டது. கோதையம்மாள் நிலத்தைக் கவனித்ததால் தேவைக்கு மேலாகவே பணம் வரக் குறை ஏதுமில்லை.

சார்வரிக்கு ஏற்ற வரன் அமையாததுதான் இப்போது பெருங்குறை. பள்ளிப் படிப்பையேனும் மகள் முடித்துவிட வேணுமென்று சார்வரியின் அப்பா பிடிவாதம் காட்டியதால், அவள் வயதுக்கு வந்த சூட்டில் வந்த பண்ணை வீட்டு வரன் தகையாமல் போனது.

அதற்கப்புறம் அத்தனை செல்வம் செல்வாக்கான வரன் வரவில்லை.

தொலைபேசி, தினத்துக்கு பஸ், ரயில் என்ற வசதிகள் கிராமங்களை அணுகாத அம்மக்கள் தங்கள் பெண் குழந்தைகளைச் சற்று தொலைவிற்கு அனுப்ப யோசித்தனர்.

"ந்தா... சாரு! கல்யாண வீட்டுல முத பந்தியில சாப்பிட்டுவிட்டு வந்து சேரு... நின்னு ஆடாதே."

"ஏம்பாட்டி... அப்படித்தான் ஆடறேனாக்கும்!"

தலைசாய்த்து குறைப்பட்ட பேத்தியை வாஞ்சையாய்ப் பார்த்தாள் முதியவள்.

"இல்லதான்...ஆனாலும் சிநேகிதிமாரைக் கண்டா எகிறிடும்டீ... கிளுகிளுன்னு சதா சிரிப்பீகளே!"

"எல்லாரையும் நம்ப வீட்டுக்குக் கூட்டிட்டு வந்துடவா?"

"அதுசரி... கிளம்பு... நேரமாச்சு."

"ரஞ்சிதம் வரவும் அவளோட சேர்ந்து போறேன்."

"அவளோடவா... வேணாம்டீ... உனக்கு ரெட்டையாக் கண்ணு விழும்!"

சார்வரி வாய்விட்டுச் சிரித்தாள். பாட்டி திட்டுவாளே என்று அவசரமாய் வாய் மூடிக் குலுங்கினாள்.

"ரஞ்சிதம் கேட்டால் உங்களைத் துகையலாய் அரைச்சிடுவா."

"முதல்ல அவ பல்லை ராவிக்கச் சொல்லு. இப்பதான் டவுனில பல்லுக்கு டாக்டருக வந்தாச்சாமே!"

"ரஞ்சி வந்துட்டா... வரோம் பாட்டி."

சார்வரி துள்ளலுடன் வாசலுக்குப் போனாள்.

தன் துருத்திய பற்களைப் பற்றிக் கவலையே இன்றி வாயாரச் சிரித்தாள் ரஞ்சிதம்.

"என்ன சாரு, அட்டகாசமாயிருக்க! கையில் என்ன?"

கேள்வியோடு கோலமிழைத்த கல்படிகளில் ஏறி மரத்தூணில் சாய்ந்து நின்றாள்.

"பரிசாய்த் தர வாங்கினேன் - சாயாதே - கிளம்பு... சாப்பிட்டதும் நம்ப செட் எல்லாருமாய் இங்க வந்துடலாம்..."

"அவளுங்க வேற திட்டம் போட்டாச்சு போல..."

"என்ன - ரவிசந்திரன் நடிச்ச படம் பார்க்கன்னா?"

"ஏய்!" உற்சாகமாய்க் கத்தினாள் ரஞ்சிதம் -



"உஷ்... பாட்டி..." உள்புறம் சைகை காட்டியவள் சிநேகிதியை இழுத்துக் கிளப்பினாள்.

"இப்ப சொல்லு."

"ஒரு விஷயம்டீ... ரவிசந்திரன் நம்ப ஊர் வர வேண்டியது... ம்ப்ச்."

"அதுக்கேன் அலுத்துக்கறே?"

"வரலியே - சிங்க முக அரண்மனை இருக்குதுல்ல?"

"கேள்விப்பட்டதுதான் - பார்த்ததில்லை."

"ஒருநாள் போய்ப் பார்க்கணும்டீ சாரு - அத்தனை அற்புதமாயிருக்குமாம் - இங்கேருந்து 15 மைலு இருக்கலாம். அந்த அரண்மனையில ஷூட்டிங் வச்சுக்கலாம்னு டைரக்டர் வந்து கேட்டாராம்."

"ஓஹோ?"

"அரண்மனையில இன்னும் ஜமீன் வம்சத்தார் இருக்காங்களாம். அவுங்க மறுத்தாச்சாம் - ஒரு நாளைக்கு ஆயிரம், ரெண்டாயிரம் தர்றோம்னா,

'இது பவித்ரமான இடம் - பாழாக்காதீங்க'ன்னுட்டாங்களாம். ஷூட்டிங் இருந்திருந்தா நாமும் போயி ரவிசந்திரனோட டான்ஸ், ஃபைட்டுல்லாம் பார்த்திருக்கலாம்."

"ஒருநாள் நல்லம்மாக்கா வண்டியக் கேட்டு எல்லாருமாய் போய் அரண்மனையைப் பார்ப்போம்... ஆனா நம்மை உள்ளே விடுவாங்களா?"

"உன் அழகுக்கு உன்னைய அங்க பிடிச்சே வச்சுக்குவாங்க." பகபகவெனச் சிரித்தாள் ரஞ்சிதம்.

சார்வரிக்குள் ஏனோ படபடத்தது.

Uploaded by Naghu

## 2

எம்.ஜி.ஆரின் காதல் பாடல்களை மைக்செட்டின் வழியே ஊரே கேட்டது. வாழை, கமுகு, மாவிலைத் தோரணம், செம்மண் கோலங்கள், விளக்குகளுடன் கல்யாண வீடு களையாய்த் தோன்றியது. உள்ளும் வெளியேயும் ஜனங்கள் திரண்டு புரள, பெருமிதமாயும் நின்றது.

"ஏன்டி இத்தனை நேரங் கழிச்சு வர்ரே?"

தோழிகளின் ஊடே போய் அமரவும் துடுக்காய்க் கேட்டார்கள்.

"பெரியவங்கதான் பெண்ணை அலங்கரிக்கனும்... முந்தி வந்து எதுக்குன்னுதான்..."

"உன்னையே அலங்கரிச்சுக்கிட்டியாக்கும்...!"

"சார்வரி சாதாரணமா வந்தாலே அழகுதான். இப்ப நடிகை எல்.விஜயலட்சுமியாட்டம், பொம்மையாட்டம் இருக்கா."

"சரி... நீ ஏன் சுரத்தில்லாம வந்திருக்கே, மாலதி? ஷூட்டிங்க்கு ரவிசந்திரன் வரலைங்கற வருத்தமா?"

"ஆமாண்டி... அந்த அரண்மனை கொடுத்து வைக்கலை. அவரு ஸ்டைலாய் ரெண்டு ஸ்டெப் போட்டு ஆடினால் ஜென்ம சாபல்யம் அடைஞ்சிருக்கும்."

இன்னொருத்தி அடக்கினாள் - "ஷ்... கண்டபடி உளறாத.. அந்த அரண்மனையின் நிஜ ஹீரோ இங்க வந்திருக்கார்."

"யாரு... எங்க?"

பெண்கள் சற்றுப் பரபரத்தார்கள்.

"பட்டு வேட்டி, ஜிப்பாவுல முன் வரிசையில மூணாவதாய் உட்கார்ந்திருக்கறவர்."

"ம்ப்ச்... சரியாய் தெரியலை - சரி, அது யாரு?"

"அவர்தான் இளைய ஜமீன்தார்."



"பக்கத்துல பட்டும் வைரமுமாய் யாருமில்லையே!"

"இனிதான் கல்யாணம் ஆகனும்... சின்ன வயசுக்காரர்..."

"மாப்பிள்ளைக்குச் சொந்தமா? சிநேகமா?"

"வேலை மூலம் பழக்கம் போல. மாப்பிள்ளை வேலை பார்க்கும் உரக் கம்பெனியில் ஜமீன்தாரும் பாகஸ்தராம்."

மணப் பெண்ணின் அக்கா கைக்குழந்தையுடன் இவர்களின் பக்கம் வந்தாள்.

"சாரு... இவளைப் பிடியேன்... அழுது பிடுங்கறா..." சார்வரி கையை நீட்டினாள் - "வாங்கடீ தங்கம்... ஏன் அழறா குட்டி லக்ஷ்மி?"

"லட்டு வேணுமாம்... இந்தா ஸ்டோர் சாவி... ஒன்னு எடுத்துக்கோ. ஆனா துளித் துளியாய் பிய்ச்சு ஊட்டணும்."

"சரிக்கா."

"தாலி கட்டப் போற சமயம்... நின்னு பார்க்க ஆசை.."

"பாருங்க."

"வேற யாருட்டேயும் இவளைவிடவும் மனசில்லை!" குரல் தழைத்து முணங்கிவிட்டு அந்த இளம் தாய் விலக, சாரு குழந்தைக்கு லட்டு பிய்த்துத் தரலானாள். இனிப்பால் பிசுபிசுத்த விரல்களால் அட்சதையும் தூவியவள் எஞ்சிய லட்டைத் தன் வாயிலிட்டுக் கொண்டு, குழந்தையின் வாயைக் கழுவித் துடைத்தாள். தண்ணீரும் தந்து குழந்தையைத் தோளிலிட்டுத் தட்ட, அது அலுப்பில் உறங்கிப் போனது.

ஸ்டோர் சாவியை, குழந்தையை உரியவர்களிடம் சேர்த்தவள் பந்தியில் பரிமாற ஆள் குறைவு என்பது புரிந்ததும் ஒத்தாசையாய் நின்றாள்.

"அப்பளக் கூடையோட நான் நடக்கறேன். நீ விருவிருன்னு எடுத்துப் போடும்மா - கூடை பெருசா... தூக்கியபடி பரிமாற முடியலை..."

என்றவருக்கு உதவினாள்.

குடிநீர் கெட்டில் காலியாக ஆக நிரப்பி நீட்டினாள்.

இடையே 'ரசம் வேணும்'

'ஊறுகாய் வைக்கலை' என்ற குரல்களுக்கு ஓடிப் பரிமாறினாள்.

ஓரமாய் ஒரு மேசை, நாற்காலி போடப்பட்டு, அங்கு அமர்த்தப்பட்ட இளைஞனை அனைவர் கண்களும் மொய்த்தன.

நடுத்தர உயரம், உடல்வாகுதான். ஆனால் அச்சதுர முகத்தின் ஒளி நிரம்பிய கண்களும், சின்ன முறுக்கு மீசையும் அவனை மிடுக்காக்கின.

"இருக்கட்டுமே... எல்லாரோடும் கீழே உட்கார்ந்து..." சங்கோஜப்பட்டவனை உபசரித்தார்கள்.

"ஐயையோ.. நீங்க வந்ததே எங்களுக்குப் பெருமை... ஜமீனை கீழே உட்கார்த்தறதா..."

"டேய் இலை போடு!" - மணப்பெண்ணின் அண்ணன் கத்த, கரித்துணியை உடுத்திய ஒரு பொடியன் இலையோடு வந்தான்.

"ஐயோ... இவனா... சாரு நீ வாங்கிக் கழுவிப் போடம்மா!" யாரோ இவள் கையில் திணித்த இலையை இவள் கழுவி மேசையில் பணிவாய் வைத்தாள்.

"முதல்ல இனிப்புப் பச்சடியை வை."

பார்வைக்குச் சுத்தமும் அழகுமாய் இருந்த சார்வரியைப் பரிமாற வைத்ததில் பெண்வீட்டாருக்குத் திருப்தி.

"சார்வரி, அப்பளம் போடும்மா - வா."

நழுவிய நைலக்ஸ் முந்தானையை இறுகச் செருகியபடி அந்த வேலையில் இறங்கினாலும், ஓரக்கண்ணால் மேஜை மீதிருந்த இலையில் ஏதேது குறைகிறது என்பதையும் அவள் கவனிக்காமல் இல்லை.

கூடவே நாசூக்கும் நாகரீகமுமாய் அவன் உண்டதையும் கவனித்தாள். வர்ணப் பட்டாம்பூச்சியாய்ப் பந்தியின் ஊடாகப் பறந்து



திரிந்த அவளைப் பச்சடி, ஊறுகாய் போல அவனது கண்களும் அவ்வப்போது தொட்டுக் கொண்டன.

அதை அவளும் உணர்ந்திருந்தாள்.

அவன் பார்வை இவளைத் தொட்டபோதெல்லாம் சார்வரி கவனமாய் மறுபக்கம் திரும்பிவிட்டு, அவன் தன்னைப் பார்க்கவில்லை என்று அவள் நினைத்த சமயம் முதலில் அவன் இலையை, அதில் அவனது மென்மையான நீள விரல்களின் நேர்த்தியை, பின் சடுதியாய் அவன் முகத்தையும் ஏறிட்டுப் பின் தனது விழிகளை விலக்கினாள்.

"இலை எடுத்த இடத்தை யாராவது விரைசா பெருக்கித் தள்ளணும் - அப்பதான் மறுபந்திக்கு இலை இடலாம்."

குரல் கேட்க, அவள் அடுத்த வேலையில் இறங்கினாள்.

மேலும் இரு பெண்களோடு பெருக்கி, சிந்திய பருக்கை, குழம்பு, காய்ச் சிதறல்களை எச்சில் இலை கூடைக்குள் தள்ளினாள்.

"சாரும்மா, கூடை சரியுது - ஒரு கைபிடி - சிந்திட்டா மறுபடி வேலை.." என்ற வேலைக்காரப் பெண்ணின் இடுப்பிலிருந்த கூடையைப் பிடித்தபடி உடன் நடந்தாள்.

கொட்டப்படப் போகும் இலைகளுக்காய்க் காத்திருந்தது ஒரு கூட்டம். கண்களில் பசியும் பசியாறும் ஆர்வமுமாய் நின்ற ஏழைக் கூட்டம்.

'உங்களுக்கு மிஞ்சியது எங்களுக்கு!' என்று ஒரு தினுசான சமரசப் பார்வையுடன் அருகே ஒரு குழுவாய் நாய்கள்!

இவளது மனம் இளகியது.

"ஏம்மா சாரு... உனக்கிந்த வேலை?" தெரிந்தவர் ஒருவர் முகம் சுளித்தார்.

ஆக எச்சிலைப் பக்கம் போவதே அருவருக்கத் தக்கதாய் இருக்க, அதைப் பிரித்து, அதில் கலந்து கிடக்கும் மிச்சத்தை வழித்தெடுத்து உண்பது... நினைப்பே கூசியது.. ஆனால்

கூச்சமில்லாத பெரும் ஆர்வத்துடன் இக்கூட்டம் அதற்காய்க் காத்துக் கிடக்கிறதே?

சிலர் கைகள், அலுமினியத் தூக்குச்சட்டிகள் வேறு.

சாரு பதனமாய்க் கூடையை இறக்கினாள்.

"கொஞ்சம் பொறுக்கா. இந்த இடத்தைக் கழுவிட்டு கூடையைப் பதனமாய்ச் சரிக்கலாம்... அவங்க முடிஞ்சதை எடுத்துக்கட்டும்."

மனிதர்கள் பாய்ந்து எச்சிலைகளை அளைவதை, அள்ளுவதைக் காணச் சகியாமல் -

"கொஞ்சம் பொறுத்தால், கடைசிப் பந்தியில் எல்லாரும் உக்காரலாமே!" சொன்னாள்.

"வீசாமல் இப்படி வெச்சதே பெரிசு தாயி... நல்லாயிருக்கணும் நீ..."

அவர்கள் காரியத்தில் இறங்க, பெருமூச்சுடன் விலகினாள்.

ஆனால் பின்கட்டை முழுக்கத் தாண்டுவதற்குள் அந்த ஓலம் அவளைச் சுண்டித் திருப்பியது. வேலைக்காரப் பெண் காலிக் கூடையுடன் போய்விட, இவள் மறுபடி ஓடிப் போய்ப் பார்த்தாள்.

இரண்டு, நான்கு கால் ஜீவன்கள் எல்லோருமாய் முண்டிய பசி வேகத்தில் ஒதுக்கப்பட்ட ஒரு சிறு ஜீவனது ஓலம்தான் அது.

அக்குட்டி நாயின் அருகே இவள் மண்டியிட, அது பயந்து பம்மியது. "அச்சச்சோ... நான் உன்னை ஏதும் பண்ணலையே... உனக்கு இப்பவே மோருஞ் சாதமும் பிணைஞ்சு எடுத்து வரேன்... அழாத..."

இவள் கை நீட்ட, உணவின் மணமிருந்த அம்மிருதுவான கையைக் குட்டி நாய் முகர்ந்து முணங்கியது.

"தோ வரேன்." - சாரு நடக்க, அவள் பின்னே விந்தி விந்தி வந்தது.

"அச்சோ... குட்டிக்கு கால்ல அடியா?"



'ஆமாம்' என்பதாய்த் தன் குச்சி வாலைச் சற்று ஆட்டிச் சொன்னது.

"உள்ள வராத. இங்கயே நில்லு."

அவளது உத்தரவு புரிந்தாற் போல் தென்னைமர நிழலில் ஒண்டிக் காத்திருந்தது.

ஒரு பாத்திரத்தின் மூடியில் சிறிது மோர்சாதத்தைப் பிசைந்து எடுத்து வந்தவள் ஒரு கிழிந்த இலையில் அதை இட்டு வைத்தாள்.

இடைஇடையே இவளை ஒரு நன்றிப் பார்வை பார்த்த குட்டி அவசரமாய்க் கவ்வி விழுங்கியது.

"விக்கிடும், மெள்ள!" இவள் சொல்ல, சன்னமாய் வாலாட்டியபடி கடைசிப் பருக்கையையும் நக்கி நிமிர்ந்தது.

பழுப்பு நிறக் கண்ணாடிக் கண்கள் முழுக்க நன்றியும் ஏக்கமுமாய்த் தன்னையே அது பார்க்க, சார்வரிக்குள் உருகியது.

"சரி.. இங்கேயே இரு... வீட்டுக்குப் போறப்ப உன்னைக் கூட்டிக்கறேன் - சரிதானா?"

குரலின் ஆதூரம் புரிய, அதன் கண்களின் ஒளி கூடியது.

"இப்ப இங்கயே இரு."

கையின் சைகையுடன் திரும்பியவள் எதிலோ... எவரிலோ முட்ட நேர்ந்தது.

"மன்..மன்னிக்கணும்!" தான் மோதியது இளைய ஜமீன் மீது என்று புரிய, பதறினாள்.

"உங்களுக்கு இளகின மனசு.. யாருக்கும் உதவற மனசு.. ம்ம்?"

புன்னகையோடு வந்த பாராட்டில் முகம் சிவந்தாள்.

இவர் இத்தனை நேரம் இங்கா இருந்தார்? அதுவும் இந்தப் பின்கட்டில்...? இவளது சிந்தனை புரிந்ததுபோலப் பேசினான்.

"நீங்க என்னதான் பண்றீங்கன்னு பார்க்க ஒரு ஆசை... ஆக குட்டி நாயை வீட்டுக்குக் கூட்டிட்டுப் போகும் உத்தேசமா?"

"பாட்டி... அவங்களைச் சமாளிச்சுடலாம்..."

பின்வாசலில் பெண்ணின் அண்ணனின் முகம் சற்றுக் கலவரமாய் எட்டிப் பார்த்தது.

"நல்லது செய்றதில் என்னை முந்திக்கிட்டீங்க... இனி மற்றதில் நான் முந்திக்கணும் - வரட்டா?" அவளைத் தீர்க்கமாய்ப் பார்த்தவன், விலகினான்.

## 3

"எனக்குக் கையும் ஓடலை... காலும் ஓடலை..." என்று அங்கலாய்த்த பாட்டியின் கையும் காலும் ஒரு நிமிடமும் ஓயவில்லை!

நாலு நாளு டயம் தந்திருந்தா வீட்டை வெள்ளையே அடிச்சிருப்பேன். இப்படி திடுதிப்புன்னு வர்ரதா?

சலித்த குரலில் கர்வத் தொனி!

சார்வரிக்குள் ஏகக் குழப்பம்.

'சிங்க முக அரண்மனையின் இளைய ராணி உங்களைப் பார்க்க இன்ன தேதி, இன்ன நேரத்தில் வருகிறார்' என்ற தகவல் வந்ததிலிருந்தே அவள் புத்திக்குள் சிறு பிரளயம்தான்.

'ஏன்,' 'எதற்காக' என்ற இரு கேள்விகளும் உள்ளே மாறி மாறிக் கும்மியடித்தன.

ஏற்கெனவே சதா கல்யாணத்தில் சந்தித்த இளையவன் முகம் நினைப்பில் நின்று வெட்கக் கலவரம் ஏற்படுத்த... இப்போது இது வேறு!

"ஏம்டீ... உனக்கு ஏதும் புரியுதா? ஏன் அவுக நம்மத் தேடி வரணும்?" என்று வினவிய பாட்டியிடம் மூச்சுவிடவில்லை.

பாட்டியிடம் நாய்க் குட்டியை அழைத்து வந்ததற்கான திட்டே இன்னும் வாங்கித் தீரவில்லையே...

பாட்டியின் ஏச்சு மிக அடங்கிப்பிருந்தது.



"சரி, நாம ரெண்டு பொட்டைகளாய் இருக்கோம் - இது காவலாய்க் கிடக்கட்டுமே! ராசியான ஜீவனு போல.... வந்ததும் வராததுமாய்ப் பெரிய இடத்து ஆட்களையும் வரவழைச்சிடுச்சே.." என்று அதிசயிக்க ஆரம்பித்திருந்தாள்.

ஆனால் இளைய ராணி மாலை ஐந்திற்கு வீடு வருவதாய்ச் சொல்லப்பட, காலையிலிருந்து, சார்வரிக்கு உத்தரவுகள் மாறி மாறி வந்தன.

"நீ வேணும்னா அந்தத் தேங்காய் துருவி பல்லுக்காரி வீட்டுக்குப் போயிடறியா?"

"வேணாம். அதெதுக்கு? வீட்டு முன்னே பிளஷரு காரு நிற்குதே, யாரு என்னான்னு அங்கே விவரம் கேப்பாங்க..."

"நீ சிங்காரிசுக்க வேணாம்டீ..."

"அதுக்காக அழுதும் வடியாத! அந்த ரோஸா கலரு தாவணி, ஊதாப் பட்டுப் பாவாடை போடுவியே... அதுல உந்நிறம் தூக்கலாத் தெரியும்..."

"வீட்டை ஒரேயடியாய் அலங்கரிக்கப்படாது - சகஜமாய் இருக்காப்பல தோணனும்..."

"ரொம்பவும் சாவகாசமாய் இருந்தா அதை அவமரியாதைன்னு அவுக எடுத்துரப்படாது..."

இப்படி அல்லாடியபடியே ஓடிச் சாடினாள் பாட்டி.

வீடு கோலங்களாலும், ஸ்வாமி படங்களின் மல்லிகைச் சரங்களாலும், சாம்பிராணி மணத்திலும் ஜமாய்த்தது.

எதிர்பார்த்தபடி இளைய ராணி நீல, வெள்ளை ப்ளைமவுத் காரில் வந்து இறங்கினார். அதன் நீளமே தனி தோரணையாய் இருக்க, இறங்கிய பெண்மணியின் ஆடை, நகைகளும் மிரட்டின.

கிராமத்தவருக்குப் பழகிய தடித்த தங்கச் சரங்களில்லை. சன்ன சரத்தில் மின்னிய வைரங்கள் தங்களது மதிப்பைக் கண்சிமிட்டிச் சொல்லின. அதிக ஜரிகை மின்னாத மிருதுவான பட்டுச் சேலை,

சாஸ்திரத்திற்காய்க் கொண்டையில் செருகப்பட்ட இனுக்குப் பூ. வெடிப்பற்ற பாதங்கள் - அவற்றில் தங்கக் கொலுசுகள்...

ராணியைத் தொடர்ந்து அகன்ற தாம்பாளங்கள் இறக்கப்பட்டன. அவற்றின் விளிம்பில் நுணுக்கமான வேலைப்பாடு - கனத்திற்குப் பிடிக்கத் தோதாக இருபுறமும் சிங்கமுகப் பிடிகள். தட்டுகளில் தேர்ந்த மாதுளை, ஆப்பிள், ஆரஞ்சு, வாழை தவிர, பருப்பு, தேங்காய், புஷ்ப வகைகள், ஒவ்வொன்றையும் தேர்ந்து தொடுத்தது போல பரும் மொட்டுகளாய் மல்லிகை, ஜாதிப் பூச்சரங்கள்.

அத்தனையையும் தன் அனுபவக் கண்களால் உள்வாங்கிய கிழவிக்குப் பேச்சும் உள்ளிறங்கி விட்டது.

இளைய ராணி எங்க வீட்டுக்கு வந்தது விசேஷம்... எங்க பாக்கியம்... வாங்க... வரணும்... என்று உளறுவதை மீறி உருப்படியாய்ப் பேச இயலவில்லை.

உள்ளிருந்த சாருவிற்குச் சஞ்சலத்தை மீறிய சிரிப்பு!

அதை அடக்கியவள் விழிகளின் மூலம் பார்வையை மட்டும் வெளி அறைக்குள் விரட்டினாள்.

இளையராணி அதிகச் சிவப்பு, அழகு என்றில்லையானாலும் நல்ல உயரம். உடலைக் கட்டுக்கோப்பாகவும் வைத்திருந்தார். முகத்தில் அமைதி விரவிய கம்பீரம் - அதற்குப் பொருத்தமான பேச்சு.

பாட்டிக்கு அந்த அமர்த்தலான குரல் காதில் கேட்கவில்லை... கேட்பதில் பழுது ஏற்பட்டதிலிருந்து பாட்டி தானும் இரைந்து பேசிப் பிறரையும் கத்தவே வைப்பாள்.

ஆக இப்போது விவரம் முழுதாய்க் காதில் விழாமல் பாட்டி பரிதாபமாய் விழித்ததில் சாருவிற்குள் சிரிப்புக் கூடியது.

கூடவே இத்தனை பவிசுள்ள ஜமீனம்மாளுக்குத் தன் வீட்டில் என்ன வேலை? அதுவும் இத்தனை தட்டு தட்டுடலோடு என்ற கலக்கமும் கலந்திருந்தது.



ராணியின் தொனி இறங்கியிருக்க, ஏதும் கேட்காததில் கலக்கமும் கூடியது. ஆக காபி தயாரிப்பில் கவனமானாள்.

பாட்டியம்மா மிக அருமையாய்த் தயாரிக்கும் வெல்லக் கொழுக்கட்டைகள் கொப்பரைக்குள் ஆவியடிக்கக் கிடந்தன. தேங்குழல், சீப்புச் சீடைகளை வடிவாக வெள்ளித் தட்டில் அடுக்கினாள். பாட்டி அழைத்ததும் கொழுக்கட்டைகளை மறுதட்டில் கொண்டு போய் வைக்க வேணும்... கைகால்கள் துவண்டு வெடவெடத்தன.

“அடடே... அப்படியா... ரொம்ப சந்தோஷம்..” பாட்டியின் உற்சாகக் குரல் வீறிட, பல்லி போலச் சுவரில் ஒண்டி ஒட்டுக் கேட்க முயன்றாள்.

“உங்க பேத்தியை நம் ஜனத்துல ஒருத்தர் 4 நாள் முந்திய கல்யாணத்துல பார்த்துட்டு வந்து சிலாகிக்கவும்தான் துருவி விசாரிச்சோம். நீங்க ஏற்கெனவே சுத்தி முத்தி கல்யாணம் மூலமாய் எங்களுக்கு உறவுதான்றது தெரியவந்தது... அதிலே அப்பாவுக்குத் திருப்தி...”

“அடடே... அது பெரிய விஷயமுல்ல? எங்க மாப்பிள்ளை வகையில சொந்தமாயிருப்பீகளோ? அவுக பெரிய வம்சந்தான். எம்பொண்ணு சாவித்திரி அம்சமாயிருக்கக் கொண்டு தேடி வந்து கேட்டாங்க. அஞ்சு நாள் கல்யாணம். அம்புட்டுக் கூட்டம்... பொண்டுக நாங்க பந்தி, சமையல்னு மேற்பார்வை இடறதிலேயே இருந்தோமா... யாராரு வந்தது போனதுன்னுகூட அறியலை. அப்புறம் பொண்ணு அங்கேயே இருந்துட்டா... எங்களது கிராமம்னு மாப்பிள்ளை அவளைப் பிரசவத்துக்குக்கூட விடலை...”

தொடர்ந்து பாட்டி, பாட்டி எப்படிக் கீரனூர் வந்தார் என்பதை எல்லாம் ஒரு படியாய்ச் சொல்லி முடித்தபோது, சாரு பாலைச் சிறு தீயில் பொங்கவிட்டிருந்தாள்.

காபியின் மணம் சமையல்கட்டை மீறி வீட்டைத் துளைக்கவும்தான் பாட்டி பதறினாள்.

"அடடே... இப்படி உங்களை வெறுமே உக்கார வெச்சுப் பேசுதேனே? பலகாரம், காபி எல்லாந் தயார்தான்..."

"உங்க பேத்திதானே எடுத்து வருவா?"

"வரட்டுமே... பின்னே?.. யம்மாடி சாரு... சார்வரி..."

"அபூர்வமான பெயர்."

"ஆமாங்க... அவங்கப்பா வெச்சதுதான்."

"அது தமிழ் வருஷத்தின் பெயர்... இல்லையா?"

"அப்படித்தாம் போல..."

அதற்குள் முன்னறைக்குள் பலகாரத் தட்டுகளோடு நுழைந்த இளையவளை ஏறிட்டாள் இளைய ராணி.

அவள் முகத்தில் உணர்ச்சிகளின் ஓட்டம்...

வியப்பும் மகிழ்வும் அவற்றில் பிரதானமாய்த் தெரிந்தன.

பூப்போலக் காலூன்றி நடந்த சார்வரி குனிந்து பலகாரத் தட்டை வைத்த பின் நமஸ்கரித்தாள்.

"அமோகமாய் இருக்கணும்."

எழுந்தவளைத் தன்னருகே இழுத்துக் கொண்டாள் இளைய ராணி. பிடித்தங்கள், படிப்பு, தோழிகள் என்று பொதுவாக நகர்ந்தது பேச்சு.

"உம்பேரைக் கேட்டதும் ஒருகணம் திகைச்சுட்டேன் சார்வரி."

ஏன் என்பதாய் நிமிர்ந்தாள் இளையவள்.

"என் மருமகன்... அதாவது என் ஒரே அண்ணனின் ஒரே மகன் பேரும் ஒரு தமிழ் வருஷத்தியதுதான் - சர்வஜித்... சகலத்தையும் வென்றவன்னு அர்த்தம்."

குரலை மிகத் தழைத்துத் தொடர்ந்தாள்.

"இப்ப உன்னை வெல்லணும் - நீ அவனுக்கு மனைவியாகணும்னு நினைக்கறான்மா - அதுவும் வாய்க்கணும்..."



பாட்டி தன் காதை ஒரு தினுசாய்ச் சரித்துக் கவனிக்க முயன்றாள். "சரி...சார்வரி! குடிக்க கொஞ்சம் தண்ணி எடுத்து வர்ரியா... மெள்ள வந்தால் போதும்."

எம்பிப் படபடத்த தன் இதயத்தை அழுந்தப் பிடித்துக் கொள்ள வேணும் போலிருக்க, சாருவும் நன்றியுடன் உள்பக்கம் விரைந்தாள் - வருவதற்குத் துணியாய்த் துவண்ட கால்கள் இப்போது நன்கு ஒத்துழைத்தன!

உள்ளறைக்குப் போனதும் சுவரோடு சுவராய்ச் சரிந்து அமர்ந்தாள்.

பாட்டிக்குக் கேட்பதற்காக ராணி மறுபடி உரக்கவே பேச நேர்ந்ததால் பெருவாரியான வார்த்தைகள் இவள் காதுகளையும் தெளிவாகவே வந்தடைந்தன.

ஒரு குருவிக் குஞ்சு போல ஒடுங்கி முகமெல்லாம் ஒளியாக உட்கார்ந்திருந்த தன் எஜமானியைப் பின் பக்கத் தூணில் கட்டப்பட்டிருந்த மணி எட்டிப் பார்த்து முணங்கியது.

மற்றச் சமயமென்றால் ஓடி அதைத் தடவிக் கொஞ்சுபவள் உலகில் எதையுமே கவனிக்கும் நிலையில் இல்லை...

'சர்வஜித்... சர்வஜித்...' பேரை மந்திரம் போல உச்சரித்தாள் - தன்னைப் பார்த்ததுமே பிடித்துப் போய்த் தன் அத்தையைப் பெண் கேட்க அனுப்பிய தன் ராஜகுமாரனை நினைத்ததிலேயே அவளது இளம் உடல் நடுங்கியது... ஒருவிதமான இன்ப நடுக்கம்.

பார்த்ததுமே... அல்லது தன் நடவடிக்கைகளைக் கவனிக்க-வுமே அவருக்குள் ஏதோ ஈர்ப்பு போல... இல்லாவிடில் தன்னை ஏன் கொல்லைப் புறம் வரை பின் தொடரணும்?

தன் மீதும் ஏதோ ஒரு வசியப் பொடி தூவப் பட்டிருக்கிறது போலும்... அல்லாமல் தானும் ஏன் நான்கு நாட்களாய்ப் பெயரே அறியாத ஒரு புது மனிதனின் நடைமுறைகளை, மிருதுவான புன்னகையை, தன்னிடம் அவர் பேசிய சில வார்த்தைகளை, அதிலிருந்த பாராட்டை, எண்ணி எண்ணி மாய வேணும்?

பாராட்டப்பட வேண்டியது இளையராணியும்தான் என்று பட்டது. 'கல்யாணத்தில் உங்க பேத்தியைக் கண்டு என் மருமகன் ஆசைப்பட்டுட்டான் - அதான்பேச வந்தேன்,' என்றிருந்தால் பாட்டி இத்தனை பிரியமும் சகஜமுமாய் அமர்ந்து பேசமாட்டாள். பேச்சில் இத்தனை மரியாதை நிச்சயம் இருந்திருக்காது.

யாரோ ஒரு பெரியவர் சாருவின் பவிசை, அழகை, சுறுசுறுப்பைக் கண்டு தன்னிடம் வந்து சிலாகித்ததாகவும், அப்பெண் தங்கள் இனம்தான் என்பதால் தங்களின் மருமகளாய் வரக்கூடுமா என்ற விசாரிப்புடன் வந்ததாகவும் காட்டிக் கொண்டது சாருவிற்கு நிம்மதியாயிருந்தது.

ஆனாலும் தொடர்ந்து வந்த பேச்சு மிகக் கலங்கடித்தது...!

## 4

"உங்க வீட்டுக்கு... அரண்மனைக்குப் பொண்ணு குடுக்கறளவு நாங்க உசந்தவங்களில்லை..."

"அப்படி யோசிக்கக்கூடக் கூடாது நீங்க. 'தாய் வளர்க்காத பிள்ளை பேய்ப் பிள்ளை'னு சொலவடை உண்டு. தாய் நல்லபடியாய் வளர்த்திருந்தா எப்படி இருக்குமோ அப்படியே பேத்தியை உருவாக்கியிருக்கீங்க... படிப்பு, பாட்டு, சமையல், நேர்த்தியாய் உடுத்த, கைவேலைன்னு பேத்திக்கு மேல்தட்டுக் குடித்தனத்திற்கான எல்லா அம்சமும் அமைச்சிருக்கீங்க... பிறகென்ன? பிள்ளை வீட்டுக்காரங்களே தேடி, முறைப்படி கேட்டு வர்றோம்..."

"அதெல்லாம் பெருமைதாம்மா..."

"கொஞ்சம் நெருடலான விஷயமும் இருக்குது... கொஞ்சமென்ன, நிறையவே நெருடும். ஆனால் இந்தச் சம்பந்தம் கூடி வரணும்... நம்ப குழந்தைகளை நாம மணக் கோலத்தில் பார்க்கணும்... அதுங்க ஆயுசும், ஆனந்தமும் சந்ததியுமாய்த் தழைக்கறதைக் கண்டு பூரிக்கணும்..."



பாட்டி அக் காட்சியை அகக் கண்ணால் கண்டு பூரித்து அழுது விட்டாள் போலும்...

"கண்ணைத் தொடைச்சுக்குங்க. நாளை சர்வஜித் வெளிநாடு போறான். ஜமீனுக்குரிய கடலாட்டம் ஆஸ்தி, அந்தஸ்தெல்லாம் இப்போ போச்சு... ஆனால் கடவுள் காலத்துக்கேற்ப என் மருமகனுக்கு நிறையப் புத்தியைக் கொடுத்திருக்கார்...

"ம்ம்... அதை யாரால பறிச்சுக்க முடியும்? வெள்ளத்தால் அழியாது... வெந்தணலால் வேகாத கல்வின்னு பாட்டே உண்டே.

"ஏற்கெனவே நல்ல படிப்புதான். பெரிய நிறுவனங்களில் இவனுக்கு மதிப்பான இடமுண்டு. சட்டம் பற்றி மூணு மாசத்து டிப்ளோமா படிப்பு ஒன்றுக்காகச் சிங்கப்பூர் போயிருக்கான்."

"சிங்கமுக அரண்மனை... அதைச் சுற்றின இடமெல்லாம்...?"

பாட்டி சுதாரிப்பாய் விசாரித்தாள்.

"எல்லாம் நம்மிடம்தான் இருக்குதுங்க. அதைக் கட்டிக் காபந்து பண்ணவும் இந்தக் காலத்துல படிப்பு தேவைப்படுதே... தவிர அரண்மனையைப் பராமரிக்க, அத்தனை வேலையாட்களுக்குச் சம்பளம் தரவுமே லட்சங்கள்ல பணம் தேவைப்படுது..."

பாட்டியின் கண்கள் விரிந்து உருண்டன போலும்...

"என்ன அப்படிப் பார்க்கறீங்க? ஒரு நாளைக்கு வெறுமே எங்க வேலையாட்களுக்கு மட்டுமே இருவது படி சாதம் வடிக்கணும்... அது தவிர வந்து போறவங்களையும் கை நனைக்காமல் அனுப்ப முடியாதுங்களே! அதுக்குத் தனியாய் ஏழெட்டுப் படி சாதம், பொரியல், கூட்டுன்னு..."

"அப்ப இத்தனையையும் மேற்பார்வை பண்ண அரண்மனையில் யாரிருக்கா?"

"எங்க அக்கா சூர்யகலா இருக்கா... எம்பேர் சந்திரலீலா.."

"நல்லதுங்க... நீங்க இருக்கறது மதுரையைத் தாண்டின்னீக... அவுங்க ஊரு எது?"

"பட்டணத்துக்குக் கட்டி அனுப்பிச்சோம். பெரியத்தான் தவறின பிறகு கைக்குழந்தையோடு அப்பா வீட்டுக்கே வந்துட்டா. அவளுக்கு ஒரே மகன் - பேர் சுரேந்திரன். எங்கப்பாவுக்கு வாதத் தொல்லை... நடமாட்டமில்லை... பேச்சும் குழறும்... அம்மா தவறின பிறகு மாளிகையைக் கட்டிக் காக்க, அப்பாவைப் பாசமாய்ப் பேண நம்ப குடும்பத்து ஆள் இருந்தாத்தானே?"

"உண்மை... வாஸ்தவம்... உங்க அண்ணன்?"

"அண்ணா அண்ணி நேபாளுக்கு விமானத்தில் போனப்ப விபத்து ஏற்பட்டு இறந்துட்டாங்க. அப்ப சர்வஜித்துக்கு வயசு பதினொன்னு..."

கேட்ட சார்வரியின் நெஞ்சு இளகியது - 'இருவது படி சாதம் வடிச்சுப் புழங்கும் வீட்டிலும் இவர் அநாதையாய்த்தான் வளர்ந்தாரா?'

ஆனால் அதனால் முரட்டாட்டமாய் உருவாகாமல் இளகியவராய்த்தான் இருக்கிறார்... அந்த ஒத்த குணம்தான் இருவருக்குமான திருமணப் பேச்சாக முளைவிட்டிருக்கிறது. ஆனால் ராணியம்மா ஏதோ நெருடலான விஷயமும் இருப்பதாய்ச் சொன்னார்களே... சார்வரியின் எண்ணத்தையே பாட்டியும் கேட்க, பேச்சு அம்முக்கிய முடிச்சிற்கு வந்தது.

"அது ஜமீன் வீடு... சார்வரி இங்க ரெண்டு பேருக்கு அளந்து போட்டுப் பழகிய பொண்ணு..."

"வாஸ்தவங்க... அவ அப்பா வீட்டோட இருந்திருந்தா நாலு பேர் வரப் போவன்னு இருந்திருக்கும்... இப்ப யாரையும் உள்ளே ஏத்தறதில்லை... தப்பாய் ஒரு பேச்சு புறப்பட்டறக் கூடாதில்லீங்களா?"

"புரியுது. பஞ்சாரத்துல அடைபட்ட கோழிக்குஞ்சாய் வளர்ந்த பெண்ணைத் திடீர்னு காட்டுக்குள்ள விட்டது போல இவ திகைச்சுடக் கூடாது... அதனால..."

"சொல்லுங்கம்மா..."



"சார்வரி எங்ககூட ஒரு மாசமேனும் வந்து இருக்கட்டும். ஜமீன் பழக்க வழக்கங்கள், நடைமுறைகளைக் கண்டு பழகட்டும்... அப்புறம் தயங்காமல் ஆட்சி பண்ணலாம்... மாப்பிள்ளையும் இங்கே. ஏன் இந்தியாவிலேயே இல்லை..."

பாட்டியிடமிருந்து மூச்சுப் பேச்சில்லை.

"ஊரு முறைகேடுன்னு பழிக்குமே..."

"ஊருக்கு ஏன் தெரியுணும்? தட்டெல்லாம் இருந்ததால பெரிய காரில் வந்தேன்... வாசல்ல நிற்க வேணாம்னு உடனே அனுப்பிட்டேன். ஆறரை, ஏழுக்கு இருட்டோட ஒரு டாக்ஸியைத் தான் வரச் சொல்லியிருக்கேன்... உங்க வீட்டை ஒட்டி வேறுவீடு இல்லைன்ரதாலதான் பிளைமத்ல வந்தேன்."

"பொத்தி வளர்ந்த பிள்ளை இவங்கறதெல்லாம் சரிதான்... ஆனாக் கட்டுப்பாடும் தேவைதானுங்களே? ஏதோ பொண்ணைப் பிடிச்சதால் ஜாதகம் கேட்டாங்க... இப்படிப் பொண்ணைக் கூட்டிட்டுப் போய் வச்சு அனுப்பறோம்ரது..."

"வைரத்துக்கு ராசி பார்க்கறது போலன்னு எண்ணிட்டீங்களா? அதெல்லாமில்லை... இவதான் எங்க வீட்டு மகராசி... எங்க வீட்டைச் சார்வரி வந்து பார்க்கட்டும். பழகட்டும்ரேன்..."

"இருக்கலாம்... ஆனா ஊர் வாய்ல விழுந்துட்டா அரைபடணுமே... இது கேள்விப்படாத பழக்கமாவில்ல இருக்கு..."

பாட்டியின் குரலில் கடினம் கூடியது.

"அதுக்கு பெரியவங்க நீங்கதான் ஆலோசனை சொல்லணும்..." எதிர்ப்புறம் தழைந்தது.

"இல்லீங்க ராணியம்மா... இதெல்லாம்..."

"மறுத்துடாதீங்க... சார்வரி எங்க வீட்டுப் பொண்ணு இனிங்கறதுல மாற்றமில்லை... உறவுக்காரங்களோட தங்க பிறந்த ஊருக்குப் போயிருக்கறதாய்ச் சொல்லலாமா?"

"அது இங்கன இருவது கல்லுக்குள்ளே இருக்கிற கிராமம்... அவ அங்கில்லைங்கறது நாலு நாளுல தெரிஞ்சிடும்..."

"அவ அப்பாவைப் பார்க்க வடஇந்தியாவுக்கு..."

"நல்ல வேளை நினைவுபடுத்தினீங்க, ராணியம்மா... எம் மருமவனுக்குத் தெரிஞ்சால் என்னை உப்புக் கண்டம் போட்டுத் தீர்த்திடுவாரு."

"அவர் ஊர் உலகம் புரிஞ்சவர்... இத்தனை நல்ல சம்பந்தத்தை நீங்க நழுவ விட்டது தெரிஞ்சாதான் வருத்தப்படுவார்."

"அவர் இருக்கிற இடம் தெரிஞ்சாலாவது தகவல் அனுப்பி அபிப்ராயம் கேட்கலாம்."

பாட்டியின் கருதி இறங்க ராணியம்மாள் தொடர்ந்தாள் -

"எங்கப்பாவிற்கு ஜோசியத்தில் நம்பிக்கை கிடையாது. அதான் நாங்க ஜாதகம் கேட்கலை..."

"அது ஏன்?"

"ஜாதகப் பொருத்தமெல்லாம் கச்சிதமாய் அமைஞ்சுதான் அக்கா கல்யாணம் நடந்தது - அத்தான் நிமிஷமாய் மறைஞ்சுட்டார். எங்கண்ணா அண்ணிக்குப் பலமுறை பிறந்தது தங்காமல் பிறகு சர்வஜித் கிடைச்சான். விபத்துல அவங்களும் போயாச்சு..."

"போதாத காலம்தான்..."

"அரண்மனை பக்கத்திலேயே எங்க குடும்பத்துக்கு ரொம்ப வேண்டியவர் இருக்கார். ஜோதிடம், மருத்துவம் ரெண்டும் தெரிஞ்சவர்... குடும்பத்தில் ஒருத்தராய் மதிக்கறோம் - பேர் குருநாயகம் - அப்பாவால் நடக்கக் கொள்ள முடியாததால், அப்பாவைக் கலந்தாலோசித்து சொத்து, சட்ட, நிர்வாகமெல்லாம் இழுத்துப் போட்டுப் பார்ப்பார்..."

"அப்படியும் ஒரு ஆள் தேவைதான்... அவரு இந்த ஏற்பாடு பற்றி என்ன சொன்னார்?"

"இந்த ஐடியாவே அவர் அதாவது குருவய்யா சொன்னதுதான்! அப்பாக்கு ஜாதகத்தில் நம்பிக்கை இல்லாததால், பொண் இங்க வரட்டும்... அவ பூஜை பண்ணி சுவாமியைக் குளிரப் பண்ணட்டும் - நம்ப பழக்க வழக்கங்களைப் பார்த்துத் தெளிவாய், தைரியமாய் மாலையோட வந்து ராணியாய் அரசாளட்டும்ங்கறார்... அப்பாவிற்கும் இந்தப் புதுவித ஆலோசனை பிடிச்சுப் போச்சு... இப்பவே பெண்ணை அழைச்சுட்டு வா... எம் பையன்தான் வெளிநாடு போயாச்சு... இந்த வீட்டு மகாலக்ஷ்மியையாவது கண் குளிரப் பார்க்கறேன்னு நிற்கறார்... வயசானால் பிடிவாதமும் கூடிடுது..."



பாட்டி அடுத்த விவரமான கேள்வியை வீசினாள். அதுவரை சொல்லப்பட்டதையெல்லாம் தரைமட்டமாக்கும் ஒரு வீச்சு...

"அதெல்லாம் சரி... சாரு வேறெங்கோ போறதாய்ச் சொல்லிட்டு உங்க அரண்மனையில சில நாளு வந்து தங்கினாலும்... மூணுமாசம் கழிச்சு இந்தியா திரும்பற உங்க மருமான் -

"இதென்ன ஒரு பட்டிக்காட்டுப் பொண்ணை எந்தலையில் கட்டறீங்கன்னு கல்யாணத்துக்கு மறுத்துட்டா? கடல் கடந்து போற வாலிபப் பிள்ளைக, கையோட வெள்ளைக்காரியக் கூட்டிட்டு வர்ரதாய் கேள்விப்படறோமே..."

இந்த மடக்கலை ராணி எதிர்பார்க்கவில்லை.

சார்வரிக்குமே - 'அடடே! காது மங்கினாலும் பாட்டியின் மூளை மழுங்கவேயில்லை!' என்று தோன்றிவிட்டது.

அவளுக்குமே ராணியின் இப்புது விதக் கோரிக்கை அதிர்ச்சிதான். எதிர்பார்க்காத ஒரு குலுக்கல்.

கல்யாணமாகி ஒரு பெண் கணவனோடு புகுந்த வீடு போவதெப்படி. தாலி இல்லாமல் தாம்பாளங்களை மட்டும் வாங்கிக் கொண்டு அரண்மனையே என்றாலும் தனியே புகுவது எப்படி... சரியில்லை என்றுதான் பட்டது.

தயக்கமாய் ராணி ஒப்புக் கொண்டாள்.

"உங்களிடம் எல்லாம் சொல்லிடறேன்..." என்று ஆரம்பித்தவள், தன் மருமகன் சார்வரியைத் திருமண வீட்டில் கண்டது, பிரியப்பட்டது முதற்கொண்டு விவரித்தாள்.

"வேண்டாம்... அப்படிப் பார்க்காதீங்க... கன்னியமாய் என்னை வரவழைச்சு விஷயத்தைச் சொன்னாளே தவிர, வேறெதுமில்லை. எங்கே தான் வெளிநாடு போய்த் திரும்பறதுக்-குள்ளே உங்க சாருவுக்குக் கல்யாணமாகிடுமோன்ற பயம் அவனுக்கு. பெரியவர் குருநாயகத்திடம் - நாங்கல்லாம் அவரைக் குருவய்யான்னு அழைப்போம் - அபிப்ராயம் கேட்டோம்... சர்வஜித்துடைய ஜாதகத்தைப் பார்த்து.

"சோழியும் குலுக்கிப் போட... முழுக்க திருப்தியான சமிக்ஞை கிடைக்கலை. சுவடி எடுத்துப் பார்த்தப்ப, வரப்போற மருமகள் கன்னியாய் 14 நாளேனும் ஜமீனுடைய சிங்கமுக நாதருக்குப் பூஜை செய்தால், அவர் மனங்குளிர்ந்து ஆசிர்வதிப்பார்... குழந்தைகள் அமோகமாய் இருப்பாங்கன்னு தெரிஞ்சுதாம்... தோஷங்களை-யெல்லாம் கன்னிபூஜை துடைச்சுப் போட்டுடுமாம்..."

பாட்டியிடமிருந்து பதிலில்லை... மனதில் சில கணக்குகள் ஓடின போலும்.

"உங்ககிட்ட படகாட்டம் கார் இருக்குது ராணியம்மா... தினம் அழைச்சுட்டுப் போய் வந்து விட்டிருங்க... 15 மைலு தொலைவை விரைசலாய்க் கடந்திடலாமே?"

"அது தண்டோராப் போடறது போல... என்ன பூஜை... என்ன தோஷம்னு விதவிதமாய்க் கதையைக் கிளப்புவாங்க... பெண்ணைப் பெத்தவங்க கவனமாய் இருக்கணுங்கறது போல... பெரும் பரம்பரையான நாங்களும் பேச்சுக்கு இடந்தராமல் இருக்கணு-மில்லையா?... ஆனா ஒன்னை நான் யோசிக்கலையே... ஏம்மா கூடவே வந்துடலாமே... சேர்ந்தே வந்தால் ஊரைப் பற்றிய கவலையுமில்லை... உங்களுக்கும் சஞ்சலமில்லை..."

"அறுவடை சமயம்மா..."

"ஆள் போட்டுப் பார்த்துடுங்க..."

"சம்சாரி குடும்பத்தப் பத்தி நீங்க அறியாததா? பிள்ளையாய் வளர்த்த பயிரை அறுவடை சமயம் அம்போன்னு விட்டுட்டுக்



கிளம்பக்கூடுமா? இம்முறை நல்ல விளைச்சலு... இந்த நிலத்தைக் கொண்டு பத்துக் குடும்பமேனும் பிழைக்கணும்..."

"காசை வேணும்னால் தந்துடறோம்."

"நீங்களும் நில நீச்சுள்ளவக... இது காசுக்கு அப்பாற்பட்டது. புரிஞ்சுக்கணும் -"

"புரியுதும்மா... இப்படி ஒரு கோரிக்கையை வச்சது தப்புங்கரது புரியுது... கல்யாணப் பேச்சே வேண்டாம்ன எங்க பிள்ளை, சார்வரியைப் பிடிச்சிருக்குதுன்னு சொல்லவும், எங்களுக்குத் தலைகால் புரியாமப் போச்சு... உடம்பு முடியாத எங்கண்ணனுக்கு மருமகளைப் பார்க்ணும்ர ஆசை... ஏன் பாச வெறின்னே வைங்க. அவளைப் பார்க்கும் திருப்தியில் அவருக்கு உடம்பு தேறிடாதாங்கற நப்பாசை எங்களுக்கு... அப்பாக்கு ஜோதிடத்தில் பிடிப்பற்றுப் போனாலும் கடவுள் நம்பிக்கை உண்டு. எங்க ஜமீனுக்கான சிங்கமுக நாதருக்குப் பூஜைசெய்தால் எல்லா தோஷமும் விலகி சுபீட்சம் வரும்னு நம்பறார்... மகன் மூலமான வாரிசைப் பார்த்தால் அப்பா நிமிர்ந்துடுவார்... அதுவரை மருமகளைப் பார்க்க, பேசன்னு... சரி, இப்ப என்ன... சர்வஜித் வரட்டும்... தாலி கட்டினப்புறம் மற்ற சடங்கை ஒத்தி வைச்சுட்டு சார்வரியைப் பூஜையை நடத்தச் சொல்வோம்... ஆனால் தாலி ஏறினபிறகு...? நடக்கிறபடி நடக்கட்டும்..."

ராணியின் குரலிலிருந்த கம்பீரம் கலைந்து போக, பாட்டியின் குரல் கணீரென எழுந்தது -

"கேட்க வேண்டியவளைக் கேட்காம நாம இப்படிப் பேசிட்டே போனா எப்படி?"

"சார்வரியைக் கேட்கணுமா... அதுவும் சரிதான்..."

"பொடிப் பிள்ளைய என்ன கேட்க? ஜகதலாம்பாளைக் கேட்போம். அவ இன்னாருக்கு இன்னார் இப்படின்னு முடிச்சுப் போட்டிருப்பாளே... பூப்போட்டுக் கேட்போம். சரின்னு வந்தால் பொண்ணை அழைச்சுட்டுப் போங்க... இத்தனை பெரிய வாழ்வு அமைய இருக்கையில் நா தடையாய் நிற்க வேணாம்... வாங்க... தவிர

பூஜை அறையிலதான் சாருவோட ஜாதகமிருக்குது... யோக ஜாதகம் அது...''

பூஜை அறையின் கதவைத் திறக்க, அதற்கென்றே காத்திருந்தது போல, மிருதுவாய்க் குலுக்கப்பட்டது போல... அம்பாள் படத்தின் மேலிருந்த செம்பருத்தி நழுவி அழகாய் விழுந்தது.

## 5

நீளமான சன்னப் படிகள் -

அவற்றின் இருபுறமும் பிடரி அடர்ந்த வலிய கல் சிங்கங்கள். மனதுள் கடவுளின் துணை கோரியபடியே படியேறினாள் சார்வரி. இத்தனை பிரம்மாண்டத்தை அவள் எதிர்பார்க்கவில்லை.

வழுவழுவென வெண் முத்தாட்டம் பிரகாசித்த சுவர்கள், கம்பீரத் தூண்கள், அலங்காரச் சாமான்கள், ஈரடுக்கு உயரம் - எல்லாம் பிரமாதப்படுத்தின.

இதுவா தன் வீடாகப் போகிறது?

இந்த மனை... இல்லை அரண்மனையின் ராணி தானா?

தனக்கு அத்தனை ஆளுமையும் அதிர்ஷ்டமும் உண்டா?

மனம் குவித்து மேலும் உன்னிப்பாய்க் கடவுளை வணங்கியவள் வாசலை அடைய, இளைய ராணியே ஆரத்தி சுற்றினார்.

"உள்ளே வாம்மா..''

பளபளத்த தரையில் பாதம் பதித்ததும் சிலிர்த்தது.

இதில் அவரது காலடிகள் கோடி முறை பதிந்திருக்குமே... பாலகனாய், சிறுவனாய்... இத்தனை வருடங்களாய்...

குனிந்து வணங்கினாள்.



"அமோகமாய் நீயும் வாழ்ந்து இந்தப் பரம்பரையையும் வாழ்விக்கணும்மா...''

உடன் வந்திருந்த பாட்டிக்குப் பேச்செழவில்லை...

பிரமிப்பு அவள் கண்களை நிறைத்து வாயை அடைத்திருந்தது. வெகு கவனமாய் ஊரார் மோப்பம் பிடித்து விடாத வகையில் பேத்தியை அழைத்து வந்திருந்தாள் - அரண்மனைக்குத் தோதான சில உயர்ரகப் பட்டுப் புடவைகள், நாகரிகப் பொருட்கள், பெரியவர்களுக்குத் தர என்று சில பரிசுப் பொருட்களோடு நிறைந்திருந்த ஊதாவும் சிவப்புமான புது ட்ரங்க் பெட்டியின் பளபளப்பு இங்கு கோரமாய்த் தெரிந்தாற் போலிருந்தது.

"முதல்ல உன் அறைக்குப் போம்மா, சாரு... கைகால் கழுவிட்டு பூஜையறையில் வந்து விளக்கேற்று!'' என்ற இளைய ராணி, அருகே புதியவர்களை மகா ஆவலுடன் பார்த்து நின்ற பெண்ணை ஏவினாள்.

"புவனி! அம்மாக்கு அறையைக் காட்டு...''

இதற்கென்றே காத்திருந்த தினுசில் கும்பிட்டபடி உடன் வந்தாள் - புவனி.

அவளது உடையும் முகப் பொலிவும் அவளை வேலைக்காரி என்றே நினைக்க விடவில்லை. ஆனால் அவள் பணிவு அப்படித்தான் என்றது.

"உங்க பெட்டிகளை அறை பீரோவில வச்சிருக்கும்மா... குளியலறையில வெந்நீர் விளாவி வச்சிருக்கேன்... துண்டு, சந்தன சோப்பு, பகுடரு எல்லாமுண்டு...'' பேசியபடி அவள் கனத்த தேக்குக் கதவைத் தள்ளினாள்.

உள்ளிருந்தது விசாலமான அரைவட்ட வடிவிலான அறை. எதிர்ப்புறச் சுவரில் பெரிய ஜன்னல்கள் திரைச்சீலையின் மறைப்புடன் இருந்தன. சுவரோடு பதிக்கப்பட்ட அலமாரிகள் தவிர, பூஞ்சாடிகள் வைக்க, எழுத என்று அலங்கார மேஜைகள் கிடந்தன... கிழக்குப் பார்த்தபடி கனத்த கட்டில், அதைச் சுற்றிலும் இளநீல நிறக் கொசுவலை ஒன்று கூம்பிய மேகமாய்ப் படர்ந்திருந்தது. லஸ்தர்

விளக்குகளும், சிறு பளிங்குச் சிற்பங்களும் அதைச் சினிமா செட்டிங் போலக் காட்டின.

"அதாம்மா குளியலறை... நீங்க முகங்கழுவி வர்ரதுக்குள்ள காபி எடுத்தாரேன்... பத்து நிமுசத்தில பூஜையறைக்குப் போகணும்னு..."

"ஆகட்டும்... வீட்டில் மற்றவங்க எல்லாரும்...?"

"பூஜையறையிலே பார்ப்பீங்க... சேர்ந்து சாமி கும்பிட்டுட்டு, பலகாரம் சாப்பிடும்போது எல்லாரோடவும் பேசலாங்கம்மா..."

புவனி கிளம்ப, பாட்டி ஒரு நீள மூச்சுடன் அங்கிருந்த குஷன் நாற்காலியில் சரிந்தாள்.

"அம்பாள்தான் காப்பாத்தினா..."

"என்ன சொல்றீங்க, பாட்டி?"

"இந்த... இப்படி ஒரு வாழ்வு உனக்கு என் வெட்டி ஜம்பத்தினால் கிடைக்காமப் போயிருந்தா?"

"ஒவ்வொரு மணி அரிசியிலும் யார் பேர் எழுதியிருக்கோ, அது அவங்களுக்குத்தான்னு சொல்வீங்களே, பாட்டி..."

"அதுவுஞ் சரிதான். அதான் அம்பாள் பூப்போட்டுக் காட்டிட்டா - இல்லைன்னா எனக்கு இப்படி ஒரு முடிவு எடுக்கத் துணிவில்லடீ..."

"நீங்களும் தங்கிடுங்களேன், பாட்டி..."

"ஆசைதான்... ராஜ வாழ்வுங்கறது இதுதான். உனக்குப் பாதுகாப்பாய் இருந்தாப்பலவும் ஆச்சு... ஆனா ஊரில பேச்சு கிளம்பிடுமேடீ... கிழவி அறுவடையையே விட்டுட்டுப் போறதுன்னா விஷயம் பெரிசுதான் - அது என்னா... எங்கேன்னு துருவி எடுத்துட்டாங்கன்னா? உங்கப்பாட்ட விவரம் சொல்ல முடியாதது வேற நெஞ்சை வாதிக்குது..."

"மணிக் குட்டி வேற வீட்டில் தனியாய் இருக்குது... ஒரு நாளைக்கு ரஞ்சிதம் பார்த்துப்பா... அதுக்கும் மேல நீ இல்லாட்டி ஏங்கிப் போயிடும் பாட்டி..."



"ஆமா... நாய்க்குட்டியை எண்ணி மருகுறா...நீ மேலுக்கு ஊத்திட்டு புதுசாய் வாங்கின சந்தன நிற ஆரணியைக் கட்டிக்கோ... தலை சீவி...யப்பா மொட்டுப் பூவைச் செண்டாட்டம் கட்டி வச்சிருக்காங்க பாரு... சூடிட்டுக் கிளம்பு."

பத்து நிமிடத்தில் பக்கப் பதியப் புதுப்பட்டில் வந்த போது வெள்ளிக் கெட்டிலில் காபி மணமாய்க் காத்திருந்தது.

"பெரியம்மா! நீங்க தயாராகுங்க... நான்சின்னவுங்களைப் பார்த்துக்கறேன்!" என்றபடி புவனி காபியை ஊற்றினாள்.

சார்வரி களைந்து போட்டிருந்த சேலையை மடித்து மற்றவற்றைத் துவைப்பதற்காய் எடுத்து வைத்தாள்.

"தலை சிடுக்கெடுக்கவாம்மா?" என்றபடி, பரிவும் பவ்யமுமாய் முடிச்சிட்ட சார்வரியின் கூந்தலைப் பிடித்து விட்டு, அகன்ற தந்தச் சீப்பினால் சிக்குப் பிரித்தாள். மிருதுவாய்க் கூந்தல் வாரப்பட, துளித்துளியாய் அபாரமான காபியை உள்ளிறக்குவது சார்வரிக்குப் புது அனுபவம்... வரப்போகும் பெருவாழ்வில் இப்படிப் பல சொகுசுகள் இருக்கும்... சோதனைகளும் பின்னி வருமோ?...

ஆக சொகுசில் முழுக்க மூழ்க முடியாதபடி உடலில் ஒரு படபட்ட முறுக்கு...

பாட்டி சொல்லிய அந்தக் காலப் பெண் பார்க்கும் வைபவங்களை நினைவு கூர்ந்தாள்.

"பெண்ணை விளக்கேத்தச் சொல்லுவாக... அதுல இருக்கும் நூறு விஷயம்..."

"ஒரே தீக்குச்சில விளக்கை ஏத்திடணுமா பாட்டி?" ஆர்வமாய் விசாரிப்பாள் சார்வரி.

"திரியை நிமிண்டி விடறதுல இருக்குது விஷயம். கூராய்த் திருகிவிட்டு ஏற்றினால் முத்தாட்டம் சுடர்விடும்... ஆனாக்க திரியை நிமிண்டினவ எண்ணெய் விரலை எங்க, எப்படித் துடைச்சுக்கறான்னு கவனிப்பாக..."

சார்வரி சற்று யோசித்துப் பார்க்க, பல யுவதிகள் விரலைத் தலையில் துடைப்பதாய்ப் பட, அதைச் சொன்னாள்.

"அப்படித் தேய்க்கறவளுக்குத் தன்னை ரம்மியமாய் வச்சுக்கத் தெரியாது - சுவரில் அல்லது தரையில் ஈஷறவ வீட்டைக் குப்பையா விட்டுருவா - விளக்கின் மூக்கிலேயே விரலை அழுத்தி எண்ணெயை வடிச்சிடணும் - அவதான் நறுவிசானவ..."

பாட்டி முன்பு சொன்னதை மனதில் பதிய வைத்தாள்.

"நானே பின்னி விடவாம்மா?"

புவனி கேட்க, தன் விரல்கள் சற்று அச்சத்தில் விரைத்திருப்பது போலத் தோன்ற, சம்மதித்தாள்.

"நீங்க இறுகப் பின்னியிருந்தீக... கொஞ்சம் தளர்வாய்ப் பின்னி நிறையப் பூ வைச்சால் அம்சமாய் இருக்கும்..."

சொன்னது போலவே அப்புதுச் சிகை அலங்காரம் தன் முகத்தை மேலும் மென்மையாய், குளிர்வாய்க் காட்டியது புரிந்தது.

புது எஜமானியின் புடவைக் கொசுவத்தையும் சீராக அடுக்கிய புவனி காலி காபி டம்ளர், தட்டுடன் வெளியேறினாள்.

பாட்டியுடன் பூஜையறைக்குள் நுழைந்தவளின் மனம் பூஜைமணியின் நாக்கு போலவே ஆடித் துடித்தது. உடல் முழுக்க அத்துடிப்பின் அதிர்வு. அறைக்குள் பலர் நின்றிருந்தனர்.

அனைவரையும் பொதுவாய் வணங்கினாள்.

அத்தனை கண்களும் தன்னில் கூர்மையாய் நிலைத்திருப்பது புரிய, சங்கடமாய்க் குனிந்திருந்தாள்.

"முதல்ல சாமியைக் கும்பிட்டு விளக்கேற்றம்மா... பிறகு வெளியே போய்க் குடும்பத்துப் பெரியவங்களை நமஸ்கரிக்கலாம்."

ஆழ மூச்செடுத்து மனதுள் ஸ்தோத்திரம் ஒன்றை ஓடவிட்டபடி விளக்கேற்றினாள். திரிகள் முத்துச்சுடர் கொண்டன.

மற்றப் பூஜை சம்பிரதாயங்கள் பூர்த்தியாக வெளியேறினர்.

முதலில் சக்கர நாற்காலியிலிருந்த பெரியவர் அழைத்துப் போகப்பட, மற்றவர்கள் தொடர்ந்தனர் - பின்னறையில் பதுங்கப் பார்த்த பாட்டியும், முன்னறையில் அமர்த்தப்பட்டாள்.



"இவர்தான் எங்கப்பா... எல்லாருக்கும் ஜமீன்..."

நமஸ்கரித்த இளையவளைக் குழறலாய் ஆசீர்வதித்தார்... அவர் மங்கிய கண்கள் கசிந்து அவளை வெகு ஆர்வமாய்க் கண்டு களித்தன.

"நின்னு உன்னை ஆசீழ்வதிக்க முழியல..." பெருமூச்செறிந்தார். "ஜேபி... ஜேபியில.. காசில்ல..." என்று சட்டையைத் துழாவினார்.

"காசு தரவாப்பா?"

"பிழகு நல்லதா... தழ்ழாம்..."

அறிமுகம் தொடர்ந்தது.

"இவங்க எங்கக்கா - பேர் சூர்யகலா - அவங்க ஒரே மகன் சுரேந்தர்."

ஒரே பார்வையில் அந்தப் பெண்மணி விதவை என்பது புரிந்தது. சற்றுக் கர்வமும் கடினமுமான குணம் என்பதும் -

பழுப்பு நிறப் பட்டுச் சேலை, கழுத்தில் கனத்த பவள, முத்து மாலைகள் - நெற்றியில் கீற்று வெண்ணீறு.

இளையவள் நமஸ்கரித்த போதும்கூட மூத்த ராணியின் முகத்தில் இணக்கமோ இளக்கமோ இல்லை... சற்று வெறுப்புக்கூட இருந்ததோ?

தாயினருகே கைகளைக் கட்டியபடி நின்ற மகனின் முகபாவனையும் தாயையே ஒத்திருந்தது.

கல்யாணத்திற்கு முன்பே ஆலாய் ஓடி வந்து விட்டவள் என்ற இளக்காரமா?

"இவர் குருநாயகம் ஐயா... நம்ப குடும்பத்துக்கு நெருங்கிய பெரியவர் குருவய்யான்னு சொல்வோம் - ஜோஸியம், வைத்தியமெல்லாம் அத்துப்படி..."

வணங்கியவளை வாயார வாழ்த்தினார்.

"மனம்போல வாழணும்மா குழந்தை... எனக்குத் தெரிஞ்சது அது ரெண்டுதான்... ஆனா அதனால் இங்கே பைசாவுக்குப் பிரயோஜனமில்லை. ஜோசியத்தில் ஜமீனுக்கு நம்பிக்கை கிடையாது. வைத்தியத்துக்குப் பட்டணத்து வைத்தியரை சர்வஜித் ஏற்பாடு பண்ணிட்டான். அவர் தர்ர மருந்து, மாத்திரைதான்... ஆக சும்மா வெட்டியாய்த்தான் வளைய வாரேன்!"

என்று சிரித்தவர் தன்னருகே நின்ற இளம் பெண்ணை அறிமுகப்படுத்தினார்.

"எம் மகள் அபர்ணா. மூத்த பொண்ணுக்குக் கல்யாண-மாயாச்சு. மாப்பிள்ளைக்கு மிலிட்டரியில் உசந்த உத்யோகம்... ஆக எப்போவாவது வருவா. அவளுக்குப் பத்து வயசு இளையவ இவ.. பி.யு.சி.யோட படிப்பை நிறுத்திட்டா... ஏன்னா எனக்குச் சமைச்சுப் பரிமாறவாம்..."

கூச்சத்துடன் குனிந்த அவ்விளம் பெண்ணை ஆர்வமாய்ப் பார்த்தாள் சார்வரி - மிக அழகிய பெண்.

நேர்த்தியான ஆடை, அணிமணிகள் சேர, யார் கண்ணையும் கட்டி நிறைக்கும் பொலிவு. தந்தை பேசி முடிக்கவும் சற்று நிமிர்ந்து மரியாதை நிமித்தம் முறுவலித்தாள்... ஆனால் அதில் சிநேகத்தைவிட சற்றுப் பயம்தான் தெரிந்தது.

"எம் பிள்ளைங்களும் படிக்கறாங்க... யாரும் வர முடியாத சூழல். நாளை என்னைக் கூட்டிப் போக மூத்தவன் வருவான்." என்று இளையராணி சொல்ல, சார்வரிக்குத் 'திக்'கென்றது.

தங்களைப் பேசிச் சம்மதிக்க வைத்து அழைத்து வந்த இளையராணி போய்விட்டால்... பாட்டியுமே ஊரை நோக்கிக் கிளம்பிய பின்.. தன் நிலை என்ன?

ஒருவிதக் குழப்பமும் அச்சமும் தன்னைப் பற்றி இருக்குவதை உணர்ந்தாள்.



# 6

"நேற்று அமாவாசை... நிறைஞ்ச நாளன்று நீ வந்தேம்மா... இன்னையிலிருந்து பூஜையை ஆரம்பிச்சுடு.."

குருவய்யா சொல்ல, தலையாட்டினாள் சார்வரி.

"பெரிய ஹோமம், மந்திரமெல்லாம் இதற்குத் தேவையில்லை. மனசைச் சுத்தமாய்ச் வைக்கறதுதான் பிரதானம்... பின்புறமே சின்னதாய் சிங்கநாதர் கோயில்... அதைக் கோயில்னு சொல்ல முடியாது.. பீடம்னு சொல்லலாம் - இருக்குது. அந்தி நேரமாய்ப் போய் நூற்றி ஒரு பூவோ இலையோ - மருக்கொழுந்து, துளசி, வில்வம் இப்படி ஏதேனும் படைச்சிட்டு வந்திடு..."

இளையவளின் முகக்குறிப்பு புரிந்து முறுவலித்தார்.

"ஆமம்மா, அவ்வளவேதான்... ஒவ்வொன்றையும் பக்தியோடு, உங்க எதிர்காலத்திற்கான வேண்டுதலோடு படை... உன் நிர்மலமான மனசு உணர்ந்து ஆண்டவன் குளிரணும்... தோஷங்களைப் போக்கணும்.."

"ஆகட்டுங்க..."

"நீ இப்படி...இங்க வருவேன்னு நான் எதிர்பார்க்கலைம்மா... இதுவே உன் நோக்கத்தை... இந்த வீட்டார் மேல் நீ வைச்ச நம்பிக்கையைக் காட்டுதே.. உங்களுக்காய், உங்க மூலம் தழைக்கப் போகும் இந்த வம்சத்திற்காய் வேண்டிக்கோ... அந்தி நேரம் நானும் உன்னோடு இணைஞ்சி இங்கே வேண்டிக்குவேன்.. சரிதானே?"

"நல்லதுங்க..."

அவரிட்ட திருநீற்றைக் கண்மூடி வாங்கிக் கொண்டாள்.

ஒற்றைத் தட்டு வேஷ்டி, போர்த்திய துண்டுமாய் எளிமையாகவே குருநாயகம் இருந்தாலும் அவர் தோற்றத்தில் அந்தஸ்திருந்தது. கனிந்த கொய்யாப்பழநிறத்திலிருந்தவர், தன்

சுருள்முடியை நடுவகிடெடுத்துச் சீவியிருந்தது ஒரு யோகியின் தோரணையைத் தந்தது.

"இந்த... இந்தப் பூஜை, பரிகாரம் எதற்குன்னு தெரிஞ்சுக்க-லாமா?" துணிந்து கேட்டு விட்டாள்.

அவரது தெளிந்த முகம் சற்றுச் சுணங்கியது.

"சஞ்சலப்படாதே குழந்தே... கண்டதை நினைச்சுக் குழம்ப வேணாம் - இது நம்ப திருப்திக்காகத்தான்..."

"ஆனால் கல்யாணத்திற்கு முன்னே... இங்கே நான் வந்து தங்கி... நிவிர்த்தி பண்றளவு..."

தயங்கிக் கேட்டாலும், பதிலை எதிர்பார்த்து நிமிர்ந்தே நின்றாள்.

"உணவு, உடை, பணம், பவுசு, புகழ் எல்லாம் எதற்கம்மா... இவை எல்லாவற்றையுமே ஆயுள் உள்ளவரைக்கும்தானே அனுபவிக்க முடியும்? இங்கே சகலமும் உண்டு... கூடவே ஆயுளும் கெட்டிப்படனும்... சர்வஜித்தின் ஆயுள் நிறைவாய் இருக்க-னும்னால் அதில் உன்னைவிட வேறு யாருக்கு ஆர்வமிருக்க முடியும்...ம்ம்?"

கருத்தாய்க் கவனித்திருந்தாள் -

"கன்னிப் பெண்ணாய், நீ இதைச் செய்றப்ப பலன் அசாத்யம். கல்யாணமான குழந்தைகளை ரெண்டு வாரம் பிரிஞ்சிருக்கச் சொல்லணும்னு இந்தக் காலத்தில் கேட்க முடியுமா?... உன் மாமனாரே என்னைப் 'போடா முட்டாள்'ன்னு வைவார்... ஆக..."

இவள் முகம் வெட்கத்தினால் சிவந்தாலும் காரியமாய்க் கேட்டாள்.

"ஆயுளுக்குப் பங்கம் வரும்னு நினைக்கறீங்களா?"

கேட்ட உதடுகள் துடித்தன.

"அசட்டாட்டம் பேசக்கூடாது. விருந்தின்போது நல்லா மூக்கு பிடிக்கச் சாப்பிடனும்னால், மற்ற நேரம் சாப்பாடு கிடைக்காதுன்னா அர்த்தம்? விருந்துன்னா அது ஒரு விசேஷம்... அதேபோல கல்யாணம் ஒருத்தர் வாழ்வின் பெரும் விசேஷமில்லையா? அதற்கு



முன் இந்தக் கோயில்ல சாந்தி பண்ணி உங்க வாழ்வைத் தொடங்குவது நல்லது..."

"ம்ம்..."

சற்றுக் கண் மூடினவர், பின் அவளைப் பார்த்துத் தொடர்ந்தார்-

"ஜமீன் குடும்பத்தில் பலருக்கு ஒரே குழந்தை... இளைய ராணிக்கு மட்டும்தான் இரண்டு... அவங்க புருஷன் வீட்டில நிறைய ஸ்வாமி நம்பிக்கை - அவங்க பூஜைப் பலனாய்த்தான் ஆணும் பெண்ணுமாய் ரெண்டு குழந்தைங்க... நிறைஞ்ச சந்தோஷமான வாழ்க்கை..."

"செய்திடலாம், குருவய்யா...."

திருப்தியாய்த் தலையசைத்தார்.

"புவனிட்ட எந்த நாளைக்கு எந்த புஷ்பம், இலைங்கறதைச் சொல்லிடறேன். அவ அதற்கான ஏற்பாடுகளைச் செய்திடுவா... அவளும் கன்னிப் பொண்ணுங்கறதால் தோஷமில்ல... உடன் கூட்டிட்டுப் போ... நிதானமாய்ப் பூஜை பண்ணு - திரும்பிடு..."

கோர்வையாய் பதமாய் அதுவரை பேசியவர் சற்றுத் தயங்க -

"சொல்லுங்கய்யா..." என்றாள்.

"சிங்கம்னா உனக்கு நினைவுக்கு வர்றது என்ன?"

"ராஜான்னுவாங்க..."

சற்று ஆச்சர்யமானவர் கேட்டார் -

"வேற?"

"வலிமை, கம்பீரம்..."

"ம்... வேற?"

வேறெதை எதிர்பார்க்கிறார் என்பது புரியாமல் அவரையே கேட்டாள்.

"நீங்க சொல்லுங்க..."

"நரசிம்ஹ அவதாரத்தில் சிங்கத்தின் ஆக்ரோஷம், அழிக்கும் ஆத்திரம், தெரியுதில்லையா?"

அவரைப் பார்த்தாள்.

"இந்தக் குடும்ப பீடத்தில் வேறெதும் இராது. சிங்கமுக இலச்சினை மட்டும்தான் - சமீப காலமாய் அதை லட்சியம் பண்ணிக்கலை... இந்த ஜமீன் நிறுவியவரின் சமாதி பக்கத்திலே எழுப்பின பீடம் அது. சிங்கமுக நாதரை வழிபட்டதால்தான் இந்தத் தலைமை, வலிமை கிடைத்ததாய்ப் பேச்சு உண்டு..பீடத்தைத் தினம் மெழுகி, விளக்கேற்றி, நாலு ஸ்தோத்திரம் சொல்லியிருக்கலாம். ஆனால் வீட்டுக்குள்ளேயே பூஜையறை கட்டினபிறகு அங்கே போவாரில்லை. அதான் சாபமோங்கற சஞ்சலம் எனக்கு..."

"குறைவில்லாமல் செய்துடலாம்ங்க..."

"சந்தியா காலத்துல எம் மனசும் உன்னோட இருக்கும். பயப்படாதே..."

அவளுக்குள் இல்லாத அச்ச உணர்வை அவரது கடைசி வார்த்தை உசுப்பியது... ஏன் பயப்பட வேணும்?

எதைக் கண்டு அஞ்ச நேரும்?

சுடர் அணைந்ததும் மேலேறிச் சுழலும் புகைபோல உள்ளே குழப்பக் கேள்விகள் புகைந்தன.. படபடத்தன.

சிறு புஷ்பக் கூடை தளும்ப மல்லிகை மொட்டுகளுடன் மாளிகையின் பின்புறமாய் அந்திப் பொழுதில் நடந்த போதும் அப்படபடப்பின் மிச்சமிருந்தது. உடன் புவனியும் வந்தாள். எனினும் நெடிய அடர்ந்த மரங்களை நோக்கிப் போவது சற்று மருட்சியூட்டியது.

இளையராணியும் பாட்டியும் தம்தம் ஊர்களை நோக்கிக் கிளம்பிய பின் மாளிகையே வெறிச்சோடிப் போன திகைப்பு வேறு...

"முடிஞ்சபோதெல்லாம் வரேம்மா, சார்வரி... தைரியமாய் இரு..." என்ற இளையராணியின் வார்த்தை சொச்சமிருந்த தைரியத்தையும் உருவிப் போட்டது.

"ஆமாண்டி.. நீ ஏதும் கடிதாசி எழுத வேணாம். முத்திரையைக் கொண்டு கடிதாசி இன்ன இடத்திலிருந்து வந்திருக்குதுன்னு தபால்காரர் கண்டுகிட்டாலும் வம்பு!" எச்சரித்திருந்தாள் பாட்டி.



தன் பாட்டியின் சாதுர்யத்தை நினைத்துப் பெருமிதம்தான்.. தன்னிலும் அந்தச் சாமர்த்தியம் சற்றேனும் இருக்காதா என்ன என்று சமாதானமானாள்..

காலையில் பூஜையறையை விதவிதமாய் அலங்கரித்து அதில் பூஜை. மாலையில் பீடத்திற்குப் போய்ப் பிரார்த்தனை, சமையலறையை ஒரு நோட்டமிடுவது. மூத்த ராணியிடம் போய் அங்குள்ள ஆல்பங்களைப் புரட்டி முன்னோர்களைப் பற்றி, அவர்களின் பிரதாபங்களை அறிந்து கொள்வது. ஜமீன்தாருடன் - அதாவது தன் வருங்கால மாமனாருடன் சற்று அளவளாவுதல் - இதுதான் சார்வரிக்கான அட்டவணை.

பெரியவரின் பேச்சு அத்தனை தெளிவாய்ப் புரியாதபோது என்ன பேசுவது என்ற குழப்பத்துடன் இளைய ராணியிடம் கேட்க-

"எங்கம்மாவோடு எடுத்த படங்களைப் பற்றிக் கேள்.. அப்பா பேசிட்டே போவார்... பழகப் பழக உனக்கவர் பேச்சு புரியும் - பத்திரிகைகள்ல வந்த தொடர்கதைகளை பைண்ட் செய்து அடுக்கியிருக்கார்... அதிலே ஒன்றை வாசித்துக் காண்பியேன் - அவருக்கு உன்னைக் கண்நிறையப் பார்க்கணும்.. உன் குரலைக் கேட்கணும்.. அவர் பக்கத்து அறையிலதான் புத்தகங்கள் உண்டு - சர்வஜித் சீட்டு விளையாட்டில் கில்லாடி... சுரேந்தரிடம் கேட்டு நாலு ஆட்டம் கற்று வச்சுக்கோ... பொழுது ஓடிடும்..."

மூத்த பெண்கள் இருவரும் விடைபெற்றுப் போனதும், சார்வரி நேரே பெரியவரின் அறைக்குத்தான் போனாள் - உன்னிப்பாய்க் கவனிக்க, ஜமீன்தார் பேச்சின் சாரம் பிடிபட்டது - அடுக்கின புத்தகங்களில் நா. பார்த்தசாரதியின் தொடர் ஒன்றை உருவி வாசித்துக் காட்டினாள் -

நிதானமாய் இரு அத்தியாயங்களை வாசித்துப் புத்தகத்தை மூடினாள் -

"எப்ழி காத்திழுப்பேம்மா.. வாழா வாழம்.."

"தொடரைக் காத்திருந்து வாசிச்சீங்களா மாமா... ஜமீனய்யா?"

"மாமாதா உழக்கு... காலல வழுவியா?"

"நான் ஊர் திரும்பறதுக்குள்ளே இந்த 40 அதிகாரங்களையும் வாசிச்சிடறேன். சரிதான..."

மகிழ்வாய்த் தலையாட்டினார்.

ஆனால் மலை குளித்து உடைமாற்றி மரங்களின் கூடாரம் நடுவே பதுங்கியிருந்த சிறு மண்டபத்தை நோக்கி நடக்க, உள்ளே பதறியது.

சூரியன் தன் வீரியத்தை எல்லாம் தொலைத்த கோபத்தில் சிவந்து தணிந்து கொண்டிருந்தது... பறவைகள் உற்சாகக் கூச்சலுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தன.

"இங்கே ராணிம்மா... வர்ரதில்லையா புவனி?"

"பெரிய ஜமீனவங்க ஜனன நாளு, மரண நாளுப்ப எல்லாரும் வர்ரதுண்டு... பூஜைகூட நடக்கும்மா."

"ம்ம்... அதென்ன உன் கையில் ஒரு சின்னக் கிண்ணம்?"

"பூதான் - உங்க பூக்குடலைல நூத்தியொரு பூவு சரியாய் எண்ணிப் போட்டேன்... ஒருவேளை என் எண்ணிக்கை தப்புன்னா தேவைப்படுமேன்னு கூட ஒரு கைப்பூவு எடுத்தாரேன்..."

"நாளைக்கு என்ன பூ?"

"பவழமல்லிகம்மா... மறுநாளு வில்வ இலைங்களாம்..."

இப்போது அக்குட்டை மண்டபம் கண்ணுக்குத் தெளிவாய்த் தெரிந்தது. நெருங்கி, சற்றுக் குனிந்து உள்ளே போனதும் முதலில் அவள் உணர்ந்தது அச்சிறு கல் மண்டபத்தின் குளுமையைத்தான். பரிவான குளுமை.

முதலில் மங்கலுக்குள் தடுமாறிய பார்வை பின் பழகியது. உச்சியின் சிறு சரிவுத் திறப்புகள் மூலம் வெளிச்சம் கசிந்தது.

நடுவிலிருந்த சதுரத் திண்டில் சிங்கமுக இலச்சினையைத் தவிர வேறெதுமில்லை.

பூஜைக்காக மெழுகப்பட்டிருந்தது தரை - அதில் அம்சமாய் மாக்கோலம். எண்ணெயோடு காத்திருந்த அகல் விளக்கை ஏற்றினாள்.



கண்களை மூடி, தெரிந்த ஸ்தோத்திரங்களைச் சொல்லியபடி மலரை எடுத்துப் படைத்தாள்... ஒவ்வொன்றாய்...

மனம் அடங்கிக் குளிர்ந்தது.

## 7

நான்காம் நாள் அதிகாலை விழிப்புத் தட்டிய போதே உள்ளே உற்சாகக் குமிழ்கள்...

அதற்குக் காரணம் முன் தின இரவு சர்வஜித் தொலைபேசி மூலம் அழைத்துப் பேசியதுதான்... சார்வரிக்கு இன்னும் தொலைபேசியை எடுக்க, இயல்பாய்ப் பேசும் துணிவில்லை. என்றாலும், மூத்த ராணியே.

"பேசம்மா!" என்று கருவியை இவளிடம் நீட்ட, மகாக் கூச்சத்தோடு வாங்கிக் காதோடு வைத்தாள்

"ஹலோ சார்வரி..."

அவன் அழைக்கப் புல்லரித்தது.

"ம்ம்..."

"ரொம்ப சந்தோஷம். நீ இப்ப நம்ப வீட்ல இருக்கறதுல எனக்கு எத்தனை சந்தோஷம் தெரியுமா?"

"ம்ம்..."

"தெரியுமா... எத்தனை... எவ்வளவுன்னு சொல்லேன்..."

"அதெப்படி... தெரியலை..." இன்பமாய்க் குழறியது நாக்கு.

"சரி... நீயும் சந்தோஷமாய் இருக்கியா? நானில்லாமல் ரொம்ப போர் அடிக்குதா?" புருஷனாகப் போகும் உரிமை யெடுத்து அவன் கொஞ்ச, முகம் சிவக்க முணங்கினாள் -

"அப்படி... அப்படி... எல்லாமில்லை..."

"நான் அங்க இல்லாட்டியும் நீ நல்லாதான் இருக்கேன்னா... அது சரியில்லையே... சரி. வீட்ல எல்லாரும் உங்கிட்ட பிரியமாய் இருக்காங்கல்ல..."

"ஆமாங்க..."

"எனக்குப் பூஜை, பரிகாரங்களில் நம்பிக்கை இல்லை, சார்வரி. மந்திரமோ ஸ்லோகமோ சொல்றதால் பிரச்னைகள் தீராது... ஆனால் நமக்குள் துணிவு ஊறும். பிரச்னையைப் பற்றிய நம்ப பார்வை மாறிடும்... அவ்வளவுதான்- நீ இனிமையான பொண்ணுங்கறதை முதல் நாளே புரிஞ்சுக்கட்டேன். கொஞ்சம் வலிமையாகவும் உருவாகறதில் எனக்கு ஆட்சேபணை இல்லை."

"ம்ம்..."

"ஒரு சிறு சந்திப்பிலேயே என் மேல் இத்தனை நம்பிக்கை வைத்து நம்ப வீட்டுக்கு வந்ததுக்கு... நன்றி சாரு..."

இவளுக்குப் பேச நாவே எழவில்லை.

"உன் பாட்டி இருக்காங்களா... கொடேன். அவங்களுக்கும் நன்றி சொல்றேன்."

"அறுவடை சமயம்னு ஊருக்குக் கிளம்பிட்டாங்க..."

"சரிதான். எப்ப வருவேன்னு கேட்க மாட்டியா?"

"ம்ம்... மூணு மாசமாகுன்னு சொன்னாங்க..."

இங்கிதம் அறிந்து மற்றவர்கள் விலகிவிட, ஓரளவு பேச முடிந்தது.

"முன்னே நாட்கள் பறக்கும் - இப்பத் தவழுது... ஊருது... கொடுமைதான்..."

அவன் உருக, நாணமும் பெருமிதமுமாய்ப் புன்னகைத்தாள்.

"அடிக்கடி பேசறேன்... இப்ப வச்சிடட்டுமா?"

"சரி..."

அப்படியே ஓடிப்போய்த் தன் கட்டிலில் குறுகிப் படுத்தவள்தான்... முதன் முறையாக உறவோடு பேசிய பேச்சு...



எத்தனை சுகம்... இனிப்பு... தலையணையை இறுகக் கட்டி அதிலேயே முகம் புதைத்தாள்.

அரைகுறையாய் உறங்கி விழித்தாலும்கூட முகம் வெகு பொலிவாயிருந்தது... அறையிலிருந்த நான்கு கண்ணாடிகளிலும் தன் முகத்தைத் தானே கண்டு அதிசயித்தவள், வாய்க்குள் பாடியபடி குளித்து உடை மாற்றினாள்.

வழக்கமாய்ச் சமையலறையினுள் தயங்கி நுழைபவள் இன்று உரிமையும் உல்லாசமுமாய்ப் போனாள்.

"இன்னைக்கு என்ன சமையல்?... ஓ! வாழைக்காய்ப் பொரியல் செய்யும்போது என்னைக் கூப்பிடுங்க, மாமி!" என்றாள் உத்தரவு போல.

ஆனால் ஜமீன்தாருக்குத் தொடரை வாசித்துக் காட்டும்போது மட்டும் நாக்கு அடிக்கடி மடங்கியது...

அது நாவலின் காதல் பகுதி... காதலர்களின் சம்பாஷணை அவளைக் கூச வைத்தது.

"என்னம்மா வெழ்கமா?" என்று நகைக்க, இவள் தட்டுத்தடுமாறித் தொடர்ந்தாள். சில் பகுதிகளை மனதுள் படித்து ரசித்துவிட்டு, உரக்கப் படிக்காமல் நழுவினாள்.

பெரியவரின் அறையிலிருந்து துள்ளலாய் வெளிவந்தவளைக் கண்ட மூத்த ராணியின் முகம் சற்றுச் சுணங்கியது.

"என்ன?" என்றாள் வெடுக்கென்று.

"ஒன்னுமில்லை... பெரியம்மா..."

"பூஜையெல்லாம் நல்லபடி போகுதுல்ல?"

"ஆமாங்க... நீங்களும் மண்டபத்திற்கு வரலாமே?"

மூத்தவளின் முகம் கருத்தது. "சந்தியா காலத்தில் கன்னிப் பொண்ணுக போறது, பூப் போடறது விசேஷம்... எம்மாதிரி அமங்கலிக்கு அங்கென்ன வேலை?"

"மன்னிக்கணும்... தெரியாமல் ஏதோ..."

"இப்ப எங்கே போற?"

"மாடு கன்னு போட்டிருக்குதானு... போய்ப் பார்க்க..."

"அதுக்கு முன்னே என்னோட வா... அப்பா உனக்கு நகை தந்திருக்கார் - வந்து போட்டுக்கோ - நாலு வளையும் ரெண்டு சன்ன செயினுமாய் உன்னைக் கண்டால் அவர் கண் நிறையலை போலும்..."

அது குற்றசாட்டா அல்லது கிண்டலா எனப் புரியாமலேயே பின்தொடர்ந்தாள் சார்வரி.

தாமிர விளிம்பிட்ட சிறு தேக்குப் பெட்டி அலமாரியுள்ளிருந்து இவளிடம் நீட்டப்பட்டது.

"இது...?"

"வாங்கித் திறந்து பார்..."

பவ்யமாய் இரு கைகளால் பெற்றுக் கொண்டாள்.

"பத்திரம். உட்கார்ந்து திறந்து பார்."

முக்காலியில் அமர்ந்து கவனமாய்ப் பெட்டியைத் திறந்தாள்.

ஜிலுஜிலுவென்று ஜொலித்தன வரிசையாய் அடுக்கப்பட்டிருந்த பொன் வளையல்கள், இருபுறமும் சிவப்பு மாணிக்க வளையல்கள்... அவற்றின் ஊடாகப் பதக்க அட்டிகை ஒன்றும் சுருண்டிருந்தது.

"இதெல்லாம்?"

"உனக்குத்தான் - எடுத்துப் போட்டுக்கோ. நீ நமஸ்கரிச்ச அன்னைக்கு உனக்கு ஏதும் தரலைங்கற ஆதங்கம் அப்பாக்கு... உன் அளவுக்கு இருந்த வளைகளைத் தேடி எடுத்து ஆசாரியிடம் பாலிஷ் போட்டு வாங்கினோம் - இப்பதான் வந்தது..."

"நன்றி..."

"போட்டுட்டு அப்பாவைப் போய் நமஸ்கரி. சந்தோஷப்படுவார்..."

மொட்டையாய் உத்தரவு வந்தது.



உத்தரவின்படியே செய்து விட்டுத் தன் அறைக்குள் வந்தவளுக்குக் கண்ணாடியில் தெரிந்த தன் பிம்பத்தில் பிரமிப்புதான்.

சில பவுன் நகைகள் ஒரு பெண்ணின் தேஜஸை எப்படிக் கூட்டி விடுகிறது? பாட்டி மட்டும் இப்போது தன்னைப் பார்த்தால்...?

விசேஷ உணவும் உபசரிப்பும் அவள் கன்னங்களைச் செழுமைப் படுத்தியிருந்தன. தவிர மதிய வேளையில் புவனி ஏதோ ஒரு எண்ணெயை முகம், உடம்பு என்று தேய்த்து உருவி விடுவாள் - பின்பு ஸ்நானப் பொடி தேய்த்துக் குளித்தால் உடம்பு குளுகுளுவென்று மணக்கும் - அது போக துளி ஜவ்வாது, கூந்தலை நிறைக்கும் மல்லிகை என்று தானே ஒரு பூச்செண்டாகி விடுவதுபோலத்தான் தோன்றும்.

இப்போது தான் பொன்வண்டாகவும் மாறியது உணர்ந்தவள் ஒயிலாகச் சரிந்து கொண்டாள்... இவை எல்லாவற்றையும்விடப் பெரிய மகிழ்வு நேற்றிரவு காதில் பாய்ந்த அன்பு வார்த்தைகள்... கேலிப் பேச்சு.

இந்த ஒரு வாரத்தில்தான் அவளது வாழ்வில் எத்தனை சந்தோஷம்... திணறித் தவிக்குமளவுக்கான மகிழ்வு...!

வெல்வெட் தலையணையில் முகம் புதைத்துச் சிரித்தாள்.

அத்தனை சிரிப்பும் சற்று நேரம் நிறம் மாறப் போவது அறியாமல் வாய் விட்டுச் சிரித்தாள்... பொன்வளையல்களும் சேர்ந்து நகைத்தன.

"பொன்னிடப் பொன்னிடப் பெண்ணுக்கழகு'ங்கறது உண்மைதாம்மா... நீங்க அழகுன்னுதான் ஜமீன்ல பேச்சு... ஆனா இப்ப கொள்ளை அழகு..."

நெட்டி முறித்தாள் புவனி.

"எங்க பாட்டி போலவே பேசறே... பூஜைக்குப் போகலாமா?"

"இந்தச் சேலையும் உங்களுக்கென நெய்ததாட்டமே இருக்குதும்மா..."

தொட்டு நீவினாள் -

புவனி மிகைப்படுத்தவில்லை... அந்த வற்றல் நிறக் கொள்ளேகால் பட்டு மெய்யாகவே சார்வரியைத் தூக்கி நிறுத்தியது.

"போற இடத்துக்குப் பொருத்தமாய் நாம இருக்கணும்டீ, எப்பவும் கலையாத கூந்தலும் சீரான புடவைக் கட்டுமாய் இருந்துக்கோ - அலட்சியமாய் இருக்கக் கூடிய இடமில்லை அது!" என்ற உபதேசங்களுடன் பாட்டி வாங்கித் தந்திருந்த பட்டு அது.

சந்தன நிறக் கரையில் சிறு ஜரிகை மாங்காய் வரிகள் மின்னின. அதற்கு மாணிக்கம் பதித்த பொன் நகைகள் தோது. தலை நிறைந்த ஜாதிமலர்க்கட்டுடன் தன்னை இப்போது பாட்டி...ம்.. அவரும் பார்த்தால்...?

உள்ளே விரிந்த கனவுகள் அவள் பூ முகத்தை மலர்த்தின. இதழோரம் வழிந்த புன்னகையும் பூக்குடலையுமாய் நடந்தவள் தேவதையாய்த் தெரிந்தாள்.

உவகையால் பொங்கிய மனதை வழிபாட்டில் குவித்தாள் -

சாமந்தி மலரை ஒவ்வொன்றாய் ஸ்தோத்திரத்துடன் படைக்க, மனம் ஒன்றி அடங்கியது... சற்று நேரத்தில் முற்றிலும் அமைதியில் அமிழ்ந்தபோதுதான் அந்த சப்தம்... அவளைத் தொட்டது... உலுக்கியது.

சன்னமான உறுமல்...!

எங்கோ கேட்பதான சிம்ம கர்ஜனைபோல...?

அந்த சப்தம்... சிம்ம கர்ஜனை... ஆரம்பித்தது போலவே சட்டென அடங்கியும் போனது.

கையிலெடுத்த புஷ்பத்துடன் விரைத்தவளின் முகத்தில் வியர்வை அரும்பியது... தொண்டையில் உலர்வு...

புவனியை அழைக்கலாம் எனில் குரலே எழவில்லை!

பூஜை தடைப்படாது என்பதும் உறைக்க, சொச்ச மலர்களைப் படைத்தாலும், புத்தி செய்யும் காரியத்தில் இல்லாமல் கேட்கக் கூடிய ஒலிக்காகக் காத்துக் கவனித்திருந்தது.



இங்கே எப்படிச் சிங்கத்தின் கர்ஜனை கேட்கக்கூடும் என்று ஆராய்ந்தது...

பூஜையை முடித்து வெளியே வந்தவளுக்கு நெடுக ஓடியவளைப் போல மூச்சிரைத்தது... வெளியே புவனியைக் காணவில்லை எனவும் மேலும் உடல் பதறியது.

"புவனி...புவனி..." ஏறக்குறையக் கூச்சல்தான்.

"இதோங்கம்மா..." ஒரு பூவரச மரத்தின் பின்னாலிருந்து ஓடிவந்தாள்.

"எங்க... எங்க போயிட்டே?"

"பக்கத்துலதாம்மா..."

"இனி இங்கே... படிக்கட்டிலேயே இரு..."

"ஆகட்டும்மா... என்னம்மா வேர்த்திடுச்சு..."

"உனக்கு ஏதும் சத்தம் கேட்டதா?"

"சத்தம்னா... இல்லீங்களே!"

"சரி... போலாம்..."

வழக்கமான அன்ன நடையும், இனிய பேச்சும் இன்றில்லை.

மௌனமாய் விரைத்த எஜமானியைக் குழப்பமும் குற்ற உணர்வுமாய்த் தொடர்ந்தாள் புவனி.

8

"இந்தா புவனி... இனி எம் புடவையை மடிக்காதே..."

சுள்ளென்று வந்த உத்தரவில் பயந்து நின்றாள் பணிப்பெண்.

"பிறகென்ன... எனக்கும் என்னதான் வேலை? இப்பவே உடம்பு கொஞ்சம் உப்பிட்டதாய்ப் படுது..."

குனிந்து தன்னையே பார்த்துக் கொண்டாள் சார்வரி.

புவனியும் தளர்ந்து வேலையைத் தொடர்ந்தாள்.

"இன்னும் பூசின மாதிரி ஆகணும்மா நீங்க... அப்பத்தான் பூஜையறையில் இருக்கிற லக்ஷ்மியாட்டம் இருப்பீங்க..."

"இப்ப எப்படியிருக்கேன்?"

"சின்னலக்ஷ்மி... கொஞ்சம் பூரிச்சா... மகா..லக்ஷ்மி.." கையை விரித்துக் காட்ட, இருவருக்கும் சிரிப்பு.

"பாலை எடுத்துட்டு வரேம்மா..."

"வேணாம் புவனி... நெய்யோட இட்லி, குருமா, பாதுஷான்னு எட்டு மணிக்குச் சாப்பிட்ட வயிறு 'திம்'னு இருக்குது."

"இப்பதான் மணி ஒம்பதைத் தாண்டியிருச்சேம்மா... பெரியராணி உத்தரவு."

"ம்ம்..."

புவனி போனதும் சார்வரிக்குள் மும்முரமான சிந்தனை -

'புவனியை இன்றிரவு தன்னோடு தங்கச் சொல்லலாமா?' வந்த முதல் நாளன்று புவனி கேட்டாள்தான். 'ராணியம்மா என்னைய இங்கேய வேணும்னாப் படுத்துக்கச் சொன்னாங்கம்மா... அதாவது உங்களுக்குத் தேவைன்னா -'

'நானென்ன குழந்தையா - தனியாய்ப் படுக்கப் பயப்பட? அதெல்லாம் வேணாம்... பாட்டி வீட்டிலேயும் ராத்திரி ரொம்ப நேரம் வாசிச்சிட்டு என் அறையிலே தனியாத்தானே படுத்துக்குவேன்!' என்று சொல்லியாகி விட்டது.

அன்றைக்கிருந்த நிலை அப்படி.

இன்றைக்கு உதறலெடுக்கிறது...!

பாதாமும் கற்கண்டுமாய்க் கரைத்த பாலை வெள்ளிக் குவளை தளும்பக் கொண்டு வைத்தாள் புவனி.

"நா... வரட்டுமாம்மா...?"



உத்தரவு கேட்டவளைச் சார்வரி ஆச்சரியமாய் ஏறிட்டாள்.

"என்ன அவசரம்? வழக்கமாய் நான் பாலைக் குடிக்கற வரை இருந்து தம்ளரை எடுத்துட்டுதானே போவே?"

"இன்னைக்கு வீட்ல விருந்தாடி வந்திருக்காங்கம்மா..."

நுரைத்த பாலை உறிஞ்சியபடி கேட்டாள்.

"யாரு?"

"எங்க அத்தைம்மா - எங்கப்பாருடைய ஒன்னுவிட்ட அக்கா!" புவனியின் முக நாணம் கூடுதல் விவரங்களைச் சொன்னது.

"என்ன, தன் மகனுக்கு உன்னைப் பொண் கேட்க வந்திருக்காங்களா?"

"அது... எப்பவோ பேசி முடிவான விஷயம்மா..."

"அடடே... அதான் இத்தனை நாளாய் எங்கிட்ட ஏதும் சொல்லலியா?"

செல்ல மிரட்டல்தான்... ஆனால் சட்டென மற்றவள் சார்வரியின் அருகே மண்டியிட்டு விட்டாள்... கண்கள் பனித்து விட்டன.

"நான் சும்மா சொன்னேன், புவனி... எழுந்திரு... தப்பா எடுத்துக்கிட்டியா?"

"உங்களைத் தப்பா நினைக்கக் கூடுமாம்மா? அப்படிக்கான தங்கமான மனசில்லையா உங்களுக்கு? வேலைக்காரிட்ட பேசற மாதிரியா பேசறீங்க... ஆனாக்க நானும் அத்தனை உரிமை எடுத்து, கண்டதையும் பேசக் கூடுமாம்மா?"

"ஆக உனக்கு நிச்சயமான விஷயத்தை எங்கிட்ட சொல்லலை.. ம்ம்?"

"ஆமாங்கம்மா... அவரைக் காணவுந்தான் நானு கொஞ்சம் தள்ளிப் போனேன்... அதாம்மா இன்னைக்குப் பூஜை நேரத்துல... மன்னிச்சிரனும்..."

"எப்ப கல்யாணம்?"

"அவருக்குச் கொஞ்சம் நிலபுலம் உண்டுங்கம்மா... அறுவடை சமயம் கையில நிக்கிற காசுல கல்யாணம் பண்ணிடலாம்னு."

நாணிக் குனிந்தாள்.

"அப்ப மறு மாசமே கல்யாணமா?"

"உங்க ஆசீர்வாதத்துலே..."

"நான் அத்தனை பெரியவளில்லையே. கடவுள் உங்ககூட... நம்மகூட இருப்பார் புவனி."

கும்பிட்டவள் காலிக் குவளையை எடுத்துக்கொண்டாள்.

"அப்ப நா வரட்டுமாம்மா?"

"வா..."

"வழக்கம்போல விடிஞ்சதும் வந்திருவேம்மா - வீடு பக்கத்துலதான்..."

"ஆகட்டும்."

"பாலு நல்லாயிருந்ததாம்மா..."

"ம்ம்... கொஞ்சம் வித்தியாசமாய் இருந்தது."

"பாதாமோட துளி கசகசா சேர்த்து அரைச்சாங்க... உடம்புக்குக் குளுர்ச்சி... நல்ல உறக்கம் வருமாம்..."

"ஓஹோ..."

நல்லது - ஆழ்ந்த உறக்கம் இன்று அவசியம்தான். இல்லையெனில் குழப்பத்தில் புரண்டு புரண்டு தவிக்க நேரும். தான் வாசிக்கச் சில நாவல்களை எடுத்து வைத்திருந்தாள் - அவற்றில் ஒன்றை வாசிக்க ஆரம்பித்தவள் சற்றுநேரத்திற்கெல்லாம் உறக்கம் வர, அது கலைந்து போகக்கூடாதென்ற ஜாக்ரதையில் முகம் கழுவிக் கொள்ளாமல் அப்படியே போர்வைக்குள் சுருண்டாள்.

கண்கள் செருகி மூடின...

ஆழ்ந்த உறக்கத்தையும் மீறிச் சன்னமான கர்ஜனை... ஒலி!

பதறி விழித்தாள்... கனவில் ஒலிகளுமா கேட்கும்?



சிறு மண்டபத்தினுள் கேட்ட கர்ஜனை பிரமையா நிஜமா?

அரைத் தூக்கத்தினுள் குழப்பமான சிந்தனை ஓட்டம்... மண்டபம் இருந்தது அடர்ந்த தோப்பில் என்றாலும் அதொன்றும் நடமாட்டம் இல்லாத காடு அல்ல. சுற்றிலும் கோட்டைச் சுவரும், ஆள் நடமாட்டமும் உள்ள, பயிர் செய்யப்படும் நிலம் - ஆக அங்கு சிங்கம் உலவித் திரியச் சாத்யமில்லை.

தன்னையே தேற்றியவளை உறக்கம் சற்று வலிமையாகவே வந்து அழுந்த அணைத்தது.

திருப்தியாய் அதன் பிடிக்குத் தன்னை விட்டுக் கொடுத்தாள்... உலகின் பிடியிலிருந்து விடுபட்டாள்.

ஏன் விழிப்புத் தட்டியதெனத் தெரியவில்லை.

ஆனால் ஏதோ சரியில்லை எனப்பட்டது...

அசையாமல் விழிகளை மட்டும் அறையைச் சுற்றவிட்டாள்.

விடிவிளக்கின் மங்கின ஒளியில் அறையின் வரிவடிவங்கள் பிடிபட்டன. மறுமுறை அறையை அலசியபோதுதான் உடல் விரைத்தது... விழிகள் அச்சத்தால் நிலை குத்தின.

மறுபடி அதைப் பார்க்க மாட்டேன் என்ற தினுசில் விழிகள் மூடிக் கொண்டன. ஆனால் புத்தி சற்று சுதாரித்து, 'இதுவும் பிரமைதான்- கண்ணைத் திறந்தால் ஏதும் இராது - பாரேன்!' சமாதானப்படுத்தியது.

துளித் துளியாய் விழி பிரித்தாள்...

கதவின் அருகே நிச்சயம் ஒரு உருவம் நிற்கிறது...!

யார் அல்லது எது?... நெஞ்சம் படபடக்க உன்னித்தாள்.

இது எப்படிச் சாத்தியம்?

மனித உருவம்தான் ஆனால்... சிங்கத்தலையுடன்... நரசிம்ஹ அவதாரம் போல...!

இது நிச்சயம் கனவுதான்...

கிள்ளிப் பார்க்க, வலித்தது... பயமும் எகிறியது...!

படுக்கையைச் சுற்றித் தொங்கிய கொசுவலையின் மசமசப்பைத் தாண்டித்தான் என்றாலும் விழிகள் இருளுக்குப் பழகப் பழக உருவம் தெளிவானது.

பழுப்பான உடல்... அல்லது அது இறுகப் போர்த்திய அங்கியா...? பின்னோக்கி நகர்ந்த உருவம் அவளையே பார்த்தது... பின் கதவு வழியே நழுவி மறைந்தது...!

ஒரு முழு நிமிடத் திகைப்பிற்குப் பிறகு சார்வரி அலறினாள்... தன் தொண்டைக்கு அத்தனை வலுவான அலறல் சாத்யமா என்று அவளே திகைக்குமளவு பெரிய கதறல்...

"யாராச்சும் வாங்களேன்... சிங்... திருடன்..."

சில நொடிகளில் மாடியின் கீழ்ப்பகுதியில் விளக்குகள் எரிந்தன. பேச்சும், மனிதர்களின் நடமாட்டச் சத்தமும் அவளைப் பலப்படுத்த, படுக்கையிலிருந்து எழுந்தாள் - அச்சத்தில் சுருண்டிருந்த புத்தியும் கூடவே நிமிர்ந்தது -

அவளது அறைக்கதவு திறந்தபடியே கிடந்தது...

ஆகக் கண்டது பிரமை அல்ல!

நேற்றிரவு படித்தபடியே படுத்த தான் கதவைத் தாழிடவில்லை போலும் -

யாரோ உள்ளே வந்து தன்னை அச்சுறுத்திவிட்டு நழுவி விட்டார்கள்...

அதற்கு விரிந்திருக்கும் கதவே சாட்சி...

கதவு தாழிடப்படா விட்டாலும் மூடியிருந்ததில் சந்தேக மில்லை. போகும்போது புவனி கதவைச் சாத்திவிட்டுத்தான் போனாள்... ஆக வந்தது மனிதன்தான்...

"என்னம்மா..."

சமையல் கட்டருகே படுத்திருக்கும் இருவர் மேலேறி வந்திருந்தனர். அவர்களைக் கண்டதும் அவளது தளர்ந்த உடலில் சற்றுத் தெம்பேறியது.



"யாரோ ஒருத்தன் என் அறையிலே... நான் கத்தினதும் ஓடிட்டான்."

"எந்தப் பக்கம்மா?"

"ஆளுக்கொரு புறமாய்ப் போய்ப் பாருங்களேன்..."

கைப்பிடியிட்ட தாழ்வாரம் போல நீண்ட பாதையின் ஒருபுறம் மட்டுமே அறைகள்... ஆனால் ஒருபுறமிருந்த பல அறைகளில் ஏதிலும் வந்தவன் புகுந்திருப்பானா?

இரு ஆண்களும் விலக, மாடிப்படியில் யாரோ இறங்கியும், ஏறியும் வருவதான அரவம் கேட்க, இவள் தன் அறைக்குள் பம்மினாள்.

வந்தது மூத்த ராணிதான் -

"என்னம்மா சார்வரி... எதுக்குக் கத்தினே?"

இந்நிலையிலும் குரலில் சற்றுக் கடுகடுப்பு இருந்தது.

"என் அறையில் யாரோ வந்து..."

"என்னாச்சு...?" தன் தாயின் அருகே வந்த சுரேந்தரும் கேட்டான். குடும்பத்தில் அவன் மட்டுமே இளைஞன் என்பதால் அவனது அறை இரண்டாம் மாடியில்...

"அறையிலே யாரோ புகுந்துட்டாங்களாம்..."

"சிங்க முகத்தோட... ஒருத்தன்... எதுவோ..."

இவள் குழற, தாயும் மகனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"நிஜமாய்த்தான் பெரியம்மா... பழுப்பாய் அங்கி போர்த்தினாப்பல இருந்தது... சிங்கத் தலையா... முகமூடியான்னு...?"

"ஷ்ஷ்..." வேலையாட்கள் திரும்ப வருவது கண்ட ராணி எச்சரித்தார்கள்.

"யாரையும் காங்கலியேம்மா..."

கைவிரித்தார்கள்.

'ஒருவேளை மிரட்ட வந்தது இவனாய் இருக்குமோ?' என்ற சந்தேகப் பார்வை.

சற்றே கசங்கிய வேட்டி, ஜிப்பாவுடன் இருந்த சுரேந்தரின் முகம் தெளிவாகவே தெரிந்தது.

புவனியோடு பேசிப் பல விஷயங்களை ஓரளவு தெரிந்து, அதையும் மீறிப் புரிந்தும் கொண்டிருந்தாள் சார்வரி.

ஜமீனின் வாரிசு என்ற வகையில் சொத்துக்களின் ஏகபோக உரிமை சர்வஜித்திற்குத்தான். இங்கேயே தங்கி வளர்ந்தாலும் மகளின் மகனான சுரேந்தருக்கு அதில் பங்கில்லை. அந்த ஆற்றாமையில்தான் தாயும் மகனும் தன்னிடமிருந்து சற்று ஒதுங்கியே இருக்கிறார்களோ?

தவிர, சிறிது மூத்தவனான சுரேந்தருக்கு இன்னும் மணமுடியாத நிலையில் இளையவனுக்கு இணையாகத்தான் இங்கு வந்ததும்கூட நெருடலாயிருக்கலாம்...

'காலைப் பார்த்தியா?'

திடீரென்று பெரியராணி கேட்டார்கள்.

"யார் காலை?"

"அறைக்கு வந்தது நிஜமில்லை... மாயப் பிசாசாய் இருக்கும். அதான் காலைக் கவனிச்சியாங்கறேன்..."

அத்தனை கலக்கத்திலும் சார்வரிக்குச் சிரிக்கத் தோன்றியது ஆனால் அதற்கான தெம்புதான் இல்லை.

"சிங்கமுக நாதர் உக்கிரமானவர்... அதான் யாரும் துணிஞ்சு நெருங்குவதில்லை. நீ தொடர்ந்து சந்தியா பூஜை செய்தியா... அதான்..."

மண்டபத்தில் கேட்ட கர்ஜனையைப் பற்றிக் கூறவா என்று யோசித்தவள் வேண்டாம் என்று முடிவெடுத்து அடக்கிக் கொண்டாள்.

அதையும் கேட்டால் பூஜை தடைப்படக்கூடும்...



எல்லாவற்றையும்விட 'அவரின்' சௌக்கியமும் தீர்க்காயுளுமே முக்கியம்.

"இன்று என்னோட வந்து படுத்துக்கோ சார்வரி... விடிஞ்சதும் உனக்குமே மனம் தெளிஞ்சிடும்... நடுராத்திரி வரை சுரேந்தர் அறையில் உட்கார்ந்து எழுதுவான், வாசிப்பான்... அதான் உன்னை எங்கூட வந்து தங்கக் கேட்கலை... ஆனால் இனி..."

"இன்று மட்டும் உங்களோட இருக்கிறேன் பெரியம்மா... நாளை என் அறையிலேயே தாழிட்டு ஜாக்ரதையாய் இருந்துக்கறேன்... இன்னைக்கு அவர்... உங்க மகன்..."

"அவன் அதிசயமாய் இன்னைக்கு சீக்கிரமே படுக்கப் போயிட்டான்... வா.. படுக்கலாம்."

"ம்ம்.." தன்னுள் அலைமோதும் சிந்தனைகள் சந்தேகங்களுடன் பெரியவளைப் பின்தொடர்ந்தாள் இவள்.

## 9

இரண்டு இரவு, பகல்கள் கர்ஜனையோ, நள்ளிரவில் மாயத் தோற்றங்களோ இன்றி நகர, அவளின் மனம் தேறியது.

தன் கற்பனைதான் அத்துமீறி விட்டதோ என்று எண்ணி நாணும் அளவிற்குத் தேறியது...! அதேசமயம் தன்னைச் சுற்றி நிகழ்ந்த மாற்றங்களையும் உணர்ந்தாள்.

சுரேந்தர் தன்னிடம் இயல்பாகப் பழக முயன்றது புரிந்தது.

"நாளை சித்தி... அதான் இளைய ராணி வர்ராங்க... போகும்போது உங்களுக்குச் சீட்டாட்டத்தில் ஓரிரு ஆட்டமாவது கற்றுத் தரச் சொல்ல... நான் என் வேலையிலேயே இருந்துட்டேன்..."

"நிறையப் படிப்பீங்க போல? பெரியம்மா சொன்னாங்க..."

"ஆமா...டாக்டரேட் பட்டத்திற்கு முயல்றேன். ஜமீன் பரம்பரை, அவர்களைச் சுற்றியிருக்கும் பிரமிப்பு, பிரச்னைகள் - இதுதான் என் தீஸிஸ்ஸின் கரு - கல்லூரியில் வரலாறும் தத்துவமும் கற்றதால்

ஓரளவு சீக்கிரமாகவே போகுது… முடிஞ்சதும் நல்ல யுனிவர்சிடியில் ஆசிரியராய்ச் சேரணும் - அதுதான் என் ஆசை."

"ஆகட்டும்…" பவ்யமாய்க் கேட்டுக் கொண்டாலும், அவனைப் பற்றிச் செய்திருந்த தன் அனுமானங்கள் ஆட்டம் காண்பது புரிந்தது.

"தாத்தா அறையிலேயே இருந்து விளையாடலாமே… நாம் அங்கேயிருந்தால் அவருக்கும் உற்சாகம். உங்களோடு அவர் செட் சேர்ந்து ஆட, நீங்களும் ஆட்டத்தைச் சுலபமாய் கிரஹிச்சுக்கலாம்."

ஆக காலை ஓரிரு மணி நேரங்கள் பெரியவர் அறையில் கழிந்தது… ஆட்டத்தின் அடிப்படையை, சில நுட்பங்களைக் கற்றவளின் மூளை முழுக்க அதில் பதியவில்லை.

முந்தின இரவின் அதிர்ச்சி அவளை வலுவாய் உலுக்கியிருக்க, அத்தனை சுலபமாய் அதை மறந்து மீள முடியவில்லை.

அக் குழப்பத்துடன் விழித்தவளின் பார்வை சுரேந்தரின் முகத்தைக் கவனித்தது -

அவனது கண்களும் தன்னையே சற்று யோசனையாய் ஆராய்வது புரிந்தது - ஏனிப்படிப் பார்க்கிறான்?

'பாவம் இப்பெண், புது வீட்டின் தனிமையில், சிங்கநாதரின் பூஜையில் அரண்டு விட்டாள்' என்றா…?

'நான் பயமுறுத்தியது எந்த அளவு பலன் தருகிறது - அல்லது அஞ்சி ஓடிவிடுவாளா - இல்லை இன்னும் தாக்குப் பிடிப்பாளா?' என்ற நோட்டமிடுதலா?

ஆனால் கல்வியிலும், அதைக் கற்றுத் தருவதிலுமாய் நாட்டம் உள்ளவன் இத்தனை தரம் குறைந்து நடப்பானா… என்ன?

ஒருவழியாக அவள் ஒரு ஆட்டத்தில் வென்றபின் அல்லது அவன் அவளை வெல்லவிட்ட பின் எழுந்தாள் -

"ச்செஸ் ஆழக் கற்றுக் கொள்ளம்மா…" பரிந்துரைத்த பெரியவரிடம் -



"முதல்ல எளிய ஆட்டங்கள் பரிச்சயமாகட்டும் தாத்தா - பிறகு சிரமமான கேம்ஸ் போகலாம்… இப்ப உங்க தொடர்கதை வாசிப்பு நடக்கட்டும்!" - என்றபடி வெளியேறினான் சுரேந்தர்.

அன்று மாலை பூஜைக்காக நடந்த அவளது கால்கள் மிகத் தயங்கின. நேற்றிரவின் சம்பவம் புவனியை எட்டி, அவள் சார்வரியிடம் வந்து குரல் தாழ்த்தி விசாரித்தாள்.

"என்னம்மா… நேத்து ஏதோ அரண்டுட்டீங்களாமே?"

"ஆமாம் புவனி… சிங்க முகமும் அங்கியுமாய் ஒரு உருவம் என்னறையில் வந்து நின்னுது…"

"ஐயோ… தாழிட்ட அறைக்குள்ளே எப்படி…?"

"தாழிடலையே… நீ கதவைச் சாத்திட்டுப் போனே… எடுத்து வாசிச்ச நானும் அதை மறந்து விளக்கை அணைச்சதும் தூங்கிட்டேன்…"

"அப்ப நிஜமாவே யாரோ உள்ளார புகுந்துட்டாங்களா?"

"பின்னே… நீயும் நான் பிரமையில் உளர்றேன்னு நினைக்கறேயில்லை…"

வருத்தமும் சலிப்புமாய்க் கேட்டாள்.

"அதில்லம்மா - புது இடம்… சிங்கநாதர் பூஜைன்னு குழம்பியிருப்பீக…"

"கனவுக்கும் நிஜத்துக்கும் வித்தியாசமுண்டு, புவனி… அது எனக்குத் தெரியும்…"

"அப்ப அறைக்குள்ளார வந்தது…?"

"மனுஷன்தான்… ஆவியோ சாமியோ இல்லை."

"அதெப்படிம்மா? பூஜையில குத்தம் குறை நேர்ந்ததுன்னா…"

"படைச்ச புஷ்பம், இலையில் ஒன்னு கூடி, குறைஞ்சிருக்கலாம்… ஆனால் படைச்ச எம் மனதில் பழுதில்லை, புவனி… மனமார அவருக்காய், இந்த ஜமீனுக்காய், இதன் பெரியவங்-

களுக்காய் வேண்டிகிட்டேன்... தெய்வமே அதாவது சிங்கமுக நாதரே என்னைப் பழி கூறி மிரட்டனுமானால் அதற்குக் கதவு தாழிடாமல் இருக்க வேண்டிய அவசியமென்ன? பூட்டிய கதவை மீறியும் அவர் வரலாமே... என்ன?"

கண்கள் புரிதலில் உருளத் தலையாட்டினாள், புவனி.

"அட... ஆமாங்கம்மா..."

"ஆக, யாரோ என்னைப் பயமுறுத்த முயற்சிக்கிறாங்க... அது விளையாட்டா வினையான்ரதுதான் தெரியலை..."

"அப்படி என்னம்மா ஒரு விளையாட்டு? நட்ட நடுசாமத்துல சிங்கத்தலையோட வந்து நிக்கற... முத்தின வினையில்லா?"

ஆங்காரமாய்த் தனக்காய்ப் பேசியவளைக் கட்டிக் கொள்ள வேணும் போலிருந்தது சார்வரிக்கு! தன்னை நம்பும் ஒரு தோழமையில் மனம் தெம்பு பெற்றது. ஆக முன்பு பூஜையின்போது கேட்ட சன்னக் கர்ஜனை பற்றி இப்போது சொல்ல வேண்டாமென்று முடிவு செய்தாள்... ஒரேயடியாய்த் தானும் குழம்பிப் பிறரையும் குழப்பி ஆகப் போவதென்ன?

"புவனி, பூஜையப்ப, நீ வாசல்லேயே உட்கார்ந்துக்கோ..."

"ஆவட்டுங்கம்மா..."

உடன் நம்பிக்கையான ஒரு தோழி இருக்கும் துணிவில் சார்வரி வழிபாட்டில் மனமொன்றி இறங்கினாள்.

அன்று போலவே மறுநாளும் தடங்கல்கள் இன்றிக் கழிய, அதில் குருவய்யா வந்து பேசியதுதான் ஒரு மாறுதல்.

அவர் அவளிடம் வெளிப்படையாக ஏதும் கேட்கவில்லை எனினும் தைரியம், நம்பிக்கை, மகிழ்வு பற்றியே பேச்சிருந்தது.

"அபர்ணாவும் வந்திருக்காம்மா... பெரியவர் அறைக்குப் புஸ்தகங்கள் எடுக்கப் போயிருக்கா..."

"அவங்களைப் பார்த்துப் பேச வாய்க்கலை... சந்திச்சதோடு சரி."



"உனக்கும் இங்கே பொழுது சரியாயிருக்கும்... ம்ம்..?"

மெல்லிய கொலுசின் மணியொலியோடு அபர்ணா வந்தாள்... இவளைப் பார்த்துத் தயக்கமாய் ஒரு புன்னகை.

"அபர்ணா, உன்னைப் போலவே சாருவும் வீடே கதின்னு கிடக்கற குழந்தை போல... புஸ்தகம் படிக்கறதுன்னா உன்னைப் போலவே ரொம்பப் பிரியமாம்..."

இரு பெண்களும் புன்னகையோடு நின்றார்கள்.

"பெண்கள் வருங்காலத்துல வெளிவாசலும் போய்ப் பழகணும்மா - வீடே போதும்னு இருந்தா வெளி உலகம் பழகாது... புரியாது. வெளியே போய் வீட்டுக்கான மளிகை, காய் வாங்கறது, ஒரு புடவையைத் தேர்ந்தெடுக்கறது - அதுவும்கூட அனுபவம்தான். சின்ன ஜன்னல்தான் - ஆனா அதன் வழியே கிடைக்கற காற்று, பார்க்கும் காட்சி புத்துணர்வுதானே! என்ன?"

"உண்மைதான்யா..."

"சந்தைக்கு நம்ப வீட்டுப் பெண்கள் போறதில்லை... ஜவுளிகூட இங்கேயே வரும்... நான் எம் மகளையும் சேர்த்துதான் சொல்றேன்... ரொம்ப அமைதியானவ - பெண்கள் வாய் விட்டுப் பேச, வாயாரச் சிரிக்கப் பழகணும்மா..."

"சிரிச்சால் எங்க பாட்டி திட்டுவாங்க..."

நகைத்தார் குருநாயகம்.

"வாய்விட்டுச் சிரிச்சா நோய்விட்டுப் போகுமேம்மா... பெண்கள் மனசைப் பொத்தி, பூட்டி வைப்பதால்தான் ஏதேதோ மனோ வியாதிகள், பிரமைகள் அவங்களைப் பிடிச்சுக்குது..."

அவர்தன்னைத்தான் குறிப்பிடுகிறாரோ என்ற சங்கட உணர்வு சார்வரிக்குள்.

"பொம்பளை சிரிச்சால் போச்சு... புகையிலை விரிச்சாப் போச்சுங்கறது எங்க பாட்டிக்குப் பிரியமான பழமொழி. அடிக்கடி சொல்லுவாங்க..."

"பழமொழி சரி... நாம அதைத் தப்பார்த்தம் பண்ணிக்கறோம் - பெண் திருமகள், மலைமகள், கலைமகளின் வடிவம்... அவள் இருக்கும், அவளை மதிக்கும் இடத்தில் செல்வம், வீரம், கல்வி எல்லாம் நிறைக்கும். இந்தக் கோணத்தில் ஒரு பெண் மகிழ்ந்து சிரித்தால் அங்கு துன்பம், இடர், வறுமை எல்லாம் விலகும்... போச்சுங்கறதுதான் பொருள்..."

சார்வரி விழி விரியக் கேட்டிருந்தாள்.

பல சிறந்த எழுத்தாளர்களின் புத்தகங்களில் இத்தகு கருத்துக்களை அவள் வாசித்ததுண்டு என்றாலும் ஆணித்தரமாய் எதிரே ஒருவர் நின்று பேசுகையில் தனி சந்தோஷம்... ஒருவகையான பிரமிப்பு...!

"பொன்கள் நகையும் பட்டுமாய் இருந்தால் போதாதம்மா... அறிவும், அன்புமாய் இருக்கணும்... மனசு நிறைஞ்சு சிரிக்கணும் - அவ சிரிச்சா எல்லாப் பீடையும் போச்சு போ...என்ன, சரிதானே?"

சற்றே முளைத்துச் சுருண்டிருந்த தாடியை நீவியபடி அவர் குனிந்து கேட்க சார்வரி உற்சாகமாய் ஆமோதித்தாள்.

அவளுக்குக் குருநாயகத்தைப் பிடித்துப்போனது...

எத்தனை உற்சாகமான பேச்சு... அவர் மகளும் இப்படியே இருந்திருந்தால் நன்றாய் இருந்திருக்கும்... ஆனால் அபர்ணா ஒரு கட்டுப் புத்தகங்களை மார்போடு அணைத்தபடி சற்று மருட்சியோடுதான் நின்றிருந்தாள்.

கமலா ஆரஞ்சின் நிறத்தில் மெல்லிய புடவை அவளது வாளழத்தண்டு மேனியை அழகாய் மூடியிருந்தது. கைகளில் பவள வளையல்கள் - நெற்றியில் அழுத்தமாய்க் குங்குமம்... இத்தனையும் மீறி அவளது கண்களில் சோர்வு... ஒருவிதத் தயக்கம்...

இத்தனை பழகிய இந்த மாளிகையில் அபர்ணா ஏன் மருள வேணும்? இத்தனை முற்போக்கான கருத்துக்கள் கொண்ட ஒரு தந்தையின் வளர்ப்பில் அவள் ஒரு உற்சாக ஊற்றாய் அல்லவா பீறிட வேணும்?



மூன்றாம் நாள் இளைய ராணி வந்துவிட, மாளிகைக்குத் தனிக் களை சேர்ந்தது. உடன் வந்திருந்த தன் மகள், மகனை அறிமுகப்படுத்தினார்கள்.

"இவன் பிரதீபன் - பெரியவன் - பட்டப் படிப்பு கடைசி வருஷம், நிலபுலத்தையும் கவனிப்பான். இவ பிரசன்னா, எஸ்.எஸ்.எல்.சி- படிக்கறா..."

"சந்தோஷம்மா..."

"நீ சந்தோஷமாயிருக்கேல்ல? ஒரு வாரமாச்சே... சர்வஜித் மூணுதரம் ஃபோன் போட்டுட்டானாமே..."

வெட்கச் சிரிப்புடன் தலை குனிந்தாள்.

"பிரசன்னா கடைகளுக்குப் போகணும்னா - பிரதீபனுக்கு நெல்லை டவுனில் வேலையிருக்குது - முதல்ல இங்க வந்து உன்னையும் அழைச்சிட்டுப் போகச் சொன்னேன்."

"ஆமக்கா... அம்மா உங்களைப் பற்றி அத்தனை சொன்ன பிறகு உங்களைப் பார்க்க ஒரே ஆசை..."

"எத்தனை சொன்ன பிறகு?"

சற்று ஒத்த வயதுள்ளவளைப் பார்த்த உற்சாகத்தில் கேட்டாள் சார்வரி.

"ஒரு கோடியே ரெண்டு லட்சத்துப் பத்துத் தரம் சொன்ன பிறகு..."

பிரசன்னா ராகமிழுக்க, எல்லாருக்கும் சிரிப்பு.

"சரி... கிளம்பும்மா..."

"கடைக்கா... எனக்குத் தேவை ஏதுமில்லையே!"

"போய்ப் பார்த்தால்தானே கடைகள்ள என்னென்ன இருக்குங்கறது தெரியும்க்கா..."

"அதெல்லாம் இல்லாமலும் நாம் வாழலாம்ங்கறது புரியும்!" பிரதீபன் கிண்டலடித்தான்.

"நாம சேர்ந்து போகலாங்கற குஷி போதுமே! மறுக்காதீங்கக்கா.."

"போயிட்டு வாம்மா - வீட்டிலேயே அடைஞ்சு கிடக்காதே..."

"ஆகட்டும்மா..."

கிளம்பும் நேரம் இளையராணி இவளிடம் சில நூறுகளைத் தந்தார்.

"தேவைப்பட்டதை வாங்கிக்கோ, சாரு!" என்றபடி.

"இத்தனை பணம் எதுக்கும்மா..."

"எப்பவாவதுதானே வெளியே போறோம் - பாட்டிக்கும் ஏதாவது வாங்கிக்கோ..."

"நல்லதும்மா!" - சந்தோஷமாய்ப் பெற்றுக் கொண்டாள்.

"பிரதீபா... அஞ்சு மணிக்குள்ள வந்திடணும் - பூஜை நேரமது..."

பெரியவரிடமும் விடைபெற்றுக் கிளம்பினார்கள்.

டவுன் கடைகளில் உற்சாகமாய் ஓடித் தேடித் தன் பையை நிரப்பினாள் பிரசன்னா. இவள் நிதானமாய்ப் பார்த்தாள்.

'மாடர்ன் ஸ்டோர்ஸ்' ஜவுளிக்கடையின் வாசலில் நின்ற பொம்மை கட்டியிருந்த புடவையை ஆவலாய்ச் சார்வரி பார்ப்பதைக் கண்ட கடைப் பையன் -

"வாங்கம்மா!" என்றான்.

அது இவள் கட்டியபோது 'வெகு அழகு' என்று புவனி பாராட்டிய அதே நிறப் புடவை. வற்றல் நிறத்தில் சந்தனக் கரையும் சரிகை மாங்காய்களுமாய்...

"எம்பது ரூபாய்தாங்க... ஸ்பன் பட்டுங்க... ஆனா நல்லா உழைக்கும்."

திருமணமாகப் போகும் புவனிக்கு இதைப் பரிசாய் அளித்தால் என்ன?

வாங்கிக் கொண்டாள்.

பாட்டிக்குச் சால்வை, மாளிகைக்குத் தரமான சாம்பிராணி, சந்தன ஊதுபத்திகள், வேலைப்பாடான கண்ணாடிக் குவளைகள்



என்று சிலது வாங்கிய பின், சமயத்தோடு வீடு வந்தவள், வீட்டிற்கானவற்றை இளையராணியிடம் தந்துவிட்டு விரைந்து குளித்துத் தயாரானாள்.

தன் அறையில் கண்ட உருவத்தைப் பற்றி இளைய ராணியிடம் தான் சொல்வதா வேண்டாமா என்ற குழப்பம் அவளைக் குடைந்தது.

தனியே உட்கார்ந்து பேசச் சமயம் வாய்த்தால் சொல்லிக் கொள்ளலாம் என்று அப்போதைக்கு முடிவெடுத்தாள். பூஜைக்குக் கிளம்பினாள்.

பூஜையை முடித்துத் திரும்பியவளுக்குப் பாராட்டுக்கள் காத்திருந்தன.

"பார்... உன்னைவிட ரெண்டு வயசுதான் மூத்தவ சாரு... எத்தனை பொறுப்பாய்ச் சாமான்களை வாங்கியிருக்கா... வீட்ல கண்ணாடி டம்ளருங்க செட்டாய் இல்லை - ஒவ்வொரு தினுசிலே மூணு, நாலுன்னு இருக்கறதைக் கவனிச்சு டஜன் டம்ளர்ங்க வாங்கியிருக்கா... பத்தி, பழங்கள் வேற... நீயானா பாலிஷ், ஸ்னோ, செருப்புன்னு காசைக் கரியாக்கியாச்சு..."

சார்வரியிடம் பிரசன்னா குறைப்பட்டாள்.

"அப்பமே சொன்னேன் - கேட்டீங்களா?"

"என்ன?"

"இப்படி ஒரேயடியா நீங்க சமர்த்தா இருந்தால் எனக்குச் சங்கடம்னு..."

"நீ சமர்த்துதான் பிரசன்னா..."

"தாங்க்ஸ் - பரமபதம் விளையாடலாமா?"

"ம்ம்... சின்னம்மா, நீங்க சொன்னதுபோல சீட்டாட்டம் ஓரளவு கத்துக்கிட்டேன்..."

"இங்குள்ள பரமபத போர்டு விசேஷம் - மூணு அடி சதுரமாய் மரத்துல செய்தது."

"அட... பார்ப்போமே..."

இரண்டாய் மடிக்கப்பட்ட பலகையைப் பிரசன்னா விரிக்க, சார்வரி பிரமித்தாள்.

பாம்புகளுக்கு அழகிய பெண் தலைகள், பொன் ஏணிகள் என்று அட்டகாசமான விளையாட்டுப் பலகை அது.

பெண்கள் எல்லாரும் அரட்டையும் சிரிப்புமாய் விளையாட உட்கார்ந்த சமயம் குருநாயகம் அறைக்குள் நுழைந்தார்.

"அடடே... குழந்தையிடம் சொன்னேன்... அப்படியே செய்துட்டாளே..." என்ற சிலாகிப்புடன்.

"என்ன சொன்னீங்க? பரமபதம் ஆடணும்னா?" சற்று அதட்டலும் கேலியுமாய் வினவினார் மூத்த ராணி. தங்கைமகள் பிரசன்னா இழுக்க, பிகு இன்றி அவரும் ஆட உட்கார்ந்திருந்தார்.

"அதில்லை... வாய்விட்டுப் பேச, சிரிக்க மனசு குழப்பம் பீதி இல்லாம நிர்மலமாய் இருக்கும்னேன். ஏம்மா... நீங்கல்லாம் டவுனில் கடைகண்ணிக்குப் போய்வந்தீங்களாமே?"

"ஆமா குருவய்யா... அண்ணாக்கு டவுனில் வேலையிருந்தது... அந்தக் காரில் நாங்களும் தொத்திக்கிட்டோம்."

"அபர்ணாவையும் கூட்டிட்டுப் போயிருக்கலாமேம்மா. அவளுக்கு உங்களை விட்டா யாரிருக்கா?"

அவரின் பின்னால் பதுங்கினாற்போல நின்றிருந்த அபர்ணாவின் முகத்தில் சங்கட முழி!

"அடுத்த முறை சொல்லிட்டாப் போச்சு... அவசரத்துல கிளம்பினாங்க. அபர்ணா... வாயேன் - நீயும் ஆட்டத்துல சேரு... நாங்க பார்க்கறோம்..."

இளைய ராணி அழைக்க, அபர்ணா தயங்கி வந்து உட்கார்ந்தாள்.

ஆட்டம் ஆரம்பமானது.

இது எல்லாருக்கும் தெரிந்த எளிய ஆட்டம்.



அதிகச் சாமர்த்தியம் தேவையில்லாமல் அதிர்ஷ்டக் கொக்கியில் ஆடும் விளையாட்டு. பகடை குலுக்கப்படும் போதெல்லாம் கேலி கெக்கெலிப்பில் அறை குலுங்கியது. இடையே வந்த தேன்குழல் தட்டு நொடியில் காலியானது.

ஏறக்குறைய மணி ஒன்பதாகிவிட அபர்ணா எழுந்தாள்.

"நான் கிளம்பறேன், ராணிம்மா..." பொதுவாய்ச் சொல்லிக் கொண்டாள்.

"வேணுவைத் துணைக்கு வரச்சொல்றேன்... இரம்மா..."

"ஏன் போகணும்? அபர்ணாக்கா! ஒரு நாள்தான் இங்கேயே தங்குங்களேன்..."

"இல்ல. வீட்ல வேலையெல்லாம்..." அவள் இழுத்த நேரம் குருநாயகம் எட்டிப் பார்த்தார்.

"இரேம்மா... இருந்துட்டுதான் வாயேன். உன் வயசை ஒத்த பெண்பிள்ளைகளோடு இரு... விச்ராந்தியாய்ப் பேச, சிரிக்கன்னு. நம்ப வீட்ல அப்படியென்ன பெரிய வேலை?"

"பிறகென்ன... இருங்க..." பிரசன்னா குதித்தாள்.

"ல்ல... மாத்துத் துணி இல்லாம..."

"வீட்டுக்குப் போய் எடுத்து வந்தால் ஆச்சு... போகவும் வரவும் என்ன நாள்கணக்கா? அஞ்சே நிமிஷம்..."

"நீங்க என் அறையிலேயே தங்கலாம், அபர்ணா... ரெண்டு கட்டிலிருக்கே..." சார்வரியும் தன் பங்கிற்குச் சொல்ல,

"தோ... பத்து நிமிஷத்துல வந்திருவா..." என்று உற்சாகமாய் மகளோடு கிளம்பினார் குருநாயகம்.

"பாவம், குருவய்யா! எத்தனை சொன்னாலும் அபர்ணா பொண்ணு நாளாக ஆக வாய் மூடி மௌனியாத்தான் ஆகுதே தவிர..."

"காலா காலத்துல கல்யாணம்செய்து வச்சிடணும்!" என்றார் பெரியராணி, கல்யாணம் எல்லாவற்றுக்கும் தீர்வு என்பதுபோல!

"சரி, படுக்கலாம் - ஊருக்குப் போய்ச் சுற்றின அலுப்பிருக்கும் சின்னதுகளுக்கு - புவனி! எல்லாருக்கும் பால் கொண்டு கொடுத்திரு..."

"இதோங்கம்மா..."

"உன் இந்த வேலையெல்லாம் சின்ன சாந்திக்குக் கத்துக் கொடுத்திடு... உனக்குக் கல்யாணமானதும் வீட்டுக்குப் போகப் பறப்பியே நீ..."

நாணக்கோணலுடன் சமையல் கட்டிற்கு ஓடினாள் புவனி.

தன் அறையில் உடை மாற்றிப் படுக்கத் தயாரான சார்வரி அறைக் கதவைத் திறந்தே வைத்திருந்தாள்.

அபர்ணா தன்னுடன் தங்குவது அவளுக்குள் ஒரு பரபரப்பை ஏற்றியிருந்தது.

அபர்ணா ஒரு நூதனப் பெண்ணாய்ப் பட்டாள்.

அத்தனை அழகும் பண்புமாய்த் தோன்றும் அவள் ஏன் நத்தையாய்ச் சுருண்டு கிடக்கிறாள்?

தன்னிடம் தனிமையில் ஏதேனும் பேசுவாளா? இயல்பாய் இருப்பாளா? நன்கு பழகினால் இங்கு ஒரு நல்ல தோழி கிடைத்த திருப்தியுடன் போகலாம் - அன்பான எதிர்பார்ப்புகளுடன் மறுபடி இந்த வீட்டிற்கு வரலாம்.

சிறு பை ஒன்றுடன் பள்ளிக்கு முதல் நாள் வரும் சிறுமிபோல மலங்க விழித்தபடி வந்த அபர்ணா...

"வா... வாங்க..." என்று வரவேற்றுத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தாள்.

"படுக்கறதுக்குத் தோதாய் உடை மாற்றிட்டே வந்திட்டீங்க... புவனி உங்களுக்காகவும் சேர்த்துப் பால் வச்சிருக்கா... ஊற்றித் தரவா..."

"வேணாங்க... நானே எடுத்துக்கறேன்."

"இதிலென்ன சிரமம்..." ஊற்றி நீட்டியவள், "வந்து... உங்களுக்கு டவுனிற்குப் போகனுமா...எங்களோடு வர்ரீங்களான்னு கேட்காமல்



போனது தப்புதான். அபர்ணா... அவசரமாய்க் கிளம்பினதில் தவறிட்டோம்... இனிமேல்..."

மன்னிப்புக் கோரும் தொனியில் சார்வரி சொல்ல, மற்றவள் அவசரமாய் இடைமறித்தாள்.

"இல்லை... எனக்குப் பிரயாணமே ஒத்துக்காது... அப்பா பேச்சுக்கு ஏதோ சொல்லிட்டாங்க..."

பாலைப் பருகியபடி அறையைச் சுற்றி வந்தன அபர்ணாவின் விழிகள்.

"என்ன பார்க்கறீங்க... இந்த அறைக்கு முன்பு வந்திருக்கீங்களா?"

"ம்ம்... அரண்மனை முழுக்கப் பார்த்திருக்கேன்... ராணியம்மா... அதாவது... இளைய ஜமீனின் அம்மா அறை இதுதான். பகல் முழுதும் இங்கே ஏதாவது கைவேலை செய்தபடி இருப்பாங்க..."

ஆர்வத்துடன் கவனித்தாள் சார்வரி.

"இந்த பால்கனியில் நின்று பார்த்தால் அவர்... அவர்... வீட்டின் பின்புறம் விளையாடறது தெரியும்..."

"யார்... இவரா?"

சர்வஜித்தைப் பற்றி என்பதால் வினவிய சார்வரியின் முகம் முழுக்க ஒரு வெட்கப் பளபளப்பு.

"ம்ம்..." தலை குனிந்து முணங்கினாள் மற்றவள்.

"நான் அந்த பால்கனி கதவைத் திறந்ததேயில்லை..."

"அழகாயிருக்கும்... பால்கனியும்... அங்கேயிருந்து தெரியும் தோட்டமும்..."

அபர்ணாவின் குரல் நடுங்கியதோ?

"படுங்க அபர்ணா... உங்களுக்கு உறக்கம் வந்திடுச்சு போல..."

மறுத்துப் பேசாமல் படுத்துக் கண்களை மூடிவிட்டாள் அபர்ணா... கடை கண்ணிக்குப் போன அலுப்பில் சார்வரிக்கும் உறக்கம் எளிதில் வந்துவிட்டது.

காலையில் அவள் கண் விழித்தபோது மறு படுக்கையில் அபர்ணா இல்லை. போர்வை நீவி மடித்து வைக்கப்பட்டிருந்தது.

"அபர்ணா..."

அழைக்க, குளியலறை நீரின் சளசளப்பு பதிலாய் வந்தது.

படுக்கையில் சற்றுநேரம் சுகமான சோம்பலுடன் புரண்டவள், பனிமலராய்க் குளித்து வந்த அபர்ணாவை ஆச்சரியமாய்ப் பார்த்தாள்.

பன்னீர் சொட்டும் பூக்குவியல் போலத் தெரிந்தாள் அபர்ணா...

"என்ன சீக்கிரம் எழுந்தீட்டீங்க?"

"வழக்கமான நேரம்தான்... வந்து... நீங்க என்னை, நீ வான்னே சொல்லலாம்..."

"அதேதான் உங்... உனக்கும் - என்ன?"

"நாளை இங்கே ராணியாய் வாழப் போற உங்களிடம் நான் அப்படிப் பேசறது சரியாய் இருக்காது..."

"ராணின்னால் நாலு சிநேகிதிங்க இருக்க மாட்டாங்களா? எல்லாரும் இப்படி மரியாதையாய் ஒதுக்கி வைத்தால் எனக்கு மூச்சு முட்டிடும்..."

சிறு புன்னகையுடன் பேச்சை மாற்றிய அபர்ணா,

"காபி எடுத்து வரவா?" வினவினாள்.

"அடடே... இன்னைக்கு நீதான் நம்ப விருந்தாளி... சரியாய் ஆறரைக்கு இங்கேயே காபி வந்திடும்... அதுக்குள்ள நானும் தயாராகிடுறேன்..."

குளியலறைக்குள் புகுந்தவள், முகம் துடைத்தபடி வெளியே வந்தபோது காபியின் மணம்...

இருவருக்கும் காபியை டம்ளர்களில் ஊற்றிய அபர்ணா, பால்கனியின் கதவைத் திறக்க முயன்றாள் - பல நாட்கள் புழங்கப்படாத அதன் தாழ்களைத் திருகித் திறக்க அவள் சற்று மெனக்கெட வேண்டியதிருந்தது.



ஆனால் அதற்கான பரிசு போல, கதவுகள் 'கிறீச்'சிட்டு விலக அறைக்குள் காலையிளம் காற்று ஜில்லென்று பாய்ந்தது.

அறையைப் போலவே அரைவட்ட வடிவிலிருந்த சின்ன பால்கனி அது. நான்கு மெல்லிய தூண்கள், மேலேதொப்பி போன்ற சிறு கூரை. இடுப்பு வரையிலான வேலைப்பாடுள்ள கைப்பிடிச் சுவர்கள் என்று அழகிய அமைப்பு.

"இங்கே ஓரளவு வெயில், காற்று வரும் - தலையைக் காய விடலாம்னுதான் திறந்தேன்!" விளக்கினாள் அபர்ணா.

"ம்ம்... இன்று சனிக்கிழமை... ஆனாலும் தலைக்கு ஊற்றியிருக்கிறே அபர்ணா?"

"நே... நேற்றுத் தலைவலி... அதான் இன்னைக்குக் குளிச்சேன்..."

கருநாகம் போலப் புரண்ட கூந்தலைப் பிரித்து உதறி... நீர்த் திவலைகள் பறந்தன.

"காபியை இங்கே நின்று குடிச்சால் நல்லாயிருக்கும் போல..."

"ம்ம்..."

சூடான பானத்தைப் பருகியபடி வெளிச்சம் கூடிக் கொண்டிருந்த வானத்தை ரசித்தனர்.

அபர்ணாவின் முகம் சற்று வெளிறியிருந்தாற்போலப் பட, பரிவாய்க் கேட்டாள்.

"நேற்றிரவு சரியாய்த் தூங்கலையா... புது இடங்கறதால்..?"

"ஸ்தோத்திரம் சொல்லிட்டே படுத்தேன்... நல்லாத் தூங்கிட்டேன்... இதைக் காயப் போட்டுடறேன்," என்றபடி ஈரத் துவாலையுடன் அறைக்குள் போக, வெளித் தூண் ஒன்றைப் பற்றியபடி சார்வரி காபியைப் பருகினாள்.

அடர்ந்த மரங்களின் - அவற்றின் ஆங்காங்கே வர்ணத்திட்டு களாய்த் தெரிந்த மலர்களின் ஊடான - அவள் தினம் பூஜைக்காய்ப் போகும் - மண்டபம் வெண்முத்துப் போலத் தெரிந்தது.

சூரியன் இன்னும் முழுப் பிரகாசம் பெறவில்லை என்பதால் ஒரு பொன்மங்கல் ஒளியில் சற்றுச் சோம்பலாய்க் கிடந்தது உலகம்.

ரசிப்புடன் சுற்றிய சார்வரியின் விழிகள் அதில் தட்டி... விக்கி விரைத்தன...

அதோ தெரியும் உருவம் யார்... அல்லது என்னது?

பழுப்பு அங்கியும் சிங்கத்தலையுடனுமான உருவம்...!

## 10

"அபர்ணா... இங்கே வாயேன்..."

பயத்தில் வார்த்தைகள் திணறலாய் வந்தன.

"என்ன?"

"இங்கே வந்து... பாரேன்..."

கூந்தலைக் கோதியபடி வந்தவள் கேட்டாள்.

"என்ன... எங்கே?"

"அந்த அரசமரத்தடியில்... இப்ப சரியாய்த் தெரியலை... ஆனால் ஒரு உருவம் தெரிஞ்சது... மறுபடி தெரிந்தால்... அதோ தெரியுதுல்ல? ஆண்டவா... பாரேன், சிங்கத் தலையுடன் ஒரு மனுஷ உருவம்..."

பதறியவள் உடல் முழுக்க ஒரு பயக் குளிர் ஓடியது... நடுங்கியது.

"எங்கே சார்வரி?"

"என் விரலை ஒட்டியே பார்... இப்பத் தெளிவாய்த் தெரியுது... கடவுளே...!"

"எனக்கேதும் தெரியலையே..." குழப்பமாய்த் தலையாட்டினாள் மற்றவள்.

"அரச மரத்தின் கீழே..."

"அங்கே... அங்கே... யாருமில்லையே!"

இவளுக்கு மேலும் விக்கியது.



தனக்கு வெகு தெளிவாய்த் தெரியும் உருவம் அபர்ணாவிற்குத் தெரியவில்லையா? ஏன்...?

அப்படியானால் இது தன் பிரமையா? கற்பனையா?

இவளின் பதட்டத்தில் சிறிது அபர்ணாவைப் பற்றிக் கொண்டது.

"உள்ளே போயிடலாம் சார்வரி... நா... நாம இங்கே வந்திருக்கக் கூடாது..."

"இப்ப அந்த உருவம் நகர்ந்து மறையுதே... நிஜமாவே உனக்கது தெரியலையா?"

"அப்பா உன்னை அந்தச் சிங்கநாதருக்குப் பூஜை செய்யச் சொல்லியிருக்கக் கூடாது!"

என்ற அபர்ணாவை மற்றவள் திகைப்புடன் பார்த்தாள்.

"என்ன சொல்றே?"

"அவர் உக்கிரமான ஸ்வாமி... அதான் இப்படி மிரட்டறார் போல..."

இவளுக்கு நெஞ்சடைத்தது.

அப்படியானால் சிங்கநாதர் தனக்கு மட்டுமே காட்சி யளிக்கிறாரா?

'போ!' என்பது போலச் சைகை செய்தாற்போலிருந்ததே?

'உன் பூஜையில் எனக்குப் ப்ரீதியில்லை - போய்விடு!' என்று துரத்துகிறாரா?

அவளது கால்கள் துணியாய்த் தொய்ந்தன.

குடித்த காபி முழுக்க வெளியே வந்து விடும் போலக் குமட்டியது.

"என்ன... மயக்கமாய் வருதா?"

"ம்ம்..." என்றவளுக்கு உலகம் முழுக்க இருட்டிவிட்டது.

சார்வரி கண் விழித்தபோது அனைவரும் கட்டிலைச் சுற்றி நின்றிருந்தனர். பதட்டமும் வெட்கமுமாய் எழ முயன்றாள்.

"படம்மா... இப்ப உனக்குத் தேவை ஓய்வுதான். உடம்பை, மனசை அலட்டிக்காதே... படு..." அமைதிப்படுத்தினார் குருவய்யா.

மனசு... தன் மனம் குழம்பி விட்டதா? யோசிக்க, அப்படித்தான் படுகிறது. மறுபடி கண்களை அழுந்த மூடினாள்.

அந்த இருட்டினுள் சிங்கத் தலை உருவம் தெளிவாய் எழுந்தது!

பதறிக் கண்களைத் திறந்தாள்...

"எதையோ பார்த்துப் பயந்துட்டே போல..." இளையராணி பரிவுடன் இவளது நெற்றியை வருடினார்.

"இல்லம்மா... அப்படி ஏதுமில்லை..."

"ஏதோ தெரியுதான்னு அபர்ணாவைக் கேட்டியாமே?"

"அது... வீட்டில் காபி குடிச்சுப் பழகலை... இங்கே குடிச்சது ஒத்துக்கலைன்னு நினைக்கறேன்... அதான் கண்ணை இருட்டிடுச்சு."

எப்படி இப்படி ஒரு பொய்யை அழுந்தச் சொல்ல முடிந்தது என்பதில் அவளுக்கே ஆச்சரியம்தான்.

குருவய்யாவின் பின்னே யிருந்து இவளையே வெறித்தபடி அபர்ணா...

"பித்தம்தான் போல... புவனி! எலுமிச்சஞ்சாறு கலந்து எடுத்து வா."

"இதோங்கம்மா..."

சார்வரி மறுபடி கண்களை மூடிக் கொண்டாள் - யோசிக்க வேண்டுமாயிருந்தது. தன்னைச் சுற்றிப் பலர் நிற்க, யோசிப்பது சிரமம்தான்... ஆனாலும் மனதை ஒடுக்கிச் சிந்தித்தாள்.

தனக்குப் புத்தித் தடுமாற்றமா?

தன் கண்கள் தன்னை ஏமாற்றுகின்றனவா?

முதன்முறை இரவில் தன் அறைக்குள் அவள் கண்டது நிஜம்... திறந்து கிடந்த கதவே சாட்சி. அப்படியெனில் இன்று கண்டதும் நிஜமேதான்.



அதே உருவம் - ஒருவிதப் பழுப்பு அங்கி... ஆகக் கண்டது பொய்யில்லை... யாரோ தன்னைக் குறி வைத்து ஆடும் விளையாட்டு இது.

இதில் தானும் சற்றுப் புத்தியுடன் ஈடு கொடுத்து ஆட வேணும்.

பயந்து ஓடப் போவதில்லை.

"சாரு... இந்தச் சாற்றைக் குடிக்கறியா?"

எழுந்து அமர்ந்தவள் எலுமிச்சம் சாறைப் பருகினாள் - இன்னும் அத்தனை பேரும் கட்டிலைச் சுற்றி. அதிலும் அமைதியாய் நின்றது வெட்கப்படுத்தியது.

யாரும் ஏதும் தவறாய்ப் பேசிவிடக் கூடாதே என்ற ஜாக்ரதையான மௌனம்!

இவளின் சங்கடம் புரிந்த பெரிய ராணி,

"சார்வரி சற்று ஓய்வாய் இருக்கட்டும். நாம போவோம்..." என, சார்வரி பெரியவளை நன்றியோடு ஏறிட்டாள்.

பெரியராணியின் முகம்கூட வழக்கமான கடுமை அகன்று பரிவில் கனிந்திருந்தது. அருகே நின்ற சுரேந்தரின் முகத்தில் தனிக் கலக்கம், நிறைய யோசனை...

"அது சரி... இப்ப அவளுக்குத் தேவை ஓய்வுதான்..." என்றபடி மற்றவர்களும் அகல, பிரசன்னா மட்டும் தன் தாயைக் கெஞ்சினாள்.

"அவளைப் பேசியே கொடுமைப்படுத்தவா? வா..."

"பிரசன்னா இருக்கட்டுமே - சின்னம்மா..."

"சரி..."

"ஒருநிமிஷங்கா... நான் மேலுக்குக் குளிச்சு டிரஸ் மாற்றிட்டு வந்துடறேன்."

"ஆகட்டும்."

மறுபடி கண்களை மூட, இம்முறை மனக்கண்ணில் வந்தது சர்வஜித்!

இதுவரை மூன்று முறை தன்னோடு தொலைபேசியில் பேசிவிட்ட அவனது இன்பக் குரல் காதில் கேட்பதான பிரமை..

என்ன நேர்ந்தாலும் சரி.. இனி அவரைப் பிரிவதாய் இல்லை.

அந்த நேசக்குரலைக் கேட்டபடி, அவர் மனைவியாக இங்கு வாழத்தான் போகிறாள்.

இப்பெரிய மாளிகையின் ராணியாக இருப்பதைவிட, தன் மனமாளிகையில் அவனை மன்னனாய் அமர்த்தி விடுவதில்தான் ஆர்வம், ஆசை..!

இதை எல்லாம் விட்டு ஒதுங்கி ஓட நினைத்தால் அது கோழைத்தனம். சிங்கம் என்றதுமே தன் நினைப்பில் முதலில் வந்தது.. கம்பீரமும் ஆளுமைக் கர்வமும்தானே?

குருவய்யாவிடம் அப்படிச் சொன்ன தான் தைரியசாலியா என்று சோதிக்கிறார்களோ? இப்படிக் கொடூரமாய்ச் சோதிப்பது யார்?

சற்றைக்கெல்லாம் கையில் சீட்டுக்கட்டுடன் இவள் அறைக்கு வந்தாள் பிரசன்னா. இருவருக்குமான காலை உணவும் அறைக்கே வர, பேசியபடி உண்டார்கள். பிரசன்னா இளையவள் என்றாலும் இங்கிதம் புரிந்தவள் - சினிமா, உடைகள், தன் மாமா சர்வஜித், அவனுக்குப் பிடித்த பாடல்கள் என்றெல்லாம் இலகுவாகவே பேச்சை நகர்த்த, சற்று முன் கண்ட சிங்கமுக உருவம் இவளது மனதிலிருந்து சற்று ஒதுங்கியது.

"மாமாக்கு சரித்திர சினிமா பிடிக்கும் - உங்களுக்கு?"

"ஓரளவு - சரித்திர நாவல்களும் வாசிப்பேன்..."

"காட்டுமிராண்டித்தனமான காலமது!" சட்டென்று சொன்னாள் பிரசன்னா.

"ஏன் அப்படிச் சொல்றே?"

"போர்.. அவங்க தண்டனை முறைகள் - மாறுகால், கைன்னு, ஆட்சி முறை எல்லாம் அப்படித்தான் தோணுது.."

"ஆனால் அக்காலக் கோயில்களை, அவங்க அனுபவிச்ச கலைகளைப் பார்த்தால் கலையிலும் கில்லாடிகள்னுதான் தோணும்."



"நீங்க அரண்மனையை முழுக்கப் பார்த்தாச்சா?"

"தெரியலையே...?"

"கீழே நிலவறையில் முன்காலத்தில் பயன்படுத்திய வாள், வேல், கத்தி, கபடா எல்லாம் உண்டு - பார்க்கணுமா?"

"ம்ம்.. பெரியவங்கட்ட சொல்லிட்டு.."

"சொன்னா விடமாட்டாங்களே.."

"அப்ப வேணாம்..."

"நல்லாயிருக்கும்க்கா... ஜரிகை டிரஸ்ஸுங்க, முன்னே கூத்தின்போது கூத்து கட்டினவங்க போட்ட சலங்கை, டிரஸ், முகமூடி.. ஆர்மோனியப் பெட்டிகூட கிடக்கும்.. போய்ப் பார்த்தால் பொழுது போறதே தெரியாது.."

சார்வரியை ஏதோ உந்தியது.

"ஆகட்டும், போலாம்... ஆனால் எப்போ?"

"மதியம் பெரியவங்கல்லாம் படுத்திருக்கும் சமயமாய்ப் போவோம்... ஆனால் சாவி..."

இழுத்தாள் பிரசன்னா.

"எங்கேயிருக்கும்?"

"தாத்தாவின் ரூம்ல.. நீங்க ஏதோ கதை வாசிக்கப் போவீங்களே. அப்ப நானும்கூட வந்து சாவியை எஸா எடுத்துடறேன்..."

ஆனால் சற்று நேரத்தில் வந்த புவனி சொன்னது வேறாயிருந்தது.

"அம்மா... நீங்க படுத்தே இருப்பீங்களாம் - ராணியம்மா பிரசன்னாம்மாவைப் பெரியவர் அறைக்குப் போய்க் கதை வாசிக்கச் சொன்னாங்க."

பிரசன்னா அலுப்போடு உத்தரவின்படி வெளியேறவும், புவனி அவசரமாய்க் கிசுகிசுத்தாள்.

"என்னம்மா... காலைல என்னாச்சு?"

ஒருவருக்குச் சொல்லி மற்றவருக்கு மறைப்பது சரியில்லை என்று பட, சார்வரி மழுப்பினாள்.

"புதுச் சாப்பாடு, இடமெல்லாம் சேர்த்து கிறக்கிடுச்சு போல... வேற ஒன்னுமில்லை."

"நீங்க பயத்துல மயங்கிட்டதாய் நினைச்சேங்கம்மா... அபர்ணாம்மாட்ட ஏதோ உருவம் தெரியுதான்னு கேட்டீங்களாமே?"

ஆக அபர்ணா விஷயத்தைச் சிதற விட்டுவிட்டாள்.

ஆனாலும் விடாமல் சமாளித்தாள் இவள் -

"அதிகாலை அரை வெளிச்சத்தில் மர நிழல் விசித்திரமாய் அமைஞ்சது... அது உருவம் போலத் தெரியுதேன்னு காட்டினேன்... அதை அபர்ணா தப்பர்த்தம் செய்துட்டாப் போல..."

புவனியின் கவலை முகம் தெளிந்தது -

"அடடே... அதிகம் பேசமாட்டாம அவுக திக்கித்திணறிச் சொன்னதை நாங்களும் சரியாப் புரிஞ்சுக்கலை போல... நல்லவேளைங்கம்மா... அப்ப இன்னைக்குப் பூஜை?"

"வழக்கம்போல ஏற்பாடு செய்திடு... ஏன்?"

சற்று ஆச்சரியமாய்ச் சார்வரி வினவ, புவனியின் முகம் முழுக்க மலர்ந்தது. "நல்லதும்மா... பாதிக் கிணறு தாண்டின பிறவு மாட்டேனுடுவீங்களோன்னு பயந்தேன் - இளைய ராணியம்மா போதும் இந்தப் பூஜைன்னுட்டாங்க. மூத்தவுகதான் உடம்பு சரியாயிடுச்சுன்னா போகட்டுமன்னாக..."

"எனக்கு ஒன்னுமில்லை புவனி... மாமாக்குக்கூட நானே தொடரை வாசிச்சிருப்பேன்... ஏன் நான் வரலைன்னு மாமா வருத்தப்படுவாங்க..."

"நீங்களும் பெரியவர் அறைக்குப் போய் இருங்களேம்மா... பிரசன்னாம்மா வாசிக்க நீங்களும் உடனிருங்க..."

சார்வரிக்கும் அப்படியே செய்யலாம் என்று தோன்ற உடைமாற்றித் தயாரானாள். பெரியவரின் அறையில் போய் அமர்ந்த



சற்று நேரத்திற்கெல்லாம் அங்கு வந்த இளையராணியின் முகம் அங்கு இவளைப் பார்க்கவும் மாறியது.

வழக்கமான கனிவு மாறிக் கறுத்தது.

"உன்னை அறையிலேயே இருக்கச் சொன்ன பிறகும் ஏன் வந்தே, சார்வரி?"

கடுகடுப்பாய் வந்தது கேள்வி.

"எனக்கு ஒன்னுமில்லை, சின்னம்மா... அதான்..."

"பெரியவங்க பேச்சை மதிக்கப் பழகு... அதுதான் பொண்ணுக்கான முதல் தேவை..."

அருகே வந்து தாழ்ந்த குரலில் சொல்லியதுதான் என்றாலும், அதிலிருந்த சீற்றம் சார்வரியின் நடுமண்டையில் 'நச்'சென இறங்கியது.

தான் இயல்பாய் இருப்பது கண்டால் பெரியவர்கள் நிம்மதியடைவார்கள் என்று கணிக்க, அதை அவர்கள் கீழ்ப்படியாமை என்றல்லவா குற்றம் சாட்டுகிறார்கள்?

பெரியவருக்கு இவர்கள் சம்பாஷனை கேட்கவில்லை... சர்வ அலங்காரத்துடன் தன் முன் அமர்ந்து தன் பேத்தி வாசிப்பதிலே அமிழ்ந்திருந்தார்.

பிரசன்னாதான் இவளை அனுதாபத்துடன் பார்த்தாள்.

கண்ணீர் முட்ட எழுந்தவள், சமையலறை நோக்கி நடந்தாள்.

தளும்பியிருந்த கண்ணீரைச் சிமிட்டித் துடைத்தபடி வாசலில் நின்றபோதுதான் உள்ளே சமையல்காரர்களின் பேச்சு அவள் காதில் விழுந்தது.

"குட்டிம்மாவப் பாத்தியா? பட்டும் பெரிய ஆரமும் போட்டதும் எப்பிடி அம்சமாயிருந்தது!"

அவர்கள் குறிப்பிடுவது பிரசன்னாவைத்தான் - சரிகைச் சேலையும் நகையுமாய்த்தான் இருந்தாள் -

"குட்டியம்மா இங்க வந்தா சதா கேலி, சிரிப்பானின்னு வீடு கலகலங்குது - இன்னைக்கு சீனியத் தந்து கோலம் போடச் சொல்லிச்சு... விரலுல நொறுநொறுங்கவுந்தான் சுதாரிச்சேன்..."

"ஹூம்... இன்னும் ரெண்டு வருஷம் முந்தியே பிறந்திருந்தா இந்நேரம் நம்ப வீட்டு மருமவளா வளைய வந்திருக்க வேண்டிய பொண்ணு..."

காலில் முள் குத்தியதுபோன்ற அவஸ்தையில் அங்கு நிற்கவும் அல்லாடினாள் சார்வரி... உள்ளுக்குள் கோபம், எரிச்சல், வேதனை, வருத்தம் என உணர்ச்சி அலைகள் புரண்டடித்தன... சத்தமின்றித் தன் அறைக்குத் திரும்பினாள்.

## 11

ஒருவேளை இளையராணிக்கும் இதே ஆசைதானோ? தன் மகளே தம்பிக்கு மனைவியாகிவிட்டால் இம்மாளிகையில் அவர்கள் உரிமை தூக்கலாகும்... உறவு கெட்டிப்படும்...

இருக்காது - அப்படியிருந்தால் அவர்களே வந்து தன்னை ஏன் பெண் கேட்க வேணும்?

பாட்டியிடம் அத்தனை நயந்து பேசித் தன்னை இங்கு அழைத்து வர வேணும்?

சர்வஜித்தின் வேண்டுகோளிற்காக வந்தார்களோ?

ஆனால் வந்த பின், தன்னிடம் பிரியமாகப் பழகினார்களே?

தன்னிடமும் தாய் ஓயாமல் சார்வரி பற்றியே பேசியதாய்ப் பிரசன்னா சொன்னதும் பொய்யில்லை.

தன் பிள்ளைகளுடன் ஒருவராய்க் கைச்செலவிற்குக் காசும் தந்து கடைகளுக்கும் அனுப்பிய அப்பெண்மணியை இப்படிச் சந்தேகிக்க நேர்ந்ததில் சார்வரி கூசிக்குறுகினாள்.

தன் நிலமை அப்படியாகி விட்டது.

எல்லாரையும் சந்தேகிக்க வைக்கும் சந்தர்ப்பங்கள் -



படுக்கையில் படுத்துப் புரண்டாள் - இத்தனை மன-உளைச்சலோடு படுத்திருப்பதுகூட அவஸ்தைதான்.

குருவய்யா தூக்கத்திற்கு என்று அனுப்பி விட்டிருந்த மாத்திரையையும் விழுங்கவில்லை... இதற்கும் சந்தேகம்தான் காரணம்.

உலகமே தனக்கு எதிராகிவிட்டது போன்ற பயம் அவளை உலுக்கியது. இந்நேரம் பாட்டி தன்னருகே இருந்திருந்தால்... வேண்டாம்... நல்லவேளை பாட்டி இங்கில்லை... நடந்ததை எல்லாம் அறிந்தால் -

'நீ கிளம்பு சொல்றேன்.' என்று இழுத்துப் போயிருப்பாள் -

இவள் இங்கு இருப்பதால் அக மகிழ்ந்திருக்கும் சர்வஜித்திடமும் ஏதும் பகிர்ந்து கொள்ள முடியாது.

செந்தாமரைக்குள் செத்த வண்டை வைத்து மூடுவது போல அவனது சந்தோஷத்தை இத்தகு சந்தேகங்களால் சாகடிக்க வேண்டாம்...

இது அவளுக்கான சோதனை...

தனித்திருந்து வெல்ல வேண்டிய ஆட்டம் இது...

ஆனாலும் பிரசன்னா அறைக்குள் வந்தபோது சார்வரிக்குத் தனிமை அலுத்திருந்தது - ஆவலுடன் பிரசன்னாவுடன் கிளம்பினாள். தவிர தான் இதுவரை பார்த்திராத பகுதிகளில் தான் பார்க்க வேண்டிய ஏதோ இருப்பதாகவும் அவளுக்குப் பட்டது. மதிய உணவை எடுத்து வந்த புவனியுடன் வந்த ராணிகள் இருவரும் பரிமாறி இவளைச் சாப்பிட வைத்தது மனதிற்குத் தெம்பும் தந்திருந்தது.

"பிரசன்னா! பெரியவங்களிடம் சொல்லிட்டே போகலாமே..."

"ஏற்கெனவே எல்லாரும் உங்களைப் பற்றிக் கவலைப் படறாங்க... அந்த இருட்டு அறைக்குப் போக வேண்டாம்னுடுவாங்க..."

கல் படிகளில் இறங்கி நடக்க. அந்த இடம் இருட்டாகவே இருந்தது இருபுறமும் தொங்கிய வளையங்களைக் காட்டி விளக்கினாள் பிரசன்னா.

"இதெல்லம் தீப்பந்தங்களுக்காக... தீப்பந்தங்களை இதில் செருகிடுவாங்க..."

"ஓஹோ..."

"சுவரில் புகைக்கறைகூட இருந்ததாம் - சர்வஜித் மாமாதான் அதை எல்லாம் சுத்தம் செய்யச் சொல்லிட்டாராம்..."

"ம்ம்... இந்தப் பகுதி ரொம்பப் பழங்கால பாணியாய்த் தெரியுதே?"

"இதெல்லாம் ஆதிகாலத்திலேயே இருந்த இடங்கள் - பிற்பாடு விஸ்தரிச்ச பகுதிதான் நாம் தங்கற அறைகள் - மாளிகையின் முன்புறத் தூண்கள். முகப்பு எல்லாம் தாத்தாவுடைய அப்பா எழுப்பியதாம்..."

"பூவேலை செய்த பளிங்குத் தரையும்கூட ரொம்ப அம்சம்..."

"அதெல்லாம் பர்மாவிலேருந்து வரவழைச்சுப் பதிக்கப் பட்டவை... ஆனால் மாளிகையின் இந்தப் பின்பகுதியை யாரும் பெரிதாய்க் கண்டுக்கலை, புதுப்பிக்கலை."

பாதை குறுகித் தாழ்ந்திருந்தது.

டார்ச்சின் ஒளி உற்சாகமாய் மின்னலடித்தது.

"உங்களுக்கு நடனம் தெரியுமா சார்வரிக்கா? ஆடியிருக்கீங்களா?"

"பாட்டிக்கு அதெல்லாம் ஆகாது - ஸ்கூல்லகூட ஆட்டத்தில் சேர அனுமதிக்க மாட்டாங்க.. ஒரு முறை பாரத மாதாவாய் வேஷங்கட்டிக் கொடியோடு நின்னேன்... ஆனால் டான்ஸ்னா பிடிக்கும்..."

"அந்தக் காலத்தில் சினிமா அபூர்வம் - நவராத்திரி சமயம் ஒன்பது வகை கூத்து விடிய விடிய நடக்குமாம் - ஒரே குழுதான் வருஷா வருஷம் வருவாங்களாம் - அவங்களுக்குத் தேவையான செட்டிங், உடுப்பு, அணிமணின்னு எல்லாம் இங்கேயே உண்டு..."

"அதெல்லாம்கூட இன்னும் இங்க இருக்குதா?"



"இத்துப் போய் இந்த நிலவறையில்தான் கிடக்குதுக்கா. துருப்பிடிச்ச வேல், வாளோடு கிரீடமும் நசுங்கிய ஆரமும் உண்டு."

கனத்த இரும்புச்சாவியைக் குட்டை கட்டையான கதவில் பொருத்தித் திருப்ப, கதவு சலித்தபடி திறந்தது.

சுவரைத் துழாவி சுவிட்சைத் தட்ட, மஞ்சள் நிற வெளிச்சம் உள்ளே பரவியது.

நடுத்தரமான அறை.

அறை முழுக்கப் பலவிதப் புராதனப் பொருட்கள்.

அவற்றின் புழுக்க நெடி

இத்தகு தொன்மையான இடம் தன் புகுந்த வீடாகப் போவதில் சார்வரிக்குப் பெருமிதம்தான் - அதோடுகூட இதுபோலச் சில ரகசியங்களும் தன் வாழ்வில் பிணைந்திருக்கும் என்ற அச்சமும் அதனூடே கலந்திருந்தது.

அறையின் வடக்கு மூலையைக் காட்டினாள் பிரசன்னா.

"அதுதான் சுரங்கப்பாதையின் கதவு... ஆனா... அது எப்படித் திறக்கும்ங்கறது எனக்குத் தெரியாது - பாதை எங்கே போகும்னு அம்மாவுக்குக்கூடத் தெரியாதாம்..."

ஒரு கம்பத்தில் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்த குண்டுச் சலங்கைகளை நிமிண்டியபடி சொன்னாள்.

"தாத்தாட்ட கேட்டுப் பாரேன்..." - ஆர்வமானாள் சார்வரி.

"கேட்டால் பூச்சி பொட்டுதான் கிடக்கும் - அங்கயெல்லாம் போகக்கூடாதுன்னுட்டாரே - தவிர அங்கு மின்சாரமும் கிடையாது - அத்தான்கூடச் சுரங்கப் பாதையைத் தூர்த்து மூடிடணும்னு சொன்னாங்க."

"ஆனால் இன்னும் மூடலை?"

"ம்ஹூம்... அதுக்கும் ஏதோ பூஜை. சாந்தின்னு முறைமை செய்யணுமாம்..."

"ஓஹோ... இதெல்லாம் யார் சொன்னா?"

"குருவய்யாதான்."

"உங்க தாத்தாவுக்கு இதிலெல்லாம் அதிக நம்பிக்கை இருப்பதாய்த் தெரியலையே - பிறகு ஏன் இந்த சாந்தி, சம்பிரதாயமெல்லாம்?"

"சம்பிரதாயம் மேல் தாத்தாக்கும் பிடித்தமில்லை - ஆனால் குருவய்யாவைப் பிடிக்குமே!" சிரித்தாள் பிரசன்னா - "தவிர இந்தச் சுரங்கத்துள் வேண்டாதவங்களைப் போட்டு மூடிட்டா முழு இருட்டுக்குள்ளே காற்றுக்குத் தவிச்சு, அவங்க ஒரே நாள்ல சமாதியாயிடுவாங்களாம்... ஐயோ... இப்ப இல்லைக்கா. அதெல்லாம் நூறு வருஷத்துக்கு முந்தின கதை.."

சார்வரி அச்சத்துடன் அச்சிறு இரும்புக் கதவைப் பார்த்தாள். எத்தனை உயிர்கள் அதன் பின்னே அடைபட்டு மெள்ள மெள்ள உருகிப் பிரிந்திருந்தனவோ? அந்த ஆவிகள் இன்னும் சுரங்க வளைவுகளில் தடுமாறிக் கொண்டுதான் இருக்குமோ?

சிலிர்த்தவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டாள் பிரசன்னா..

"போயிடுவோமா? தூசியில் தும்மல் வர்ராப்ல இல்லை?'

"ம்ம்... வேற யாரெல்லாம் இங்கே வருவா?"

துரு ஏறிச் சொரசொரத்த வேல், கேடயங்களை வருடியபடி கேட்டாள்.

"சுத்தம் பண்ண எப்போதாவது வேலையாட்கள் வருவாங்க ளாய் இருக்கும். குருவய்யா அப்பப்ப வந்து சூடம், சாப்பிராணி எல்லாம் காட்டுவார்."

"குருவய்யா எப்பவும் இந்தப் பக்கத்து வீட்டிலேதான் இருந்திருக்காரா?"

"ஆமா... அவருடைய அண்ணன் நம்ப தாத்தாவோடு படிச்சவராம். அதனால் ரொம்ப நெருக்கம்... தாத்தாவோடு பிறந்தவங்க யாருமில்லை... ஜமீனாய் இருக்கறது ரொம்ப தனிமையான விஷயம்..."



சார்வரி இளையவளைச் சற்று வியப்புடன் பார்த்தாள்-

"அப்படி தாத்தாதான் சொல்வாங்க... ஆக பாசம், பிரியத்துக்கா குருவய்யா சொல்றதை எல்லாம் ஏத்துக்குவார் தாத்தா."

ஒரு மரஷெல்ஃபைக் கவனமாய் விரித்தாள் பிரசன்னா - கருத்த ஜரிகையுடனான உடைகள் அடுக்கடுக்காய்... மற்றொரு அலமாரி திறக்கப்பட, சார்வரி ஏறக்குறைய அலறியே விட்டாள் -

"என்ன... இதெல்லாம்..."

ஒரு முழு நிமிடத்திற்குப் பின் தினறலாய்க் கேட்டாள்.

"முகமூடிகள்க்கா... சிங்கமுக ராணி இப்படிப் பயப்படலாமா?"

"ஐயோ... திறந்ததும் உள்ளே தலை தலையாய் இருக்கக் கண்டு... நடுங்கிட்டேன்."

"உள்ளே இருக்கும் தலைகள் இளையராணியை ஆவலாய்ப் பார்க்கறதைப் பாருங்க."

ஓரக் கண்ணால் பார்த்தாள் -

"சில தலைகள் ஜமீன் வேட்டையில் சிக்கி, வீரத்தின் சின்னமாய்ப் பதப்படுத்தி வைக்கப்பட்டிருக்குது..."

கண்ணாடிக் கண்கள் தூசியால் மங்கினாலும், கோரப் பற்களைக் காட்டிப் பயமுறுத்தின சிறுத்தை, கரடி, ஓநாய் முகங்கள்.

"இரண்டாவது அடுக்கிலே இருப்பதெல்லாம் நாடகக் காரங்களுக்கான முகமூடிகள் - 'காட்டு ராஜா'ங்கற நாடகம் அப்போ பிரபலமாம் - பஞ்ச தந்திரக் கதைகளையே கொஞ்சம் நீட்டி முழங்கியிருப்பாங்கன்னு நினைக்கறேன் - எல்லாப் பாத்திரங்களும் மிருகங்கள் என்கிறதால் இத்தனை முகமூடிகள் - ஒரு பிரபல ஓவியரும் பொம்மைக்காரரும் சேர்ந்து செய்தாங்களாம். பத்திரமாய் இருக்க இங்கயே வைச்சுட்டாங்க."

"ஓஹோ?" கேட்டுக் கொண்ட சார்வரியின் கண்கள் வரிசையாய்த் தொங்கிய முகமூடிகளை அவசரமாய் மேலும் கீழுமாய் நோட்டமிட்டன. நேர்த்தியான, தத்ரூப வார்ப்புகள் -

அதில் ஒரு முக்கிய முகமூடி இல்லை என்பதைக் கண்கள் கண்டு, மூளையில் பதிவு செய்ய, அவளது உதடுகளில் திருப்தியான ஒரு புன்னகை படிந்தது.

## 12

"எனக்கு... எனக்காம்மா?"

"பிரிச்சுப் பாரு... பார்க்காமலேயே கேட்டால் எப்படி?"

சார்வரி ஒரு புதிரான புன்னகையுடன் புவனியை ஊக்கினாள். படபடக்கும் விரல்களால் அட்டைப் பெட்டியைச் சுற்றிய நூலை முடிச்சவிழ்த்தாள் புவனி.

"புடவைப் பெட்டி போல இருக்குதேம்மா... குறுக்குத் தெரு பாலம்மாவுக்கு இதே போல தாமரைப் பூப் படம் போட்ட பெட்டியிலதான் பரிசப் புடவை வந்துது..."

மூடியை விலக்கியவளின் விழிகளும் தாமரைப் பூப் போலவே மலர்ந்தன.

"இது... இது உங்க சேலையாச்சேம்மா..."

"இல்லை. இது புதுசு. டவுனுக்குப் போனப்ப உனக்காக எடுத்து வந்தேன். ஸ்பன் பட்டாம். உனக்குப் பிடிச்ச என் புடவையின் அதே நிறம், அமைப்பு... அதான்..."

புவனி தன் காலடியில் அப்படிச் சுருண்டு விழுவாள் என்று எதிர்பாராத சார்வரி பதறினாள் -

"இதென்ன பழக்கம்... எழுந்திரி..."

"ஆசீர்வாதம் பண்ணுங்கம்மா..."

"எனக்கென்ன வயசு... தகுதின்னு..."

"மனசு இருக்கேம்மா. வேலைக்காரின்னு என்னைத் துச்சமாய் நினைக்காத மனசு! கடைக்குப் போன இடத்தில் என்னை நினைச்சு செலவு பண்றளவு..."



புவனியின் இளமுதுகு விம்மியது.

"நல்லாயிரு... சந்தோஷமாய் இரு..."

நடுங்கும் சிறு புன்னகையுடன் எழுந்த புவனி கைகூப்பியபடி,

"நன்றிம்மா!" - என்றாள்.

"அதெல்லாம் அவசியமில்லை. எனக்கு இந்தச் சேலையைக் கட்டிக் காட்டு... கல்யாணப் பொண்ணு எப்படியிருக்கான்னு பார்க்கறேன்..."

"பெரியவுக பார்த்தால் வைவாங்க - அவங்களுக்கு இதெல்லாம் பிடிக்காது. வேலைக்காரி இடமறிஞ்சு நிக்கனு மில்லையா?"

"அது சரி. எனக்கு ஒரு தரம் கட்டிக் காட்டிட்டு, பிறகு மடிச்சு எடுத்துட்டுப் போயேன்."

"இப்ப ஜமீனய்யாவுக்கு மோர் கொண்டு போகணும்மா. போகலைன்னா சமையல் கட்டுல திட்டுவாக... போயிட்டு..."

"நானும் இப்ப மாமா அறைக்குப் போகணும்தான்."

"போறதுக்கு முன்னே உங்களுக்குக் கட்டிக் காட்டிரு தேம்மா..."

"ம்ம்..."

"சேலை இங்ஙனயே இருக்கட்டும்மா... வீடு போறப்ப எடுத்துக்கறேன்..."

மறுபடி கைகூப்பியபடி புவனி வெளியேற, சார்வரியும் கிளம்பினாள்.

பீடத்தைச் சுற்றி மொட்டு மொட்டாய்க் கவிழ்ந்திருந்த அல்லி மலர்களின் அசாத்திய அழகில் கட்டுண்டிருந்தாள் சார்வரி.

நூற்றியொரு மொட்டுகள் தளிர்க் காம்புடன் பீடத்தைச் சுற்றிலும் கிடந்தன. அவையும் தன்னுடன் தலை வணங்கி மோனத்திலிருப்பது போலப்பட்டது. அவற்றின் மெல்லிய மணம் அறையை இதமாய் நிரப்பியிருந்தது. இன்று மனமும் இலகுவாய்த்

தியானத்தில் குவிந்திருந்தது. புற்றின் பாம்பாய் அவ்வப்போது தலைநீட்டும் பீதி, கிலேசமெல்லாம் இன்று இல்லை.

பிரார்த்தனையை முடித்து எழுந்தவளது மனம் கட்டறுத்த கன்றாய் நாயகனிடம் ஓடியது.

நேற்றிரவும் சர்வஜித் அவளிடம் பேசியில் பேசியிருந்தான் -

'தியானம்னா... மனம் முழுக்க ஸ்வாமியையே நிரப்பி நினைச்சுக்குவியா சார்வரி?'

'உங்களையும்தான்... சாமி உங்களை சௌக்கியமாய் அமோகமாய் வச்சிக்கணும்னு அவரை வேண்டுவேன்...'

'சாமர்த்தியமாய்தான் பேசறே... ஆனா உன்னைப் பார்த்த முதல் நாளன்று வெலவெலத்து முழிச்சே...'

'முதல்ல பார்த்த பயம்...'

'இப்ப...? பயம் தெளிஞ்சிருச்சா?'

'அப்ப யாரோ அந்நியர் - ஜமீன்தார் வேறயாமேங்கற பயம்... இப்ப...'

'சொல்லு...'

'என்னவர்ங்கற தைரியம்!'

அவனது சிரிப்பு தேனாய்த் தன் காதில் வடிந்து வழிந்தது போலிருந்தது. நினைத்த மாத்திரத்தில் இன்னும் இனித்த அச்சிரிப்பு என்றும் அவனில் நிலைத்திருக்க வேணும் என்ற உத்வேகத்துடன் அன்று ஆண்டவனை வேண்டியிருந்தாள்.

காதலின் துணிவு தன்னைச் செலுத்துவது புரிந்தது... கூடவே இந்நாள் வரை இல்லாத ஒரு தைரியம் கூட.....

இது விளைந்தது தன் பூஜையினாலா அல்லது தன் காதலினாலா? வெட்கச் சிரிப்புடன் படியிறங்கி நடந்தாள்.

தன்னை ஒருவித ஆச்சரியத்துடன் புவனி பார்ப்பதை உணர்ந்து கேட்டாள்

"என்ன... அப்படிப் பார்க்கறே?"



"இன்னைக்கு உங்க முகம் தனி தேஜஸாயிருக்கும்மா..."

"மனசு தெளிவாய் இருக்கறதால போல...."

"எல்லாம் பூஜா பலனுங்கம்மா... அன்னைக்கு ஒரு நாளு பூஜை பீடத்தை விட்டு வெளியே வந்தப்ப உங்க முகம் பேயைக் கண்டது போல அரண்டு கிடந்துதே..."

"ம்ம்... நினைப்பிருக்குது - அன்று வெளியே நீயும் இல்லையா... பயந்துட்டேன்..."

"மன்னிச்சிருங்கம்மா - இனியும் உங்ககிட்ட மறைப்பானேன்... அன்னைக்கு எம்மாமன் ஊரிலேருந்து வந்திருச்சு... வந்ததும் என்னைக் காண்க மாளிகைக்குப் போனவக, நான் இங்க வந்தது தெரிஞ்சு தொடர்ந்து வந்துட்டாக. அந்த மரத்தடிக்கு என்னைக் கூட்டிப் போயி...." முகம் சிவக்கத் தொடர்ந்தாள் - "சும்மா பேசிட்டிருந்தோம்மா... மத்தப்படி இந்தப் படிக்கட்டை விட்டு அசைய மாட்டேனுல்ல..."

சற்று யோசித்தாள் சார்வரி.

"யார் உன் மாமனை இங்கே அனுப்பினதாம்...?'

"ம்ம்... தெரியலியேம்மா... குருவய்யான்னு சொன்னதாத்தான் நினைப்பு..."

"அவரிடம் போய் நீ எங்கேன்னு உன் மாமன் விசாரிச்சாராமா? ம்ம்... பிரியம் வந்தால் கூடவே துணிச்சலும் வந்திடுது."

"அப்படியில்லம்மா - அப்படித் துணிஞ்சு கேக்குற ஆளில்லை இது... அப்படி தராதரம் தெரியாமல் கேட்காது.... பின்கட்டு வாசல்ல மாமன் நிக்குறதைக் கண்ட குருவய்யா கூப்பிட்டுக் கேட்டாராம்-"

ஞாபகப்படுத்திப் பேசினாள் - "யாரு, புவனியத் தேடி வந்தியா? இப்படித்தான் பீடம் பக்கமாய்ப் போனா - அங்க, அரைமணிப் பொழுது இருப்பா - போய்ப் பேசிக்கோன்னாராம்..."

"ஒஹோ?" யோசனையாய்த் தலையாட்டினாள் சார்வரி. குருவய்யா இயல்பாய்ச் சொன்னாரா அல்லது வேண்டுமென்றே

புவனியை மண்டபத்து வாசலிலிருந்து அப்புறப்படுத்துவதற்காகவே அப்படி அவளது மாமனை அனுப்பினாரா?

ச்சே... எல்லாரிலும், எல்லாவற்றிலும் சந்தேகம் - மனம் தெளிந்தது என்று திருப்திபட்ட மறுகணம் ஏன் இந்தக் குழப்பங்கள்?

நனைந்ததும் தன் உடலை உலுக்கி உதறும் நாய்க் குட்டி போல வேண்டாத நினைப்புகளை உதறினாள்.

வீடு நுழைந்தவளை ஒரு குட்டிப் புயலாய் எதிர்கொண்டு தனியே அழைத்துப் போனாள் பிரசன்னா. முகத்தில் தனிப் பிரகாசம்.

"என்ன விஷயம்?"

"தாத்தா சொல்லிட்டார்!" - தணிந்த குரலில் உற்சாகமாய் வந்தது பதில்.

"எதை?"

"சுரங்கப் பாதை கதவு எப்படித் திறக்கலாங்கற ரகசியத்தை..."

இவளுக்குள்ளும் ஒரு உணர்ச்சி ஊற்றுக் கண் திறந்தது.

"எப்படியாம்...? அந்தக் கதவில் சாவி போடும் துவாரமே இல்லையே..."

"விசை மூலம் திறக்குமாம்... கதவின் இருபுறமும் பெரிய கேடயங்கள் தொங்கின - நினைவிருக்கா..."

"ஓஹோ?"

"அதில் ஒரு கேடயத்தின் பின்னே ஒரு குமிழ் இருக்குமாம் - அதை அழுத்தினா கதவு திறந்துக்குமாம்!"

சார்வரியின் புத்தியிலும் சில திறப்புகள்.

சுரங்கப்பாதையை இங்கிருந்து திறந்து வெளியே போகக் கூடுமானால் வெளியேறியிருந்தும் அரண்மனையின் உள்ளே வரலாம்தானே?

இந்த எண்ணம் நிம்மதி தந்தது.

தன்னை மிரட்டியவர் இந்த வீட்டில், குடும்பத்தில் ஒருவர் அல்லாது வெளிநபராகவும் இருக்கக் கூடும் என்ற நிம்மதி.



தன் புகுந்த வீட்டாரைச் சந்தேகிப்பது அவளுக்குப் பெரும் சங்கடமாயிருந்தது "சுரங்கத்தை வெளியிலேருந்து எப்படித் திறக்கணுமாம்...? அதையும் தாத்தாட்ட கேளேன், பிரசன்னா..."

இளையவளின் விழிகளில் ஏறிய குழப்பத்தைப் பார்த்தவள் சமாளித்தாள் - "நாம சுரங்கப் பாதைக்குள்ளே போனதும் கதவு தானாய் மூடிட்டா நாம எப்படி வெளியே வர்ரது? தவிர இது என் வீடாகப் போகுதே... விவரங்களை எல்லாம் தெரிஞ்சுக்கற ஆர்வம்... அதான்..."

"அத்தான் வந்ததும் சேர்ந்தே ஆராய்ங்கக்கா... ஆனா இதுக்கெல்லாம் அப்ப எங்கே நேரமிருக்கப் போகுது..."

சீண்டலில் சார்வரியின் முகம் சிவந்தது.

"சரி, எப்போ சுரங்கப் பாதைக்குப் போறோம்?"

"ஊருக்குப் போகப் பெட்டி அடுக்கச் சொல்லிட்டாங்க, அம்மா... இனி நேரமிருக்காதே. அடுத்த முறை நாங்க வரும் போது போவோம்... ஓ... அப்ப நீங்க உங்க பாட்டி வீட்டுக்குப் போயிடுவீங்களே..." ஏமாற்றத்துடன் உதடு சுழித்தாள்.

"பிரசன்னா... உன் பெட்டியை அடுக்கியாச்சா?"

தன் தாயின் குரலில் பிரசன்னா அவள் அறைக்கு ஓட, சார்வரி தன் அறைக்குப் போனாள் -

கதவைத் திறந்தவளுக்கு உள்ளே புவனி நிற்பதைக் கண்டதும் சிறு அதிர்ச்சி.... வழக்கமாய்க் கதவைத் திறந்து வைத்தபடிதான் புவனி அறையைச் சீர் செய்வாள் -

இன்று...

புவனி உடுத்தியிருந்த புதுப் புடவை காரணத்தை விளக்கியது.

ஆனால் பரிசாக வந்த புதுப் பட்டில் இருந்த புவனியின் முகம் முழுக்க பீதி!

தான் ரசித்த சேலை தன்னைச் சுற்றியிருப்பதில் பூரித்துப் பளபளக்க வேண்டிய புவனியின் கன்னங்கள்... ஏன் முகமே

வெளுத்துக் கிடந்தது. விழிகள் அதிர்ச்சியில் விரைத்து விரிந்திருந்தன.

“என்னாச்சு, புவனி...?”

“நானும் பார்... பார்த்தேனும்மா.”

இவள் இதயத்துள் ‘சில்’லென்று ஒரு குளிர் ஓடியது.

“எதை... யாரை?’

“சிங்க முக நாதரை!”

உடலோடு புவனியின் குரலும் நடுங்கியது.

“பயப்படாமல் இப்படி உட்காரு... இப்ப சொல்லு...”

எதிர்ப்பின்றிக் கட்டிலின் அருகே கிடந்த முக்காலியில் சரிந்தாள் புவனி.

“எங்கே பார்த்தே? இங்க... இப்பவா?”

“வெளியே தோப்பிலே... பால்கனியிலே நின்னேன்... அப்ப பார்த்துட்டேன்.”

“ஓஹோ?”

“இன்னைக்குக் காலைல உங்க சீப்புகளைக் கழுவி வெயில் பட பால்கனியில வச்சேம்மா... தந்தமும் வெள்ளியிலுமான சீப்புங்க அறையை விட்டு வெளியே போகக் கூடாதுன்னு இங்கனயே காய விட்டேன். வீட்டுக்குப் போறதுக்கு முன்னே சேலைய உங்களுக்கு உடுத்திக் காட்டிடணும்னு உடுத்தினேன்... அப்பதான் வெளியிலே சீப்புகள விட்டது நினைப்பு வர, பால்கனியைத் திறந்து அதுகளை எடுத்தேன்... அப்பத்தான்... தோப்புல அந்த உருவம் தெரிஞ்சுதுங்கம்மா...”

அவள் விழியின் திகைப்பு குறைந்து தீர்க்கம் கூடியது-

“நீங்களும் பால்கனியில் நின்னப்ப அந்த உருவத்தைத்தான் பார்த்தீங்களாம்மா?”

சார்வரிக்குள் உணர்வு அலைகள் புரண்டாலும், அவள் அமைதியாகவே தன்னைக் காட்டிக் கொண்டாள்.



“நீ பார்த்ததைச் சொல்லு, புவனி.”

“சிங்கத்தலையோட நின்னதும்மா அந்தச் சாமி...! ஒரு மாதிரி தங்க நிற அங்கி போர்த்தி கையை ஆட்டுச்சு...” சிலிர்ப்புடன் நிறுத்தினாள்.

“சைகை காட்டியதா?”

“ஆமாங்கம்மா - ‘போ போ!’ங்கறாப்பல கை ஆட்டினது... எங் கண்ணையே என்னால் நம்பவும் முடியலை... நீங்களும்...?”

“இதைப் பற்றி யாரிடமும் சொல்லாதே, புவனி... சமையல்கட்டிலே நெற்றி நிறைஞ்ச குங்குமம் சந்தனத்தோட ஒரு அம்மா மேற்பார்வை செய்வாங்களே... அவங்க பேரென்ன?”

“மெச்சியம்மா...”

“அவங்களை இன்னைக்கு எங்கூட வந்து படுக்கச் சொல்லு...”

“முதல்ல ராணியம்மாட்ட ஒரு வார்த்தை...”

“நான் சொல்லிக்கறேன்... ரெண்டு ஆண்களைக் கீழே மாடிப்படிக்கருகே படுத்துக்கச் சொல்லு...”

மளமளவென உத்தரவுகளைப் பிறப்பிப்பது தான்தானா என்ற ஆச்சரியம் ஏற்பட்டது. முழுமதிக்கு இன்னும் இரு நாட்களே இருந்தன.

அதற்குள் ‘சிங்கமுகநாத’ரின் உக்கிரம் நிச்சயம் அதிகமாகும். பூஜை நிறைவடைவதற்கு முன்பே இவளைக் கிளப்ப, ஏன் அழிக்கக் கூட ‘அவர்’ முயலலாம்...

“சின்னராணியும் ஊருக்குக் கிளம்பறாங்களேம்மா...”

“அவங்களிடம் ஏதும் சொல்ல வேண்டாம் - கொஞ்சம் பாதுகாப்பாய் இருந்துக்கறது மட்டுமே நாம செய்யக் கூடியது... பெரியம்மாவிடமும்...” கண்களை மூடி அரை நிமிடம் யோசித்த பின் தொடர்ந்தாள் -

“எனக்கு முதுகுப் பிடிப்பு... இல்லையில்லை கால்வலின்னும் அதான் மெச்சியம்மாளை உடன் தங்கக் கேட்டதாயும்

சொல்லிடலாம்... இனியும் தனியாய் இருக்கறது அசட்டுத் துணிச்சல்..."

"நான் பூஜையப்ப உங்களோட வர்ரது சிங்க நாதருக்குப் பிடிக்கலையாம்மா? அதான் என்னைப் 'போ போ'ன்னு துரத்தறாரா?"

"அந்த மிரட்டல், விரட்டல் உனக்கில்லை, புவனி. எனக்குத்தான்... அதாவது உன்னை நான்னு நினைத்து நேர்ந்த தவறு அது..."

புரியாமல் பார்த்தாள் புவனி.

"என்னைப் போலவே புடவையுடன் நீ வெளியே நிற்கவும் உன்னை நான்னு நினைத்து. பாவம்! தப்பு நேர்ந்திடுச்சு..."

புவனி உலர்ந்த உதடுகளால் கேட்டாள் -

"யா... யாரும்மா?"

"ரெண்டு நாளிலே தெரிஞ்சிடும் - பொறு...!"

## 13

"என்ன சார்வரி, உன் வலது பாதம் மொழி பிசகிடுச்சாமே? சந்திரலீலா ஊர் போறதுக்கு முன்னமே சொல்லியிருந்தால் அவங்க குடும்ப டாக்டரை வரவழைச்சுப் பார்த்திருப்பா... இங்க குருவய்யா ஏதேனும்,தைலம் தருவார்... அவ்வளவுதான்..."

"லேசாதான் இடிச்சது - அதிலே மொழி பிசகிக் கொஞ்சம் வலிக்குது - அழுந்தப் பாதத்தை ஊனினாத்தான் அதுவும் - மற்றப்படி பிரச்னையில்லை..."

"எதுக்கும் குருவய்யா வந்து பார்த்துடட்டும்..."

"ஐயோ... வேணாம்மா..." கையெடுத்துத் தன்னைக் கும்பிட்ட சார்வரியைச் சற்றுக் குழப்பமாய்ப் பார்த்தாள் பெரிய ராணி.

"யார் பார்த்தாலும் நடக்க வேணாம் - ஒய்வாய்ப் படுத்திருன்னு சொலவாங்க - இன்னும் ரெண்டே நாள்தான். சாயங்காலம்



மண்டபத்துக்கு நடந்து போய்ப் பூஜையைப் பண்ணிட்டு வந்திடறேனே, பெரியம்மா... மற்றப்படி காலைத் தரையிலே ஊனலை நான்... பூஜைக்குப் பங்கம் வராமல் நீங்கதான் காப்பாற்றணும்."

ராணியின் வழக்கமான சிடுசிடுப்பு முகத்தில் சற்றுக் குழப்பமும், துளி இரக்கமும் தோன்றின. சார்வரி தொடர்ந்து பேசினாள் -

"அதான் மெச்சியம்மாவை அறையில் கூடமாட ஒத்தாசைக்கு வச்சுக்கலாம்னு நினைச்சேன் - பூஜையப்ப அவங்களோட புவனியும் வந்தால் ஆளுக்கு ஒரு பக்கமாய்ப் பிடித்தபடி போயிடுவேன்... நீங்க கவலைப்பட வேணாம் - கவலப்படுமளவு ஏதும் இல்லவுமில்லை..."

"உன் உடம்பை நீதான் பார்த்துக்கணும் - உங்க பாட்டி வருத்தப்படறாப்பல ஆம்பிளைகளைப் படுக்கச் சொல்லப் போறதாய்..."

"ஆமாம்மா... அதாவது உங்க அனுமதி வாங்கினப்புறம்தான் சொல்வேன்."

"அதான் ஏன்ங்கறேன்?"

இதற்கான பதிலையும் சார்வரி ஏற்கெனவே யோசித்து வைத்துவிட்டாள் என்றாலும் துணிந்து பொய் சொல்லிப் பழகாத நா குழறியது.

"அவர்... அவர்தாம்மா அப்படி செ... செய்யச் சொன்னார்."

புருவம் சுருங்கக் கேட்டாள் பெரியவள் - "யார், சர்வஜித்தா?"

"ம்ம்... நேற்று போன் பேசினப்ப... ஏதோ துர்சொப்பனம் கண்டாராம் - அதான் என்னைப் பாதுகாப்பாய் இருக்கச் சொன்னார்..."

"சரி... பத்திரமாய் இரு..." யோசனையுடன் ராணி வெளியேற, பெருமூச்சுடன் சரிந்து கொண்டாள் இவள் - இன்னும் இரண்டு நாட்களுக்குள் அவரது ஃபோன் அழைப்பு வராது... அப்படியே வந்தாலும்.

'என்னடா... ஏதோ கனவு கண்டியாமே? நீ பயந்தது போதாதுன்னு எங்களையும் ஏன் கலக்கறே?' என்று சகஜமாய் விசாரிக்கும் ரகமில்லை பெரியம்மா -

ஆக இந்தக் குட்டு உடனடியாய் உடையாது.

தவிர இன்னும் இரு நாட்களுக்குள் வேஷம் கலைந்துவிடும் - இவள் ஏன் இப்படி ஒரு பொய் சொல்ல நேர்ந்தது என்பதும் விளங்கிவிடும்... அதுவரை...

இறைவனை மனதுள் நிறுத்தித் துணிவு வரவழைத்தாள் சார்வரி.

இனி இந்தத் துணிவுதான் அவளுக்குத் துணை.

இரு பெண்கள் இருபுறமும் வர, சற்று விந்தியபடி நடந்து போன சார்வரி பூஜையை நடத்தினாள் - மற்றப்படி சதா அறைக்குள்ளேயே இருந்தாள் - புத்தகங்கள், பற்பல நினைப்புகளோடு பொழுதை நகர்த்தினாள் -

வீட்டுக்குப் போகும் முன் புவனி காவலுக்கு இருக்கும் ஆண்களுக்குக் கடுங்காப்பி தந்துவிட்டுப் போவாள்.

அவர்களுக்கு என்ன ஏதென்று புரியாவிட்டாலும், காவலில் கருத்தாய் இருந்தனர்.

அன்று பௌர்ணமி....

பூஜையின் நிறைவு நாள் -

முழுப் பூரிப்பில் விகசிக்கப் போகும் நிலா! அதற்காக ஒப்பனையிலிருந்த அந்திப் பொழுது! கடந்த இரு தினங்களாய்ச் சார்வரியின் உணவு வெகு சொற்பம் - வாயில் சதா தெய்வ நாமம் உருண்டது.

அதற்கு அத்தனை பயங்களையும் துடைத்து எறியும் ஆற்றல் இருந்ததை உணர்ந்தாள் -

நிலவு விரிந்து திரண்டது போலத் தன் மனமும் தெளிவும் துணிவுமாய் நிறைந்ததான உணர்வுப் பெருக்கம்.

கடைசி நாளின் பூஜை திருப்தியாய் முடிந்தது.



விழிகளில் ஆனந்தத் துளிர்ப்புடன் எழுந்தவளின் பார்வையில் அது பட்டது. பீடத்தின் ஓரமாய் நுனி மட்டும் தெரியும் வகையில் செருகப்பட்டிருந்த மடித்த காகிதம்... படபடக்காமல் அமரிக்கையாய் அவள் எடுக்கக் காத்திருந்தது.

அதை உருவினாள்... பிரித்தாள்.... நிதானமாக வாசித்தாள்.

நல்லது - நீ துணிச்சலானவள்தான்!

பயந்து பின்வாங்காதவள்தான்!

என்னைச் சந்திக்க விரும்பினால், துணிந்தால்... இன்று தனியே நடுச்சாமம்... நிலவறைக்கு வா -

- சிங்கமுகன்.

மும்முறை அச்சில் வரிகளை வாசித்த பின் மறுபடி மடித்து இடுப்பில் செருகியவள், விந்தியபடி வெளியே வந்தாள்.

பெண்களின் தோளைப் பட்டும் படாமல் பற்றியபடி நடந்தாள்-

"சந்தோஷம்மா... எல்லாம் நல்லபடி நடந்தது..."

"வருத்தமாவும் இருக்குதும்மா... நாளை காலை உங்களைக் கூட்டிட்டுப் போக வர்ரதாய் ஜமீனய்யாவுக்குக் கடிதாசி வந்துருச்சாமே..."

"மறுபடி இதே வீட்டுக்குத்தானே வரப்போறேன்? அதற்குக் கடவுளின் அனுக்கிரகம் இருப்பதாய்த்தான் தோணுது. புவனி - பிறகென்ன?"

"இன்னைக்கு நானு உங்களோட தங்கட்டுமாம்மா?" ஒரு சிறுமியின் தாபத்துடன் புவனி கேட்டாள்.

"இல்ல... இன்னைக்கு தனியாயிருக்க விரும்பறேன் - பூஜை நல்லபடி நிறைவாயிடுச்சு - இனிப் பயமில்லை..."

அவள் குரல் இறுகியிருந்தது -

"காவலுக்குப் படுக்கறவங்க...?"

"வழக்கம் போலப் பின்புறமே இருக்கட்டும்..."

"இருக்கற இந்த ஒரு ராத்திரி கவனமாயிருந்திட்டீங்கன்னா..."

படபடத்த புவனியை விழிகளால் எச்சரித்து அடக்கினாள். "கால் வலி ரொம்பக் குறைஞ்சிடுச்சு.. நான்தான் ஒரு ஜாக்ரதைக்கு உங்களைப் பிடித்தபடி வர்றேன்."

**அ**ன்றிரவு விருந்து பிரமாதப்பட்டது.

ஆனால் சார்வரிக்கு எதுவுமே இறங்கவில்லை... இனிப்புகள் கூட அவள் வாய்க்கு ரப்பர் போலப் பட்டன.

குடும்ப அங்கத்தினர், குருவய்யா எல்லாரும் மேசையில் அமர்ந்திருக்கும் இச்சமயம் அவள் நடந்ததை எல்லாம் சொல்லி விடலாம்... அதற்கான ருசுக்கூட இப்போது அவளது இடுப்பில் செருகப்பட்டுள்ளது - கடித வடிவில்...

ஆனால் யாரிடம் முறையிடுவது...

இவர்களில் ஒருவர்தான் இவளை மிரட்டி விரட்ட முயன்ற குற்றவாளி எனும் பட்சத்தில் இப்படிச் சொல்வது உசிதமா?

அக்கடிதத்தில் -

'உன் துணிவு எவ்வளவு - நீ தைரியசாலிதானா?' என்ற எள்ளல் இருந்ததே. அக்கடித வரிகளில் தொக்கி நின்ற சவால் அவளை உசுப்பியது. இன்றிரவும் காவலுக்கு நடுவே பத்திரமாய் இருந்து விட்டுக் காலையில் பாட்டியுடன் ஊர் போய்ச் சேர்ந்து விடலாம்.

ஆனால் சில மாதங்களில் தான் இங்குதான் வர வேண்டும். தான் நிரந்தரமாய்த் தங்கி வாழப் போகும் கோவில் இதுதான். தணலைப் பஞ்சு கொண்டு மூடுவது போல மறைந்து விட்டு நழுவுவது புத்திசாலித்தனமல்ல!

மறுபடி தாலியும் மாலையுமாய் இவ்வீட்டில் தான் நுழையும்போது முகமறியாத இந்த எதிரி இவ்வீட்டில்தான் இருப்பான்... அல்லது இருப்பாள் - தன் திட்டங்களை, முயற்சிகளை எல்லாம் மீறி இவள் மணமகளாய் வந்து விட்டாளே என்ற ஆங்காரத்துடன்... மேலும் திறமையான திட்டங்களுடன், கூரிய குரூரத்துடன்...



யார் என்றே புரியாத ஒரு எதிரி...

அது யார் என்பது இன்றிரவு தெரியக் கூடிய ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது... அதை நழுவ விடுவது சரியில்லை...

"என்னம்மா சார்வரி...?"

பெரியவரின் குரலில் நனவுலகிற்கு மீண்டவள் தன்னையே சுரேந்தரும் ஆழப் பார்ப்பது புரிய,

"என்ன மாமா?" என்றாள் மழுப்பலாய்.

"சீக்கிழமே கலியாண நாளு குறிக்கணும்... பயலு ஃபோனு பண்ரதைப் பாழ்த்தா அப்ழித்தான் தோணுது..."

மற்றவர்கள் நகைக்க, இவளுக்குச் சிரிப்பது சிரமமாய்த் தோன்ற, அவசரமாய்க் குனிந்து சமாளித்தாள்.

பரிமாறும் வேலைக்காரர்கள் முகங்களில், நடையிலும் இன்று தனி உற்சாகம் தெரிந்தது.

"பாட்டி காலை ஒன்பதுக்கெல்லாம் வந்திடுவதாய் எழுதியிருக்காங்க. நீ அதுக்குள்ள தயாராய் இருந்தால் அவங்களோட எல்லாரும் சேர்ந்து சாப்பிட்டுட்டு கிளம்பலாம்..."

பாட்டியை இப்படி மேசையில் பிறரோடு அமர்ந்து சாப்பிடச் செய்வது சிரமம் எனப் பட்டாலும் மறுத்துப் பேசவில்லை. வெள்ளைக்காரப் பள்ளியில் கல்வி பயின்ற ஜமீனய்யா கொண்டு வந்த மாற்றம் இது.

"காழு டிரைவழ எலாம் தயாழாய் இழுக்கணும்..."

"நாங்க பஸ்ஸிலேயே போயிடறோம், மாமா..."

"இனி எல்லார்க்கும் தெழியட்டுமே..." கர்வமும் மகிழ்வுமாய் அது தேவ வாக்காய்க் காதில் இறங்கி இனித்தது.

முகம் காட்டாத தன் எதிரியை அன்றே சந்தித்து விடுவதில் மேலும் உறுதியானாள். அந்த உறுதி அவளுக்கு மகிழ்வோடு சற்றுக் கர்வத்தையும் தந்தது -

தான் தைரியமாய்த்தான் நின்றிருக்கிறோம் என்ற கர்வம்! வேறு ஒருத்தி முதல் நாள் சிம்ம கர்ஜனை கேட்டதுமே இங்கிருந்து பறந்திருப்பாள். இதுவரை தன்னை ஒரு தைரியக்காரியாகச் சார்வரி கருதியதில்லை...

இது புதுத் துணிவு.

சர்வஜித்தின் மேல் ஏற்பட்ட ஈர்ப்பு அவளை மாற்றியிருந்தது.

அவருக்குத் தன் மேல் எழுந்த நேசம் அவளை நிமிர்த்தி யிருந்தது 'பேசி'யின் மூலம் காதில் அவன் ஓதிய காதல் மந்திரங்களால் வேறேதும் பொருட்டில்லை எனும் நிலைக்கு வந்திருக்கிறாள்!

இது கடவுள் போட்ட முடிச்சு...

இதைப் பிறர் அவிழ்க்க, அறுக்க அவள் விடுவதாயில்லை. இன்று அவர்கள் காதலின் எதிரியைப் பார்க்கப் போகிறோம் என்ற ஒரு அச்சங் கலந்த ஆவல் அவளுக்குள் சுழன்றது. அத்துவேஷன் யாரென்று தெரியாமல் இங்கிருந்து கிளம்பக் கூடாது... இதே கலக்கத்துடன் மணமகளாய் இவ்வீட்டின் படியேறக் கூடாது... தோளை நிறைக்கும் மாலைபோல மனதுள்ளும் அன்று பூரண திருப்தி, நிம்மதி மணம் வீச வேணும்.

புத்தகம் எடுக்கும் சாக்கில் பெரியவரின் அறைக்குள் போனவள் கையில் திரும்பும் போது நிலவறைக்கான சாவி பதுங்கியிருந்தது -

ஆனால் நடு இரவில் அச்சாவியுடன் அறையை விட்டு வெளியேறிய போது விரல்கள் பனிக்கட்டிகளாய்ச் சில்லிட்டிருந்தன.

சப்தமே இன்றி நடந்து, கதவைத் திறந்தவள் - கதவைச் சாத்திய பின்பே விளக்கை எரிய விட்டாள்.

கண்கள் விருட்டென் அறையைச் சுற்றி நோட்டமிட்டன.

யாருமில்லை...

நெஞ்சம் திம்திம் என்று முரசாய் அதிர்ந்தது.



சிங்கமுகனிடமும் ஒரு சாவி இருக்குமா... அல்லது சுவரைப் பிளந்து கொண்டு நரசிம்மராய்க் காட்சி அளிப்பாரா?

ச்சே... கடிதம் எழுதியது, தன்னை பயங்காட்டியது வெறும் மனிதன்... இங்குள்ள சுரங்கப் பாதை வழியேதான் வரப்போகிறான்... போகிறாள்...

மூச்சை நிதானப்படுத்தி, தன்னைப் ஆசுவாசப்படுத்திக் காத்திருந்தாள். இரு கேடயங்களுக்கும் நடுவேயான சுவர் சற்று முணங்கியது... பின் விரிந்தது...

இப்போதும்கூட அறைக் கதவைத் திறந்து ஓடிவிடலாம்தான்... ஆனால் பாதங்கள் நங்கூரம் பாய்ச்சப்பட்டதுபோலத் தரையோடு பதிந்திருந்தன.

முயன்று சமன்படுத்தியிருந்த அவள் சுவாசம் விக்கி தாறுமாறானது. கரிய விரிசலில் சிங்கத் தலையும் அங்கியுமாய் நின்றது அந்த உருவம் .

"பரவாயில்லை நீ துணிந்தவள்தான்... தனியே வந்திருக்கே..." முகமூடியின் வழியே அமானுஷ்யமாய்க் கேட்டது குரல்.

"ஆனா... ஆனால் உனக்குத் துணிவில்லை... இன்னும் முகமூடியின் பின்னே ஒளிஞ்சிருக்கியே!"

சற்று விதிர்த்த உருவம் மெள்ளத் தன் சிங்கத் தலையை அகற்றியது...!

## 14

"என்ன... என்னை எதிர்பாக்கலையா?"

அவள் பார்த்தபடியே நின்றாள்.

"சுரேந்தரைச் சந்தேகப்பட்டே... ஏன் அவங்க அம்மா, சித்தியையும் கூடச் சந்தேகிச்சே... ஏன்னா சொத்துக்குப் பாத்யதை உள்ளவங்க அவங்கதானே...?"

"உங்களையும் சந்தேகிச்சேன்..."

"அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்ங்க றாப்பல...!"

குரலில் நிறைய எள்ளல்!

"இல்லை... காரணத்தோடதான்..." தான் இப்படிக் கோர்வையாய்ப் பேசுவதும், தன் நடுக்கம் தன் குரலில் தெரியாததும் சார்வரிக்கே ஆச்சரியம்தான் - ஆனால் ஏதோ ஒரு சக்தி தன்னை இயக்குவது போலவும் உணர்ந்தாள்.

"என்னைச் சந்தேகிக்கக் காரணம்?"

"அபர்ணா சர்வஜித்தை விரும்பறதுதான் காரணம்."

தெளிவாய் வந்த பதிலில் திகைத்து மௌனமானார் குருவய்யா!

"அபர்ணா மட்டுமல்ல, உங்க மகளை இந்த அரண்மனையின் ராணியாக்க நீங்களும் விரும்பினீங்க..."

"வெறும் அசட்டுத் துணிச்சல்காரின்னு நினைச்சேன் - அறிவும் இருக்குடீ உனக்கு...."

"இருக்குது - அதான் இதையும் சொல்றேன் - அவர் அபர்ணாவை நே.. நேசிக்கலை..."

"எல்லாரும் காதலிச்சா கல்யாணம் செய்துக்கறாங்க? கல்யாணத்துக்குப் பிறகு ஆற அமரக் காதலிக்கறது.. நீ சர்வஜித் கண்ணில் படலைன்னா அதுதான் நடந்திருக்கும்... இன்னும் மூணு மாசத்துல என் அபர்ணாவை மணப்பெண்ணா, இந்த மாளிகையின் மகராசியாய்ப் பார்த்திருப்பேன்... ஆனா நீ அவன் கண்ணிலே பட்டுட்ட...."

"அது கடவுளின் சித்தம்..."

"அதை முறியடிக்க நான் செய்தது எதுவும் சரிவரலை..."

"ம்ம்... சிங்கம் போலப் பூஜை பீடத்தில் கர்ஜனை செய்தீங்க... நள்ளிரவு என் அறையிலே நுழைஞ்சு பயங்காட்டினீங்க... பால்கனியிலே நான் நிற்க, மறுபடி தரிசனம் தந்து போகச் சொல்லி விரட்டினீங்க..."



"ஆனா நீ போகலை..."

"ஏன்னா நான் அவரை விரும்பறேன்..."

"இத்தனை வளம், வசதி, அந்தஸ்து இதையும் விரும்பறே... ம்ம்? உன்னைச் சொல்லியும் குற்றமில்லை... யாருக்குத்தான் ஆசையிராது..."

"இப்ப நான் விரும்பறது அவரைத்தான்... அவரை மட்டும்..." அவள் சொன்னது கேளாதது போல அங்கியைக் கழற்றினார் குருநாயகம். ஜன்னல் அற்ற அறையின் புழுக்கம் தாளவில்லைதான். "நானும் இந்த ஜமீன் வம்சத்தவன்தான் - அதுவும் உனக்குத் தெரியுமா?" கேட்டார்.

தலையை அசைத்தாள் - வியர்வை தலையில் பெருக்கெடுத்து முதுகில் வழிந்து ஓட ஆரம்பித்திருந்தது.

"பெரியவர்... அதாவது இந்த ஜமீனின் அப்பாதான் என் தகப்பனார்! எங்கம்மா உயர்குல விதவை - பேரழகு... வாரிசு இல்லாததால் வைத்தியனான தன் தகப்பனோடு ஒத்தாசை செய்தபடி இருந்தாள் - பெரியவரின் சம்சாரத்தின் பேறுகால சமயம், பிற்பாடு சிசுவைப் பேணன்னு அரண்மனைக்கு வந்து போனவளைக் கண்டவருக்குச் சபலம்! ஆசை வார்த்தை பேசி அம்மா மனசை வளைச்சுட்டார். என் தாத்தா... அதாவது அம்மாவின் அப்பா மன்றாடியிருக்கார் -

'தாலி கட்டிடுங்கோ - பழுதில்லை!'ன்னு. அந்தக் காலம் மறுதாரம் சட்டப்படி தப்பில்லையே... ஆனால் ஜமீன் மறுத்துட்டார். 'சொத்துப் பிரச்சனை வரும் - ஆக கல்யாணமெல்லாம் வேணாம் - இங்கே பக்கத்திலேயே வீடு தர்றேன் - சகல வசதிகளோட இங்கே இருங்கனுட்டார் - சகலமும் இருந்தென்ன? கௌரவம் இல்லையே! அந்தஸ்தோடு வாழ்ந்திருக்க வேண்டிய நாங்க மூணு பேரும் என் அக்கா, நான், என் தங்கை எல்லாம் தகப்பன் பேர் சொல்ல முடியாத அவதியோட வளர்ந்தோம்."

கூர்ந்து கவனித்த சார்வரிக்குள் பல கேள்விகள் முட்டி மோதினாலும் தெளிவும் வந்து கொண்டிருந்தது. ஆக தன்

மாமனாரின் சகோதரன்தான் குருவய்யா... வெவ்வேறு தாய்க்கும் ஒரே தகப்பனுக்கும் பிறந்தவர்கள்... ஆனால் அப்படியானால்... அபர்ணா சர்வஜித்திற்குச் சித்தப்பா மகளல்லவா... முறை தவறுகிறதே... அவர்கள் இருவரும் எப்படித் திருமணம் செய்யக்கூடும்...?

நெற்றி சுருங்க இந்தக் கேள்வியை அவள் கேட்க, குருநாயகம் சிரிப்புடன் தலையசைத்தார் -

'பரவாயில்லை. விஷயத்தைச் சரியாய் கிரஹித்துக் கொண்டு விட்டாய்!' என்பது போல, பிறகு சொன்னார் -

"ஏன்னா அபர்ணா எம் மகள் இல்லை... எந்தங்கை பொண்ணு."

இப்போது கேட்டவளின் நெற்றி சுருங்கியது - குருநாயகம் விளக்கினார் - "எந்தங்கை பங்கஜா என்னை விட ஏழு வருஷத்துக்கு இளையவள். எங்கம்மாவும் இறந்தபிறகு பங்கஜாவை நாங்க கடுமையாய்ப் பார்த்தது கூட இல்லை. அப்படிப் பூவாய் வளர்த்த பெண்ணை நல்ல இடமாய்ப் பார்த்துத்தான் சேர்ப்பித்தோம். சந்தோஷமாய் வாழ்ந்தவ பிரசவத்துக்காக இங்கே வந்தா. வளைகாப்பு சமயம் அவ புருஷனும் அவன் வீட்டாரும் இங்க வந்திருக்க, யாரோ விஷயத்தை... விஷமாய் அவங்க காதில் ஊத்திட்டாங்க.

'பங்கஜா ஜமீனோட வைப்பாட்டி மகளா... ஐயோ!'ன்னு அலறுனவங்க காதிலே எங்க கெஞ்சல் ஏதும் ஏறலை. கண்ணாடி வளையல் போல நிமிஷமாய் அந்தச் சின்னப் பொண்ணோட சந்தோஷம் நொறுங்கிப் போச்சு. குழந்தை, அதான் அபர்ணா பிறந்து நாலு மாசமாகியும் புக்காத்துக்காரங்க வந்து பார்க்காத வேதனை... பங்கஜா... கிணத்துல விழுந்து... தற்கொலை பண்ணிகிட்டா..."

வருத்தமும் கோபமுமாய் அவர் முகத்தைச் செங்குழம்பாக்கியது... இவளுக்கும் நெஞ்சை அடைத்தாலும் புத்தி தெளிவானது. ஆக குருநாயகத்தின் வேதனைகள் இப்போது உக்கிரமாகக் கனிந்திருந்தன. பாட்டி சொல்வது போல,

'கோபமென்ன கொழுந்து வெற்றிலையா கிள்ளி எறிய?'



அது கொள்ளியாய் எரிகிறதுதான் - ஆனால் அக்கொள்ளி தன்னை, தன் வாழ்க்கையைப் பொசுக்கப் போகிறது. அந்தத் துக்கத்தூடே வருத்தமும் மிகக் கைகூப்பினாள்... விழிகள் கெஞ்சின-

"தப்புத்தான்... இந்தக் குடும்பம் செய்தது பாவகாரியம்தான்... ஆனால் தயைகூர்ந்து நீங்க மன்னிக்கணும். இந்தக் குடும்பத்தில் நீங்களும் ஒருத்தர்ங்கறதால் மனமிளகி மறந்திடணும்.."

ஆனால் உக்கிரத்தால் சிவந்த அம்முகம் இளகவில்லை... விழிகளின் சீற்றமும் கொப்பளித்த வியர்வையுமாய்ப் பயமுறுத்தியது.

கண்களை மூடி யோசித்தாள் -

"நான் விலகிடறேன்... அபர்ணா அவ அத்தானைக் கட்டிக்கட்டும்..."

அவர் கண்கள் இந்த எதிர்பாராத திருப்பத்தில் சற்று குழம்பிப் பின் இறுகின. "வந்து, தங்கி முழு பூஜையையும் செய்த பிறகு நீ இதைச் சொன்னால் எடுபடாதே..! சர்வஜித் உன்னிடம் ஃபோனிலே காதல் வசனமெல்லாம் பேசறானாம்? நீ இழைஞ்சு குழைஞ்சிட்டு இப்பக் கிளம்பறேன்னா... பிள்ளையைக் கிள்ளிட்டு தொட்டிலை ஆட்டறியேம்மா...! இப்ப நீ விலகினால் சர்வஜித் இன்னும் ஆத்திரமாய் உன்னைத் தேடுவான்... உருகுவான்... நீ இருக்கும்வரை வேறேதும் சாத்தியப்படாது... ஆகக் கிளம்பு..."

நா உலரக் கேட்டாள் - "எங்கே?"

"பங்கஜம் விழுந்த அதே கிணறுதான் - நீ அதில் விழுந்து தற்கொலை பண்ணிக்கறே... சிங்கமுகநாதர் பூஜையில் மஹா ப்ரீதியாகி உன்னை அவரிடமே அழைத்துக் கொண்டார்... அல்லது பங்கப்பட்ட பூஜையிலே சினந்து உன்னை அழிச்சுட்டார்... எப்படி வேணுமானாலும் கதை விட்டுக்கலாம்... கிளம்பு..."

"என்னை... என்னைக் கொன்னுட்டு நீங்க தப்ப மு... முடியுமா?"

"அது கொலையில்லையே... தற்கொலை! உன் பாட்டி வந்து உன் உடலை மட்டும் ஒப்பாரியோட எடுத்துட்டுப் போகட்டும்...

என்ன முழிக்கறே... நிலவறையின் சாவியைக் கொடு - கதவை உள்ளிருநதும் பூட்டலாம். பூட்டி, நாளைக்காலை வீடு உன்னைக் காணாது அல்லோலப்படும் போது மறுபடி ஜமீன் அறையிலேயே வச்சிடுவேன்... ஆக நீ எப்படி அரண்மனையை விட்டு வெளியேறினே என்பதே யாருக்கும் தெரியாது... எல்லாப் பழியும் சிங்கமுகநாதர் மேலதான்..."

பேசியபடியே கதவைப் பூட்டிச் சாவியை எடுத்துக் கொண்டார்.

"இங்கே எல்லாரும் உங்களிடம் இத்தனை பிரியமாய்... மரியாதையாய் இருக்கறப்ப... இது நம்பிக்கைத் துரோகம்..."

"வாயிளிக்கப் பேசி என்ன பிரயோஜனம் - திட்டட்டும், அடிக்கட்டும் - ஆனா மறுநிமிஷம் 'என்னடா தம்பி'ன்னு அணைக்கணும் - இவன் எங்க தம்பின்னு அறிமுகப்படுத்தணும் - அது முடியலியே... கூசுதே... அபர்ணாவை இந்த வீட்டு மருமகளாக்கிட்டா, 'இவர் எங்க சம்பந்தி'ன்னாவது சொல்லத்தானே வேணும்..?

"அபர்ணாவைத்தான் அவருக்கு முடி... முடிப்பாங்கன்னு என்ன நிச்சயம்?"

"நல்லா கறுக்காத்தான் கேட்கற... கிணத்திலேருந்து உன்னைப் பிணமாய் எடுத்ததுமே கலங்கிடுவாங்க... நான் கிளப்பாமலேயே தோஷம், சாபம்னு நூறு வதந்தி ஊரைச் சுற்றும்... வேற பெரிய இடத்துல பெண்ணைத் தர யோசிப்பாங்க! சிங்கமுக நாதரின் ப்ரீதி அபர்ணா இந்த மாளிகைக்கு மருமகளாகறதுதான்னு நானும் சமயம் பார்த்துச் சொன்னால்... பழம் நழுவிப் பாலில்..."

பேசியபடி தன் கையை இவளது மூக்கிற்கு முன்னதாக ஆட்டினார்.

அதிலிருந்தது என்ன...? ஏதோ மூலிகையின் வேரா?

சன்னமான மணம்தான். ஆனால் குமட்டியது... உடம்பு கனம் கூடியது போல ஒரு பிரமை...



"வா..." அவர் பிடித்து இழுக்க ஒரு மாதிரியாய் நகர்ந்தாள் -

இயல்பாய் நடக்கக் கூடவில்லை.

இப்படியே கூட்டிப் போய்க் கிணற்றில் தள்ளுவது அவருக்கு இனி மிக எளிது. மேனி முழுக்க வியர்வை கொப்பளித்து வழிந்தது...

"அவளை விடுங்கப்பா..." சற்றுச் சிரமத்துடன் பார்வையைக் குரல் வந்த திசைக்கு நகர்த்தினாள்.

அப்பாவிடம் பேசவே தயங்கும் அபர்ணாவா இப்படி உத்தரவிடுவது?

"நீ எங்கேடீ வந்தே... தூங்காம...? பாலைக் குடிக்கலையா?"

"குடிக்கலைப்பா... இன்னைக்குத்தான் சார்வரி இங்கே இருக்கப் போற கடைசி நாள். ஏதோ நடக்கப் போகுதுன்னு புரிஞ்சிடுச்சு... அதிலே தூக்கத்துக்குப் பொடி சேர்த்திருந்தீங்களா?"

"இப்ப என்ன நடக்கப் போகுதுன்னும் புரிஞ்சிடுச்சில்ல - வழியில நில்லாம விலகு..."

"கொலை செய்ற அளவுக்குத் துணிஞ்சிட்டீங்களாப்பா?"

பேசப் பொழுதில்லை என்பது போலக் கையிலிருந்த வேரை, அவர் மகளின் மூக்கிற்குக் கொண்டு போக, இலகுவாய் அதைத் தட்டி விட்டாள் அபர்ணா. கீழே சிதறியதைக் குனிந்து எடுத்துத் தன் கைக்குள் இறுக்கியபடி வழியை அடைத்தபடி நின்றாள்.

"புரியாம பேசாத. நீ ஆசைப்படற சர்வஜித்தோட உனக்குக் கல்யாணமாகணும்னா இதுதான் ஒரே வழி..."

"எது கொலையா? கல்யாணம் வம்ச விருத்திக்கு மாத்திரமல்ல, சந்தோஷ விருத்திக்கும்னு சொல்ற நீங்களா..."

"சொன்னேன்... நம்ம சந்தோஷம் விருத்தியாகணும்டீ, அபர்ணா. நீ ஜமீன்தாரிணியாய் இங்கே ஆட்சி பண்ணணும் - உம் மகனுக்கு அத்தனை சொத்தும் வரணும்..."

"காசு மட்டும் பாக்கறீங்க... அத்தான் மனசு எம்மேல இல்லையே. அவரு எங்கூடச் சந்தோஷமாய் வாழ்ந்திடுவாரா?

தனக்காகச் சம்பிரதாயத்தை மீறித் தன் வீட்டிலே வந்து தங்கி பூஜையெல்லாம் செய்த இந்தப் பொண்ணை மறந்துட்டு என்னை ஏற்றுக் கிடுவாரா?"

துக்கத்துடன் தலையசைத்தாள் -

"இவளை இழந்தால் அந்த துக்கம் அவருக்கு ஆறாதுப்பா... இவளைக் கொன்னுட்டு இந்த வீட்டு மருமகளான குற்ற உணர்வு என்னைக் காலமெல்லாம் குடைஞ்செடுக்கும்... பிறகெங்கே நாங்க சந்தோஷமாயிருக்கறது..."

"காலம் எல்லாவற்றையும் மாற்றும்... மறக்கடிக்கும்..."

"துன்பம், துக்கம் மங்கலாம் - ஆனால் கொலை செய்த பாவ உணர்வு மாறாது. அவரது காதலை, இவ உயிரை உறிஞ்சின நான் ஒரு ராத்திரி கூட முழுக்க தூங்க முடியாதுப்பா..."

அபர்ணா கத்தவில்லை... ஆனால் அவள் குரலில் அழுத்தமான சத்தியம் ரீங்கரித்தது.

"அதை அப்புறம் பார்க்கலாம்... இது போல மறுபடி ஒரு சந்தர்ப்பம் வாய்க்காது. அபர்ணா... விலகு."

"இந்த வேரை முகர்ந்துட்டு முதல்ல நான் கிணற்றுக்குள் குதிக்கறேன் - பிறகு உங்க இஷ்டம்..." அபர்ணா சுரங்க வழியே ஓடி மறைய, குருநாயகம் பதைத்தார் -

"முட்டாப் பொண்ணே... வேணாம்... இவளை விட்டுடறேன்..."

இருண்ட பகுதிக்குள்ளிருந்து ஆணை வந்தது - "கதவைத் திறந்து அவளை அரண்மனைக்குள்ளே அனுப்புங்க..."

அதன்படியே செய்தார் - குளிர் காற்று முகத்தில் பட்டதுமே பாதி உயிர் சார்வரிக்கு மீண்டது... வாயையும் திறந்து ஆர்வமாய் மூச்செடுத்தாள். முந்தானையால் முகம், மேனி துடைத்தாள் - அவள் கையில் பெரிய இரும்புச் சாவி திணிக்கப்பட்டிருந்தது - நிலவறைக் கதவை இழுத்துப் பூட்டினாள்.

வாசற்படியில் விட்டிருந்த டார்ச்சை எடுத்து, அதன் ஒளியில் நடந்தாள் - நடக்க நடக்கக் கைகாலின் இயக்கம் சற்று எளிதானது.



தன் பின்னே நிலவறைக் கதவு மீண்டும் திறக்கப்பட்ட சத்தம் கேட்டது. உடம்பெங்கும் பயத்தில் உறைந்தது.

ஓட ஆரம்பித்தாள் -

"நான்தான் சார்வரி..." அபர்ணாவின் மெல்லிய குரல்...

"இப்படி நீங்க தனியாய் வந்தது தப்பு சாரு... இது அசட்டுத் துணிச்சல்... ஆனால் இனிப் பயமில்லை..."

"நன்றி, அபர்ணா... நீ தப்பாய் ஏதும் செய்துடக் கூடாது..."

"தற்கொலையா... ஊஹூம்... எங்களை இப்படி அரண்மனை அருகேயே வாழ விட்டது ஜமீனின் தப்பு... ஒதுக்கி விட்டிருந்தால் அப்பாக்கு இத்தனை பேராசை வந்திருக்காது - நானும் அவரைப் பார்த்திருக்க நேர்ந்திராது..."

"நன்றி, அபர்ணா... உன் நேசத்தைக்கூட எனக்காய் விட்டுக் கொடுத்து..."

"அதெல்லாம் ஏதும் விடலையே... அது எனக்குள்ளே பத்திரமாய் இருக்கும். ஆனா உங்க வாழ்வில் இனிக் குறுக்கிட மாட்டேன்... அது நிச்சயம். உங்க அறையில் தங்கின இரவன்று எல்லாத்தையும் சொல்லிடணும்னு ஆசை... ஆனால் அப்பா சொல்படி நடிக்க வேண்டிய நிர்பந்தம். அதான் உங்களை பால்கனியைத் திறக்க வைத்து... சிங்க முக நாதர் என் கண்ணுக்குத் தெரியாதது போலப் பாவனை பண்ணினேன்..."

"ஆனா சர்வஜித்தை நீ நேசிக்கறது உன் முக பாவனைகளில் அன்று நான் புரிஞ்சுகிட்டேன்... அவரைப் பற்றிக் குறிப்பிட்டதுமே உன் முகம் பூப்போல மலர்ந்தது..."

"நீ பூப் போட்டு பூஜை பண்ணினதுக்கு பலனிருக்கும், சாரு. அந்த பூஜை விஷயமெல்லாம் அப்பா கட்டி விட்ட கதை. ஆனால் அது உங்களுக்கிடையே காதல் கனலை ஊதிப் பெருக்கிடுச்சு... இனி சிங்கமுகத்தை எல்லாம் மறந்திடு... அப்பா தயாரிச்ச இந்த மாற்றுச் சாவியை நான் கிணற்றுலே வீசிடுவேன்... நாங்களும் ஊரை விட்டுக்

கிளம்பிட... உனக்குக் குழப்பமே இராது.. இனி உன் சிருங்கார நாதர் வருவார்... பின் வரும் ஒவ்வொரு நாளும் சிருங்கார நாதம்தான்..."

இவள் கைகளை அழுத்தி விட்டுப் போய்விட்டாள், அபர்ணா.

கனத்த கதவு மூடிச் சாவி திருகப்படும் ஒலி அமானுஷ்யமாய்க் கேட்டது.

இத்தனையும் நிஜமா கனவா என்ற பிரமையில் இவள் நடந்தாள்.

"என்ன சார்வரி.. இங்கே இந்நேரம்..."

திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

கையில் டார்ச்சுடன் நின்றது சுரேந்தர்.

"இன்று சாப்பிடும் போது உன்முகம் சரியில்லை... அதான் மனம் கேளாமல் உன் அறைப் பக்கம் வந்தேன்.. நீயானால் இங்க..?"

"ஒன்னுமில்லை... சிருங்காத நாதர்... ஐயோ... நாதம்... ஒன்னுமில்லை.. படுங்க.."

குடுகுடுவென விரைபவளை ஒரு குழப்பப் புன்னகையுடன் பார்த்து நின்றான், சுரேந்தர்!